।। श्रीः ।।



# ஸ்ரீமத் ஆண்டவன் அனுக்ரஹம்

मणिपादुकयोर्युगं मुरारेः मम नित्यं विदधातु मङ्गलानि ।
अधिकृत्य चराचरस्य रक्षां अनुकम्पाक्षमयोरिवावतारः ।।

श्रुतिस्मृतीतिहासार्थसम्प्रदायप्रदर्शिनी ।
पादुका पत्रिका सेयं चिरं विजयतां भुवि ।।

भगवद्भक्तिजननी सदाचारप्रबोधिनी ।
तत्त्वज्ञानप्रदा चेयं भूयात् तत्त्वविदां मता ।।

श्रीरङ्गेशप्रिया सर्वचित्तानन्दप्रदायिनी ।
श्रीवैष्णवनिवासेषु सर्वदा विहरत्वसौ ।।

श्रीनिवासयतीशानदिव्यापाङ्गविवर्धिता ।
वर्धतां वेदवेदान्तरहस्यार्थप्रवर्षिणी ।।

# ஸ்ரீ ரங்கநாத பாதுகா
# விஷயஸூசிகை

**விரோதி ஹூ தை மீ**

**மலர் 47 இதழ் 10**

**JANUARY 2010**

SRIMATH ANDAVAN ASRAMAM Website www.andavan.org

*www.ramanujamission.org*

## உள்ளே. . . . . . . .

பக்கம்

*1. பஞ்சாங்க ஸங்க்ரஹம் .................................... 4*

*2. ஆச்ரமச் செய்திகள் ........................................ 8*

*3. ஸ்ரீமத் ஆண்டவன் அருள்மொழிகள் .................. 13*

*4. ஸ்ரீமதாண்டவனின் கைங்கர்யங்கள் ................... 21*

5. Kainkaryams of Sri H.H. ........................................ 27

*6. ஸ்ரீமத் ராமாயண உபந்யாஸம் ........................ 51*
*(ஸ்ரீ.உ.வே. நாட்டேரி கிடாம்பி ராஜகோபாலாசார்யர்) ...*

*7. கேள்வி–பதில் ............................................ 45*

*8. பாதுகை ஒரு தேவியாக? ................................ 51*

*9. பரமைகாந்திகளின் ஸ்வஸ்திவாசனம் ................ 61*

*10. ஸங்கல்ப ஸூர்யோதயம் ................................ 71*

*11. அர்த்தமுள்ள வைஷ்ணவம் ............................ 79*

*12. இடைகழி எம்பெருமான் ................................ 87*

13. MATRIMONIAL ........................................................ 95

15. மார்கழிமாத ஶுக்ல ஏகாதஶி .......................... 99

15. அவதூதரின் உபந்யாஸம் ............................... 105

16. துர்வாஸருக்கு ஔர்வ மர்ஷியின் சாபம் ............ 113

17. ஸாரதிகள் ................................................. 125

18. ருக்மிணி சரணாகதி ........................................ 117

19. HISTORY REPEATS ITSELF .................................... 131

20. மாதராசிபலன் ............................................. 138

21. அதிகரணஸாராவளி: .................................... 143
ஸ்ரீ.உ.வே.வேளியநல்லூர் நாராயணாசார்யர், திருப்பதி

22. ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம் ..................................... 151
ஸ்ரீ.உ.வே.நாவல்பாக்கம் கண்ணன் ஸ்வாமி, ஹைதராபாத்

23. WHY THIRUKUDANTHAI IS KNOWN AS
"BHASKARA KSHETRAM" ........................................ 159
(இந்த மாதம் இடம்பெறவில்லை.)

|| श्रीः ||

# பஞ்சாங்க ஸங்க்ரஹம்

*(வடுவூர் வீரவல்லி ஸ்ரீ.உ.வே. கனபாடி ஸ்ரீ தேசிகாசார்யர் ஸ்வாமி, ஸ்ரீகார்யம்)*

*விரோதி ஸு தை மீ உத்தராயணம்*

*1உ (14.1.2010) வியாழன், க்ருஷ்ண, சதுர்தசி 11.44, பூராடம் 55.56, மகர ரவி 22.06, பிற்பகல் 3.40 மணி- மாத ப்ரவேசம் - பொங்கல் பானை வைத்துப் பாகம் ஆனதும் பெருமாளுக்கு அமுது செய்வித்து ஸகுடும்பம் அமுது செய்தல் உசிதம்.*

*2உ (15.1.2010) வெள்ளி, அமா. 16.21, கனுப்பிடி, உத்தராடம் 60.00 சூர்ய க்ரஹணம் 11.15க்கு ஸ்பர்ஶம் - மத்யம் பிற்பகல் 1.22, மோக்ஷம் பிற்பகல் 3.10 மணிக்கு (ப்ரதமை திதி ஶ்ராத்தத்தை மறு தினத்தில் செய்ய வேண்டியது)*

*மாட்டுப் பொங்கல், அந்தந்த க்ராமாசாரப்படி செய்ய வேண்டியது - க்ரஹண காலத்தைத் தவிர்த்து இதர ஸமயங்களில் ஸௌகர்யப்படி செய்து கொள்ளலாம்.*

*3உ (16.1.2010) சனிக்கிழமை சுக்ல ப்ரதமை 21.28, உத்தராடம் 1.24, சந்த்ர தர்சனம் ஶ்ரவண வ்ரதம்.*

*4உ (17.1.2010) ஞாயிறு ஶுக்ல த்விதீயை 26.45, திருவோணம் 7.48, த்விதீயை திதி.*

*5உ (18.1.2010) திங்கள் - ஶுக்ல த்ருதீயை 31.53 அவிட்டம் 14.06, த்ருதீயை திதி.*

*9உ (21.1.2010) வெள்ளி - ஸப்தமி 43.26, ரேவதீ 31.38, ரத ஸப்தமி ஸ்ரீமத் சின்னாண்டவன் கைங்கர்யம்.*

*13ஃ (26.1.2010) செவ்வாய், ஏகாதஸி 35.37 ரோஹிணீ 30.41*

*14ஃ (27.1.2010) புதன், த்வாதஸி 31.13, மிருகஸீர்ஷம் 28.00, மஹாப்ரதோஷம்.*

*15ஃ (28.1.2010) வியாழன், த்ரயோ 26.13, திருவாதிரை 24.43, - த்ரயோதஸி திதி.*

*16ஃ (29.1.2010) வெள்ளி, சதுர்தஸி 20.45, புநர்வஸு 20.58, சதுர்த்தஸீ பௌர்ணமி திதி த்வயம்.*

*17ஃ (30.1.2010) சனி, பௌர்ணமி 14.59, பூசம் 16.56,*

*18ஃ (31.1.2010) ஞாயிறு, க்ருஷ்ண ப்ரதமை 9.08, ஆயில்யம் 12.10 த்விதீயை திருமழிசைப்பிரான்.*

*19ஃ (1.2.2010) திங்கள், த்விதீயை 3.25, த்ருதீயை 54.33, மகம் 8.52, த்ருதீயை திதி.*

*21ஃ (3.2.2010) புதன், பஞ்சமி 49.0, உத்தரம் 2.9, ஹஸ்தம் 57.33, பஞ்சமி, கூரத்தாழ்வான் திருநக்ஷத்ரம்.*

*23ஃ (5.2.2010) வெள்ளி ஸப்தமி 43.26. ஸ்வாதி 57.44, ஸப்தமி திஸ்ரோஷ்டகம்.*

*24ஃ (6.2.2010) சனி அஷ்டமி 42.19 விசாகம் 58.25 அஷ்டகா*

*25ஃ (7.2.2010) ஞாயிறு, நவமி 42.19 அநுஷம் 60 அந்வஷ்டகா.*

*27ஃ (9.2.2010) செவ்வாய் ஏகாதஸி 46.36 கேட்டை 3.43*

*28ஃ (10.2.2010) புதன் த்வாதஸீ 50.22, மூலம் 8.06.*

*29ஃ (11.2.2010) வியாழன், த்ரயோதஸி 55.4, பூராடம் 13.28, த்ரயோதஸி மஹாப்ரதோஷம்* பெரியாண்டவன் கைங்கர்யம்.

*30ஃ (12.2.2010) வெள்ளி சதுர்தஸீ 60, கும்ப ரவி 49.22, மகர க்ருஷ்ண சதுர்தஸி ஶ்ரவண வ்ரதம்.*

மாசி மாதம்

*1ஃ (13.2.2010) சதுர்தஸீ 0.14, ஶ்ரவணம் 25.56 விஷ்ணுபதி கும்ப அமாவாஸ்யை ஸர்வ அமாவஸ்யை. மாதப் பிறப்பு தர்ப்பணம்.*

|| श्रीः ||

*ஸ்ரீமதே ரங்கராமாநுஜ மஹாதேஶிகாய நம:*

# ஆச்ரமச் செய்திகள்

***ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் (ஸ்ரீமுஷ்ணம்) ஸ்ரீரங்கராமாநுஜ மஹாதேஶிகன் சென்னை ஆழ்வார்பேட்டை ஆச்ரமத்தில் திருமேனிபாங்காக எழுந்தருளியிருந்து கொண்டு (1.1.2010) ஸ்ரீ பெருமாள், ஸ்ரீ பூர்வாசார்ய பாதுகைகளின் திருவாராதனங்களைச் செவ்வனே நடத்திக் கொண்டு ஶிஷ்யர்களை அநுக்ரஹித்துக் கொண்டிருக்கிறபடி.***

***தநுர்மாத ஆராதனம் ப்ரதி தினம் விஶேஷமாக நடக்கிறது. ஸ்ரீ பாதுகா தீர்த்த கோஷ்டியில் அநேகம்பேர் அந்வயித்துத் தீர்த்த ப்ரஸாதாதிகளை ஸ்வீகரித்து க்ருதார்த்தர்கள் ஆகின்றனர்.***

***ஸ்ரீமத் ஆண்டவனை ஸேவித்து பல மந்த்ராக்ஷதையை ஸ்வீகரிக்க அநேகம் ஶிஷ்யர்கள், ப்ரதிபந்நர்கள் முக்யஸ்தர்கள் மிகுந்த பக்தி ஶ்ரத்தையுடன் வந்த வண்ணம் இருக்கின்றனர். ஸகல பேரையும் ஸ்ரீமத் ஆண்டவன் பரம க்ருபையுடன் வாத்ஸல்யத்தோடு அநுக்ரஹித்து ஹிதோபதேஶங்களையும் செய்தாகிறது. வழக்கம்போல் ஸமாஶ்ரயண பரந்யாஸங்கள் ப்ரதி தினம் செவ்வனே நடைபெறுகின்றன.*** **சென்னை ஆச்ரமத்திலிருந்து ஜனவரி 8ம் தேதி ஹைத்ராபாத் நோக்கி புறப்பட்டருளியாகிறது.**

## முந்தையச் செய்திகள்
## திருமலையில் மங்களாஶாஸனம்

***டிசம்பர் 6ம் தேதி சென்னை ஆழ்வார்பேட்டை ஆச்ரமத்திலிருந்து மத்யாஹ்னம் புறப்பட்டருளி, ஸ்ரீமத்***

ஆண்டவன் அன்று ஸாயம் ரேணிகுண்டாவிற்கு அருகில் இருக்கும், நம் ஆச்ரமத்துக்கச் சொந்தமான, ஸ்ரீ கல்யாண வேங்கடேசப் பெருமாள் ஸந்நிதியில் மங்களாஶாஸநம் செய்தாயிற்று. கோவில் விஸ்தரிப்பு, சீரமைப்புத் திருப்பணிகளைக் கடாக்ஷித்து நியமநங்களைச் செய்தருளியாயிற்று. அங்கிருந்து அன்று இரவு திருச்சானூர் ஆச்ரமத்திற்கு எழுந்தருளியாயிற்று.

மறுநாள் டிசம்பர் 7ம் தேதி, ஸ்ரீமத் ஆண்டவன் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினரின் விஶேஷ மடாதிபதிகளுக்குரிய இஸ்திகபால் மர்யாதையை ஸ்வீகரித்து திருச்சானூர் ஸந்நிதி வீதி ஜீயர் மட வாசலில் ஸ்ரீ பத்மாவதித் தாயாரின் ஸ்ரீ ஶடாரி மர்யாதைகளை ஏற்று தாயாரை மங்களாஶாஸநம் செய்தாயிற்று.

அன்று இரவு திருமலை ஆச்ரமத்திற்கு எழுந்தருளியாயிற்று.

டிசம்பர் 8ம் தேதி செவ்வாய்க்கிழமை ஸ்ரீமத் ஆண்டவன் சுமார் ஆயிரம் சிஷ்யர்களுடன் திருவேங்கடமுடையானை மங்களாஶாஸநம் செய்ய எழுந்தருளியாயிற்று. திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினர் உயர்ந்த மடாதிபதிகளுக்குரிய மர்யாதைகளை ஸமர்ப்பித்து ஸ்ரீமத் ஆண்டவனை எழுந்தருளப்பண்ணினர். சிறிய திருவடி அருகில் ஸ்ரீ திருவேங்கடமுடையானின் ஸ்ரீ ஶடாரி மர்யாதைகளை ஸ்வீகரித்து மங்களாஶாஸநம் செய்தாயிற்று. ஆசார்ய ஸார்வபௌமனையும், அகிலாண்ட கோடி ப்ரஹ்மாண்ட நாயகன் ஸ்ரீ திவேங்கடமுடையானையும் ஒருசேர சேர்த்தியில் (T.T.D. எண்ணிக்கைப்படி) 860 ஶிஷ்யர்கள் வரிசையாக, நிதானமாக இருந்து ஸேவித்து க்ருதார்த்தர்கள் ஆயினர்.

ஸ்ரீமத் ஆண்டவன் திருவேங்கடமுடையானிடம் பிரியாவிடைபெற்று கீழ் திருப்பதியில் சின்ன ஜீயர் மடத்திற்க, சின்ன ஜீயர் ப்ரார்த்தித்திருந்தபடி, எழுந்தருளியாயிற்று.

வானமாமலை ஜீயரும் அங்கு எழுந்தருளியிருந்தபடி. ஸ்ரீ வானமாமலை ஜீயர், சின்ன ஜீயர், இரு ஜீயர் ஸ்வாமிகளும் ஸ்ரீமத் ஆண்டவனை பரம ப்ரீதியுடன் எழுந்தருளப்பண்ணி வெகு நேரம் அத்யந்த ஸௌஹார்த்தத்துடன் மூன்று யதிவரர்களும் ஸம்பாஷித்தபடி.

டிசம்பர் 9ம் தேதி காலை ஸ்ரீ வானமாமலை ஜீயர் மடம் புதிய கட்டிடத்திற்கு எழுந்தருளி பொன்னடி சாற்றியபடி. அன்று மாலை திருச்சானூர் ஆச்ரமத்திற்கு எழுந்தருளியாயிற்று.

டிசம்பர் 10ம் தேதி காலை பாதுகாராதனம் செய்தருளி, திருப்பதி ஸ்ரீ கோவிந்தராஜப் பெருமாள் மங்களாஶாஸநத்திற்கு எழுந்தருளியாயிற்று.

T.T.Devasthanam அதிகாரிகள், அர்ச்சகர்கள் ஸ்ரீமத் ஆண்டவனை ஜீயர் மடம் வாசலிலிருந்து வரவேற்று, ஸ்ரீ பெருமாள் ஸ்ரீ ஶடாரி மர்யாதைகளை ஸமர்ப்பித்து ஸந்நிதிக்கு எழுந்தருளப் பண்ணினார்கள்.

மடாதிபதிகளுக்குரிய மர்யாதைகளுடன் ஸ்ரீ கோவிந்தராஜப் பெருமாள், மற்றும் ஸந்நிதிகளில் மங்களாஶாஸநம் நடைபெற்றது.

டிசம்பர் 11ம் தேதி வெள்ளிக்கிழமை மத்யாஹ்னம் ஸ்ரீ திருச்சானூர் தாயார் ஸந்நிதியில் திருமஞ்ஜனம் மங்களாஶாஸநம் செய்தாயிற்று.

Dec. 11ம் தேதி மாலை சென்னை ஆச்ரமத்திற்கு ஸ்ரீமத் ஆண்டவன் எழுந்தருளியாயிற்று.

Dec 13ம் தேதி, சென்னை ஆச்ரமத்தில் 108 ஶங்காபிஷேகம் அத்புதமாக நடைபெற்றது. சென்னை ஆச்ரமத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சக்ரத்தாழ்வார், ஸ்ரீ வராஹ நயினார், ஸ்ரீ அஷ்டலக்ஷ்ம்யதிஷ்டித ஸ்ரீநிவாஸர், ஸ்ரீ நரஸிம்ஹர் மூர்த்திகளுக்கு விஶேஷமாக திருமஞ்ஜனம்

நடந்தது. 250 பேருக்கு மேல் திருமஞ்ஜனம் உபயதாரர்கள் அந்வயித்தனர். திருமஞ்ஜனம் செய்யப்பட்ட ஸ்ரீ சக்ரத்தாழ்வார் விக்ரஹம் ப்ரஸாதமாக, ஸ்ரீமத் ஆண்டவன் திருக்கரங்களால் எல்லா உபயதாரர்க்கும் அநுக்ரஹிக்கப்பட்டது.

Dec. 14ம் தேதி மாலை சென்னை ஆச்ரமத்தில் வைணவன் குரல் மாதப் பத்ரிகையின் முதலாண்டு நிறைவு விழா நடந்தது. பத்ரிகையின் நிறுவன ஆசிரியர்கள் புது அக்ரஹாரம் ஸ்ரீ கல்யாணராமன், ஸ்ரீரங்கராஜன் இருவரும் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். ஸ்ரீ வானமாமலை ஜீயர் இந்த விழாவிற்கு எழுந்தருளினார். ஸ்ரீமத் ஆண்டவன், சிஷ்யர்களுடன், மிக்க ப்ரீதியுடன் வரவேற்றாயிற்று. விழாவின் சிறப்பு அம்ஶமாக, ஸ்ரீ வானமாமலை ஜீயர் அநுக்ரஹபாஷணம் செய்தாயிற்று. துவக்கத்தில் ஆசார்ய பரம்பரையை அநுஸந்தானம் செய்தபோது, ஸ்ரீமாந் வேங்கட, கவிதார்க்கிக ஸிம்ஹாய ச்லோகங்களையும் அநுஸந்தானம் செய்தாயிற்று. அனைவர்க்கும் பேரானந்தமாக இருந்தது. ஸ்ரீ ஜீயர் ஸ்வாமிகள் ஸ்ரீ ஸ்வாமிதேஶிகனின் ஹயக்ரீவ ஸ்தோத்ரத்தில் பல ச்லோகங்களை ஸரளமாக அநுஸந்தித்து உபந்யாஸம் செய்து, தாம் ஸ்ரீமத் ஆண்டவனிடம், பரஸ்பரம் அநுபவித்து வரும் பரம ஸௌஹார்த்தத்தை உத்ஸாஹத்துடன் உபந்யஸித்தாயிற்று.

ஸ்ரீமத் ஆண்டவனின் அநுக்ரஹபாஷணம் அத்யத்புதமாக இருந்தது. வைணவன் குரல் ஆசிரியர்களை விஶேஷமாக கடாக்ஷித்தாயிற்று. வைணவம் இந்த பரந்த உலகத்தின் மாநிதி. திருமாலிடம் பக்தி செய்வதே வைணவத்தின் ஸாரம். பக்தியை வளர்ப்பதுதான் நானிலத்திற்கு நலம் பயக்கும் என்ற கருத்தை மையமாக்கி ஸ்ரீமத் ஆண்டவன் பல அபூர்வ மேற்கோள்களுடன் அநுக்ரஹ பாஷணம் செய்தாயிற்று.

*முன்னதாக வைணவன் குரல் பத்ரிகையின் சார்பில் ஸ்ரீ உப்பிலியப்பன் கோயில், நவநீதம், ஸ்ரீ.உ.வே. வேதாந்த தேசிகாசார்யர், ஸ்ரீ* N.G. *கண்ணன், ஸ்ரீ.உ.வே.* V.N. *வேங்கட நாதன் ஸ்வாமி, ஸ்ரீ ரங்கராஜன் மற்றும் பலரும் பேசினர். வைணவக் குரல் பத்ரிகை, முழுக்க முழுக்க, ஸ்ரீமத் ஆண்டவனின் ப்ரத்யேக கடாக்ஷத்தினுல் துவக்கப்பட்டு, நடைபெறுகிறது. ''உலக வைணவர்கள் ஒரு குடையின் கீழ்'' என்ற குறிக்கோளுடன் நடத்தப்படுகிறது. மக்களின் பேராதரவு அவச்யம் என்ற கருத்தைப் பலரும் தெரிவித்தனர்.*

*16.12.2009 அன்று மயிலாப்பூர், சித்ர குளம், பஞ்சமுக ஆஞ்ஜநேயர் ஸந்நிதியில் 25ஆம் ஜயந்தி உத்ஸவத்திற்கு, நிர்வாஹிகளின், ப்ரார்த்தனையை ஏற்று ஸ்ரீமத் ஆண்டவன் எழுந்தருளியாயிற்று.*

*20.12.2009 அன்று சென்னை மயிலை, பலாத்தோப்பில் ஸ்ரீ பரகால மடத்தின் மண்டபத்திற்கு ஸ்ரீமத் ஆண்டவன் எழுந்தருளியாயிற்று. ஸ்ரீ பரகால ஜீயர் ஸ்ரீமத் ஆண்டவனை எழுந்தருளப்பண்ணி, ஶ்ரவண திருமஞ்ஜனமும், ஸ்ரீ ஹயக்ரீவ மங்களாஶாஸநமும் நடந்தது.*

*23.12.2009 அன்று வில்லிவாக்கம்* Padma Sarangapani Cultural Academy*க்கு ஸ்ரீமத் ஆண்டவன் எழுந்தருளியாயிற்று.*

*அங்கு ஸ்ரீமத் ஆண்டவன் பத்மபூஷன்* Dr. *பத்மா ஸுப்ரமணியத்தின் நாட்டியத்தொண்டைப் பாராட்டி ''பத்ம ஸாதனு'' என்ற பிருதை அளித்தாயிற்று. பத்மஸ்ரீ*T.H. *விநாயகம் கடம், அவர்களுக்கும் பத்மஸாதனு பிருதம் அநுக்ரஹித்தாயிற்று. அங்கு இசை நிகழ்ச்சிகளை கடாக்ஷித்தாயிற்று.*

## ஸ்ரீமத் ஆண்டவன் பொன்னடி

*1. நாவல்பாக்கம் ஸ்ரீ சேஷாத்ரி - திருமலை.*

*2. கடல்மங்கலம் ஸ்ரீ ஸௌந்தரராஜன் - திருச்சானூர்*

*3. திரு ரமணன், ஆழ்வார்பேட்டை*

*4. ஸ்ரீ S. ஜகந்நாதன், வில்லிவாக்கம்*

*5. ஸ்ரீ S. ரகுநாதன், வில்லிவாக்கம்*

*6. ஸ்ரீ ஸ்ரீராம், மந்தைவெளி.*

—★—

॥ श्रीः ॥

**ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்ரீ ரங்கராமாநுஜ மஹாதேசிகனின் 75வது திருநக்ஷத்ர ஸம்பூர்த்தி மஹோத்ஸவத்தின் ஒரு சிறப்பு அம்சமாக 14.6.2010 வைகாசி திருவாதிரை திருநக்ஷத்ரத்தன்று திருநக்ஷத்ர மலர் வெளியிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த கைங்கர்யத்தை முழுவதுமாக ''வைணவன் குரல்'' பத்ரிகையின் நிறுவன ஆசிரியர்கள் திரு கல்யாணராமன் திரு ரங்கராஜன் ஏற்றுள்ளனர். ஸ்ரீமத் ஆண்டவன் இவர்களை அனுக்ரஹித்தாயிற்று.**

**இந்த இருவருக்கும் இந்த மலர் வெளியீட்டிற்காக வித்வான்களும் ஶிஷ்யர்களும், அபிமானிகளும் ஒத்துழைப்பு தரவேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.**

**—ஸம்பாதகர்**

|| श्रीः ||

## பெரிய திருமொழி

### (11—2—8)

**மஞ்சுறு மாலிருஞ் சோலை நின்ற மணாளனார்**
**நெஞ்சம் நிறைகொண்டு போயினார் நினைகின்றிலர்**
**வெஞ்சு டர்போய் விடியாம லெவ்விடம் புக்கதோ?**
**நஞ்சு டலம்து யின்றால் நமக்கினி நல்லதே.**

*அருஞ் சொற் பொருள் :-* மஞ்சு = *மேகம்;* மணாளனார் = *தலைவன்;* நிறை = *மன அடக்கம்;* வெஞ்சுடர் = *சூரியன்;* நஞ்சு = *நைந்து (போலி) உடலம் = உடம்பு;* துயின்றால் = *அழிந்தால், இறந்தால்.*

### அவதாரிகை

*வயிற்றில் பிறந்தவனாலும் மார்பில் வளர்க்கப் பட்டவைகளாலும் ஒரு பயனுமில்லை. பல சொல்லிப் பயனில்லை. கைப் பற்றின கணவனுக்கே கண்ணோட்டமில்லை. எல்லாவற்றையும் விளக்கவல்ல ஞாலக் கண்ணும் இதுகாறும் தோன்றவில்லை. எனவே தேஹமானது ஶரீரம் என்னும்படியாக நைந்து இறந்தோமேயானால் அதுவே நமக்கு நன்மை பயப்பதாகும்'' என்று இப்பாட்டினால் தலைவி கூறுகின்றாள்.*

### கருத்துரை

*மேகங்கள் தங்குகின்ற திருமாலிருஞ்சோலை மலைமீது எழுந்தருளியுள்ள எம்பெருமான் என்னுடைய மனவடக்கத்தினைக் கைக் கொண்டு சென்றார். ஆயினும் என்நிலையை நினைக்காமலேயே உள்ளார். சூரியனானவன் அத்தமித்து விடியற்காலையில் உதயமாகாதவாறு எவ்விடத்தே போய்ப் புகுந்து கொண்டானோ? இவ்வாறாய நிலையில் என் தேஹமானது சிதிலமாய் அழியுமேயானால் நமக்கு நன்மை உண்டாகும்.*

**விளக்கவுரை**

**(மஞ்சுறு...................... மணாளனூர்)**

*ஒன்றில் ஒன்றி நின்றவர் இரண்டில் ஈடுபாடு கொள்ள முரண்டு நிற்பதேன்? ப்ராப்யமான வஸ்துக்களை மணாளர் விடலாமா? என்பது உட்கிடக்கை.*

**(நெஞ்சம் நிறை....................நினைகின்றலர்)**

*என் நெஞ்சினையும் அது கொண்டிருந்த அடக்கத்தினையும் ஒன்று சேரக் கொண்டு போனூர் அவர். ஆயினும் என்நிலையை எண்ணினூர் இலர். என் மனம் அவரிடமிருந்தாலும் அவரையே நினைக்கக் காரணமாயிற்று.*

**(வெஞ்சுடர்........................புக்கதோ?)**

*அவன் கை விட்டபடியால் அவன் பரிகரமும் கைவிட்டது. அவன் என்னைப் பார்த்தால் அது தானே வருமே ! அது வராத காரணத்தால் அவன் அருள் நோக்கினுல் என்னை நோக்கிற்றிலன்.* भीषोदेति सूर्यः *என்றிருக்க வேண்டிய அவன் ஆணை வேறுவிதமாக மாறியதோ ! அதனுல்தான் அவன் உதிக்கவில்லையென்று துன்புறுகின்றுள்.*

**(நஞ்சுடலம்.....................நல்லதே)**

*அவன் பிரிவால் ஆற்றுமை மீதூரவும், அவனுடைய பரிகரங்களும், பாதகங்களாய் நிற்கவும் எனக்கு இன்பம் பயப்பது சாக்காடே என்று கூறினுள்.*

॥ श्रीः ॥

**பண்டைய பாரதத்தின் நம் முன்னோர்கள் குறையறு முறையுறு முழுமதித் திறனைத் தெரிந்து தெளிவோம், வாரீர் பாரீர் பாரீர்**

॥ ग्रह सङ्ग्रहः ॥

अथर्वाणं नमस्कृत्य उवाच भगवान् ऋषिः ।
कीदृशाः ग्रहपुत्राश्च कियन्तो वा वदस्व मे ॥

*ஶௌனக மஹர்ஷியானவர் அதர்வா என்றழைக்கப்படும் முனிவரை வணங்கி ''க்ரஹ புத்ரர்கள் எப்படிப்பட்டவர்கள்; எவ்வளவு பேர் என்பதை அடியேனுக்குக் கூறியருள வேண்டும்'' என்று கூறினார். (ஒவ்வொரு க்ரஹத்தையும் சார்ந்த உபக்ரஹங்கள் க்ரஹ புத்ரர்கள் என்றழைக்கப்படுகின்றன).*

**முக்யமான குறிப்பு** *:- ஸமீபத்தில் பூமியைவிடப் பெரியதும் அதிகமான தண்ணீரைக் கொண்டதும் பூமியைச் சார்ந்ததுமான* G.J. 1214 *என்ற உபக்ரஹத்தைக் கண்டு பிடித்துள்ளதாக அமெரிக்க விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம்முன்னோர்கள் ஒவ்வொரு க்ரஹத்துக்கும் உரிய உபக்ரஹங்களை க்ரஹ புத்ரர்கள் என்று கூறி அவற்றின் இயல்பினையும் எண்ணிக்கையையும் கூறியிருப்பதை நாம் நன்கு தெரிந்து கொண்டு பெருமகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்ள வேண்டும்).*

पृष्टस्स शौनकेनाऽथ ब्राह्मणानां हिताय वै ।
संख्यामुवाच भगवान् पद्मयोनिमतं यथा ॥

*இவ்வாறு ஶௌநகரால் வேண்டிக் கொள்ளப்பட்ட அதர்வா என்பவர் ப்ராஹ்மணர்களின் நன்மைக்காக பிரமனின் மதத்தின்படியே ஷை கூறியவற்றின் எண்ணிக்கையைக் கூறலானார்.*

दिक्चारिणो दिविचराः भूचरा व्योमचारिणः ।
दिवाचराः रात्रिचरा दिवारात्रिचराश्च ये ॥

पृथक् चराश्च ये तत्र ये च स्युः संघचारिणः ।
चरन्त्यपरवीथीषु ये च विभ्रान्तमण्डलाः ॥

ते ग्रहाः सङ्क्षेपेणाहं शतशोऽथ सहस्रशः ।
अनेकविधसंस्थानं प्रवक्ष्याम्यानुपूर्वशः ॥

*(ஆகாயத்தில்) அந்தந்த திசைகளில் ஸஞ்சரிப்பவைகளும் ஆகாயத்தில் ஸஞ்சரிப்பவையும் பூமியைச் சேர்ந்த மண்டலத்தில் ஸஞ்சரிப்பவையும் வ்யோமம் என்ற பாகத்தில் ஸஞ்சரிப்பவைகளும், பகலில் ஸஞ்சரிப்பவைகளும், இரவில் ஸஞ்சரிப்பவைகுளும், இரவிலும் பகலிலும் ஸஞ்சரிப்பவைகளும், தனியாகச் ஸஞ்சரிப்பவைகளும் கூட்டமாக ஸஞ்சரிப்பவைகளும், ஆகாயத்தில் அபரவீதிகளில் ஸஞ்சரிப்பவைகளும், மண்டலத்தை விட்டு வேறு மண்டலத்தில் ப்ரமித்துச் செல்பவைகளாயும் எந்தெந்த க்ரஹங்கள் நூற்றுக் கணக்கிலும் ஆயிரக் கணக்கிலும் அனேகவிதமான ஸ்வரூபத்தை உடையனவாக உள்ளனவோ அவற்றைச் சுருக்கமாக முறைப்படி கூறுகின்றேன். (கேட்பாயாக).*

गोक्षीर कुमुद प्रख्यास्तीव्रेण वपुषाऽन्विताः ।
चरन्त्यन्तरवीथीषु स्निग्धाः विपुलतेजसः ॥

एते विसर्पका नाम अर्चिष्मन्तो महाप्रभाः ।
विज्ञेयाश्चतुरशीतिः शुक्रपुत्रा महाग्रहाः ॥

*ஆவின் பால் போலவும் ஆம்பல் மலர் போலவும் நிறங் கொண்டவைகளாயும் தீவ்ரமான தேஹத்தை உடையவைகளாயும் வழவழப்பானவையாயும் அதிக ஒளியை உடையவைகளாயும் அந்தர வீதிகளில்*

***ஸஞ்சரிக்கின்றவைகளாயும் விஸர்பகம் என்ற பெயருடையவைகளாயும் ஜ்வாலையும் பேரொளியும் கொண்டவைகளாயும் 84 பெரிய உபக்ரஹங்கள் சுக்ர புத்ரர்கள் என்று அறியத் தக்கவைகள். (தொடரும்)***

## சமஷ்டி உபநயனம் - 25-02-2010.

*நிகழும் விரோதி ஹூ மாசி மீ 13ம் தேதி (25-02-2010) வியாழக்கிழமை புனர்வசு நக்ஷத்திரத்தில் காலை 08-45 மணி 09-20 மணிக்குள் சமஷ்டி உபநயனம் ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன்* **H H** *ஸ்ரீரங்கராமனுஜ மஹாதேசிகன் அனுக்ரஹத்துடன் ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆஸ்ரம், புது எண் 31, ஸ்ரீதேசிகாச்சாரி சாலை, மைலாப்பூரில் நடைபெறுகிறது. இதற்கான விண்ணப்பங்கள் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விவரங்களுக்கு தொலைபேசி எண்; 044 24993658 or 044 42106776 என்ற எண்ணுக்கு தொடர்பு கொள்ளவும்.*

**|| श्रीः ||**

***ஸ்ரீமதே ரங்கராமாநுஜ மஹாதேஶிகாய நம:***

**ஸ்ரீ ஆண்டாள் திருப்பாவை மஹோத்ஸவ ஸபா**
**20வது வார்ஷிக திருப்பாவை மஹோத்ஸவம்**

**ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆண்டுதோறும் நடைபெறும் திருப்பாவை மஹோத்ஸவம் 29.1.2010 வெள்ளி பிற்பகல் 2.30 மணிக்குத் தொடங்கி 01.02.2010 திங்கள் நண்பகல் 12.00 மணியுடன் முடிவடைகிறது.**

**18 வித்வான்களில் உபந்யாஸம் மற்றும் 3 இசை நிகழ்ச்சிகளுடன் நடைபெறும் இந்த வைபவத்தில் ஆஸ்திக அன்பர்கள் கலந்து கொள்ளுமாறு ப்ரார்த்திக்கப்படுகிறார்கள்.**

***தாஸன்***

**கல்யாணபுரம்** R. **ஆராவமுதன்,**

***செயலாளர், கோவை.***

|| ஶ்ரீ: ||

ஸ்ரீமதே ரங்கராமாநுஜ மஹாதேஶிகாய நம:

எம்பார் நூற்றாண்டு விழாவில்

# ஸ்ரீமதாண்டவனின் அனுக்ரஹ பாஷணம்

கடந்த 28.11.2009 மாலை நாரதகான ஸபா அரங்கில் ஸ்ரீமதாண்டவன் ஆத்யக்ஷயத்தில் நடைபெற்ற எம்பார் விஜயராகவாசார்யார் நூற்றாண்டு விழாவில் அனைவரையும் மிகவும் கவர்ந்தது ஸ்ரீமதாண்டவனின் அநுக்ரஹபாஷணம் என்பதை சொல்லவும் வேண்டுமா?

அந்நிகழ்ச்சியில் பங்கு பெறும் வாய்ப்பு இல்லாதவர்களக்காக எம் ஆண்டவனின் அனுக்ரஹ பாஷணத்தின் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

ஷண்முகப்ரியா ராகத்தில் ஸ்ரீமதாண்டவன் அனுயாசமாகப் பாடியது அரங்கில் இருந்து அனைவரையும் வியப்பும் பரவசமும் அடையச் செய்தது. ஹரிகதையை முதலில் நிகழ்த்தியது பரமேஶ்வரன் என்றும், அடுத்து ஹரிகதை நிகழ்த்தியவர்கள் லவகுசர்கள் என எம் ஆண்டவன ஸாதித்ததை அனைவரும் வெகுவாக ரஸித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் நமது ஆச்ரம ஆஸ்தான ஹரிகதா வித்வான் கலைமாமணி கல்யாணபுரம் ஆராவமுதாசார்யாருக்கு ''ஹரிகதா ரத்னம்'' என்ற விருதையும் ஆன்மீகத்தை வளர்ப்பதில் அயராமல் ஈடுபடும் நாரதகான ஸபா கார்யதர்சி R. க்ருஷ்ண ஸ்வாமிக்கு ''ஸநாதன தர்ம ஸேவாநிரத:'' என்ற விருதையும் ஸ்ரீமதாண்டவன் அனுக்ரஹித்தபடி.

## திரு A. சிவசைலத்துக்கு ஸ்ரீமதாண்டவன் அனுக்ரஹம்

அமல்கமேஷன்ஸ் சேர்மன் திரு A. சிவசைலத்தின் மனைவி மறைந்த முதலாம் ஆண்டு நினைவு நாளையொட்டி நமது ஆச்ரத்தில் அக்கரை ஸஹோதரிகள் (சுப்பு லக்ஷ்மி, ஸ்வர்ணலதா) வயலின் இசை நிகழ்ச்சி நடந்தது.

அப்போது திரு சிவசைலம் ஸ்ரீமதாண்டவனை தெண்டன் ஸமர்ப்பித்து அனுக்ரஹம் பெற்றார்.

॥ श्रीः ॥

## ஓரியண்டல் கல்வியின் சிறப்பும், 43ஆம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கரின் கீர்த்தியும்''

## ஸ்ரீ 43ம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கரின் திருநக்ஷத்ர வைபவத்தில் ஸ்ரீமத் ஆண்டவன் அருளியது.

*அஹோபில மடம் ஓரியண்டல் பள்ளிகளின் ஸ்தாபகரான ஸ்ரீ வீரராகவ யதீந்த்ர மஹாதேசிகன் (43ம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கர்) திருநக்ஷத்ரம் (கார்த்திகை, பூராடம்) 21.11.2009 அன்று மேற்கு மாம்பலம் ஸ்ரீ அஹோபில மடம் ஓரியண்டல் மேல்நிலை பள்ளியில் வெகு விமர்சையாக ஸ்ரீமத் ஆண்டவனின் ஆத்யக்ஷத்தில் நடைபெற்றது.*

*ஸ்ரீமத் ஆண்டவனின் சிறப்புரை :– கல்வியின்சிறப்பானது அதை கற்கவும் முடியும், கற்பிக்கவும் முடியும். மனிதர்களால் மட்டுமே செய்ய முடிந்த சிறந்த செயல் இதுவாகும். முதன் முதலில் பட்டமளிக்கப்பட்டதே வேத புருஷனால்தான். நாம் கற்பவற்றை கசடறக் கற்று, பின் அதற்குத் தகுந்தாற்போல் நடக்க வேண்டும். பண்டைய நாட்களில் கல்வி கற்றவர்கள் தவறு ஏதும் செய்யாமல் நற்பெயருடனும், நற்பண்புகளுடனும் திகழ்ந்தனர். கல்வி ஒன்றே மனிதனை முழுமையடையச் செய்கிறது. இப்பள்ளியை நிறுவிய 43ம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கர் உயர்ந்த யதிவரர் அவர் கல்வியை மட்டுமின்றி ஆன்மிகத்தையும் போதிப்பதற்காகப் பல இடங்களில் பாடசாலைகளை நிறுவினர். அவற்றில் மாம்பலம் ஸ்ரீ அஹோபில மடம் ஓரியண்டல் பள்ளியானது மிகவும் சிறப்புடன் விளங்குகிறது. மழை நீர் எல்லா இடங்களிலும் விழுந்தாலும், குறிப்பிட்ட பகுதியில் மட்டுமே முத்தானது அந்நீரை, உள்வாங்கி உருவாகிறது. அதுபோல் மிக சிறப்புடன் இந்தப் பள்ளியின் செயலர் டாக்டர் திரு என்.வி. வாஸுதேவாசார்யர் அவர்கள் பள்ளியை நிர்வஹித்து,*

நடத்தி வருகிறார். மாணவர்கள் நன்கு படிக்க வேண்டும். பெற்றோர்கள் வேத வகுப்புகளுக்குக் குழந்தைகளைத் தவறாமல் அனுப்பிவைத்து, ஒத்துழைக்க வேண்டும். ஸேவை மனப்பான்மையுடன் குழந்தைகளுக்கு அறிவையும், ஞானத்தையும் புகட்ட வேண்டி 43ம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கரின் மனோரதத்தைப் பூரணமாகப் பூர்த்தி செய்யும் வகையில், வேதம் மற்றும் பள்ளிக் கல்வியை இப்பள்ளி கற்பிக்கிறது. மாணவர்கள் ''இப்பள்ளியில் படித்தமைக்கு நான் பெருமையடைகிறேன்; இப்பள்ளிக்கு நான் என்ன செய்யக் கூடும்'' என்று தங்களைத் தாங்களே கேட்டுக் கொண்டு,தங்களாலியன்ற உதவியைப் பள்ளிக்குச் செய்ய வேண்டும். மாணவர்கள் விளையாட மட்டும் கூடிப் பழகாமல், தாங்கள் கற்றவற்றை நினைவு கூரவும், கூடி விவாதிக்கவும், கலந்து பேச வேண்டும்.உயிரோட்டமுள்ள கல்வியைப் பெற வேண்டும். நல்ல பண்புகளைப் பயின்று வளர்த்துக் கொள்ளவேண்டும். பல தியாகங்களைச் செய்து, வேதம் வளர அரும் பாடுபட்ட இப்பள்ளியின் ஸ்தாபகர் 43ம் பட்டம் தேவனார்விளாகம் ஸ்ரீமதழகியசிங்கரின் ஆசியுடன் பள்ளி மேன்மேலும் தழைத்தோங்க வேண்டும் என ஸ்ரீமதாண்டவன் ஆசீர்வதித்தார்.

மார்ச் 2009ல் நடைபெற்ற மேல்நிலை பள்ளி தேர்வில் மாநில அளவில் வணிகவியல், ஸமஸ்க்ருதம் மற்றும் கணக்கியல் பாடங்களில் Rank பெற்றுத் தந்தமைக்காக உதவி தலைமையாசிரியர் திரு. எஸ். சேஷாத்ரி, திருமதி டி.என்.ஜெயா மற்றும் திருமதி எச்.லதா ஆகிய ஆசிரியர்களுக்கு தலா ரூ. 1,500/-ம், மற்றும் இம்மூன்று பாடங்களிலும் மாநில அளவில் மூன்றாவது Rank பெற்ற மாணவி ஸௌ.யூ. ஆர்த்திக்கு, ஆண்டவன் ஸ்வாமிகள் தனது திருக்கரங்களினால் பரிசுகள் வழங்கினார். ஸ்ரீமத் ஆண்டவன் Endowment ஆக ஸ்ரீ ஆர்.ராஜகோபாலாசார்யர் (Eyetex) மூலம் அனுக்ரஹித்த ரூ. 3000/- பரிசை தலா ரூபாய் ஆயிரமாக, தயாபதகம் ஒப்புவித்தல் போட்டியில் வெற்றி

பெற்ற மூன்று பெயர்ளுக்குத் தாமே வழங்கினார். மேலும் வேத வித்யார்த்திகள் மற்றும்வேத, ப்ரபந்த ஆசிரியர்களுக்கும் பரிசுகளை தமது திருக்கரத்தால் வழங்கினார். ஸ்ரீமதாண்டவன் ரூ. 5,000/-த்தை Endowment ஆக வழங்கினார்.

முன்னதாக பள்ளிக் கமிட்டி தலைவர் திரு என். வெங்கட ஸுப்ரமணியன் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். விழாவிற்கு தலைமை தாங்கிய திரு.எம்.எஸ். சுந்தரராஜன், சேர்மேன், இந்தியன் வங்கி மாணவர்களுக்கு ஒழுக்கம் மிகவும் முக்யம் என்று தமது உரையில் வலியுறுத்தினார். போட்டியில் வெற்றிப் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். சிறப்பு விருந்தினரான திரு. ஏ. ஸ்ரீநிவாஸன், Deputy General Manager, Indian Bank அவர்களும் மாணவர்கள் மனது வைத்தால் எதையும் ஸாதிக்க முடியும் என்று உரைத்தார்.பல்வேறு போட்டிகளில் வெற்றிப் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை தலைமை விருந்தினர்கள் வழங்கிடனர்.

அஹோபில மடம் ஸம்ஸ்க்ருத வித்யா அபிவர்த்தினி ஸபாவின் தலைவர் திரு. எம்.கே. ராஜன், F.C.A. Chartered Accountnt ப்ரபந்தப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு ரொக்கப் பரிசுகளும் மற்றும் பரிசு புத்தகங்களும் மொத்தம் ரூ. 51,720க்கு வழங்கினார். (இவர் பல வருடங்களாக 150 மணவ, மாணவிகளுக்கு ரூ. 100/- வீதம் வழங்கி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது).

ப்ரவசன திலகம், தாமல், ஸ்ரீ ராமக்ருஷ்ணன் 43ஆம் பட்டம் ஸ்ரீ வீரராகவ ஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகன் ஸ்வாமியைப் பற்றி, ஆசார்ய பக்தி என்ற தலைப்பில் சிறப்புற உபந்யாஸம் செய்தார்.

பள்ளியின் உதவி தலைமை ஆசிரியர் திரு.எஸ். சேஷாத்ரி, மற்றும் முதுகலை ஸம்ஸ்க்ருத ஆசிரியை டாக்டர் திருமதி டி.என். ஜெயா அவர்களும் நன்றியுரை வழங்கினர்.

பள்ளிச் செயலாளர்

ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் அருளிய

# ஸ்ரீமத் ராமாயண உபந்யாஸம்

**அத ராம: ச ஸீதா ச லக்ஷ்மண: ச க்ருதாஞ்ஜலி: ।**

**உபஸங்க்ருஹ்ய ராஜாநம் சக்ரு: தீநா: ப்ரதக்ஷிணம் ॥**
***(2.40.1)***

**தம் சாபி ஸமநுஜ்ஞாப்ய தர்மஜ்ஞ: ஸஹ ஸீதயா ।**
**ராகவ: ஶோகஸம்மூட: ஜநநீம் அப்யவாதயத் ॥** ***(2.40.2)***

*சக்ரவர்த்தித் திருமகன், இளைய பெருமாள் பிராட்டி, மூணுபேரும் ப்ரதக்ஷிணம் பண்ணி நமஸ்காரம் பண்ணி, கையைக் கூப்பிண்டு நிந்தாளாம். தாயாரை ஸேவிச்சாளாம்.*

**ரதமாரோஹ பத்ரம் தே ராஜபுத்ர மஹாயஶ: ।**
**க்ஷிப்ரம் த்வாம் ப்ராபயிஷ்யாமி யத்ரமாம் ராம வக்ஷ்யஸே ॥**

*ஸுமந்த்ரர் ரதத்தை ஸித்தமாக நிறுத்தினுர்.*

**தம் ரதம் ஸூர்ய ஸங்காஶம் ஸீதா ஹ்ருஷ்டேந சேதஸா ।**
**ஆருரோஹ வராரோஹா க்ருத்வாலங்காரம் ஆத்மந: ॥**

*அந்த ரதம் ஸூர்யன் போல ப்ரகாஶிக்கறதாம். ஸீதை முதல்ல ஸந்தோஷத்தோட ஏறி உட்கார்ந்தாளாம். பிறகு ப்ராதாக்கள் ரெண்டுபேரும் ஏறி உட்கார்ந்தா. ஜனங்கள்ளாம் அழுரு.*

*ரதத்தை ஸுமந்த்ரர் விட ஆரம்பிச்சார். அரண்மனையை விட்டுப் புறப்பட்டுப் போருளாம்.*

*பிராட்டி முதல்ல ரதத்துல உட்கார்ந்தாளாம். அப்பறம் ராம லக்ஷ்மணுள் உட்கார்ந்தாளாம்.*

*யாத்ரைக்குப் போகச்சே கார்ல எப்படி உட்காரரதுன்னு வால்மீகி சொல்லிக் கொடுக்கருர். போகச்சே கல்யாணம் கார்த்தி அசலூருக்குப் போகச்சே*

யார் முதல்ல உட்காரரதுன்னு, புருஷன்தான் திடீர்னு உட்காரரு. ஸ்த்ரீகள் உட்கார்ந்த அப்பறம்தான் உட்காரணுமாம். ஸுகமாக போய்ட்டு நல்ல மங்களத்தோட வரலாம்ங்கற ஶாஸ்த்ரத்தையும் காண்பிக்கறூர். அவாதான் (ஸ்த்ரீகள்தான்) முதல்ல உட்காரரு. (சபையில் சிரிப்பொலி) இருந்தாலும் சொல்லி வெச்சேன்.

**ஸம்யச்ச வாஜிநாம் ரஶ்மீந் ஸூத யாஹி ஶநை: ஶநை: ।**
**முகம் த்ரக்ஷ்யாம ராமஸ்ய துர்தர்ஶோ நோ பவிஷ்யதி ॥**

*(2.40.2)*

ஜனங்கள்ளாம் அழறு. ரதம் போறதாம். ரதத்தைப் பிடிச்சுண்டு ஜனங்கள்ளாம் போறதாம். ‘ஸுமந்த்ரரே ! மெதுவா ஓட்டுங்காணும், **ஸம்யச்ச வாஜிநாம் ரஶ்மீந் ஸூத யாஹி ஶநை: ஶநை: ।** கடிவாளத்தை இழுத்தும் பிடியுங்கணும். ரொம்ப வேகமாப்போகாதேயும். **யாஹி ஶநை: ஶநை:** - மெல்லப் போங்கறு.

**முகம் த்ரக்ஷ்யாம ராமஸ்ய, துர்தர்ஶம் ந: பவிஷ்யதி**

ராமனுடைய முகத்தைப் பார்ப்போம். அப்பறம் எங்கணும்னு காணப் போறேம். எத்தனை நாள் கழிச்சுப் பார்க்கப் போறேம். இருக்கமோ இல்லையோ?

**ஆயஸம் ஹ்ருதயம் நூநம் ராமமாதுரஸம்ஶயம் ।**
**யத் தேவகர்ப்ப ப்ரதிமே வநம் யாதி ந பித்யதே ॥** *(2.40-23)*

தாயார் கௌஸல்யையா இருக்கட்டும். கைகேயியா இருக்கட்டும். என்ன மனஸு இரும்போ தெரியல்லியே ! இப்படிப்பட்ட ஸுகுமாரமான புத்ரன் காட்டுக்குப் போகச்சே சட்டுனு மூச்சுப் போகாம இருக்காளே.

**க்ருத க்ருத்யா ஹி வைதேஹீ சாயே வாऽநுகதா பதிம் ।**

ஸீதைதான் ரொம்ப பாக்யம் பண்ணவள்.

*மநுஷ்யனைத் தொடர்ந்து நிழல் போறுப் போல ராமனேடையே ஸீதை போகிறுளே. அவதான் அதிர்ஷ்டம் பண்ணவள்.*

**ந ஜஹாதி ரதா தர்மே மேரும் அர்க்கப்ரபா யதா ।** *(2.40-24)*

*ஜானகி ஒருக்காலும் ராமனைவிடமாட்டாள். மேரு பர்வதத்தை ஸுர்யனுடைய வெளிச்சம் விடறதில்லையாம். ஸுர்யப்ரபைன்னுர் - ஸுர்யப்ரபைன்னு கோயிலுடைய வாஹநம் இல்ல. ஸுர்யனுடைய ஒளின்னுர். ஸுர்யப்ரபைன்னு வாஹநம் உண்டு எங்க ஊர்ல. இந்தப் பக்கம் ப்ரபையைத் திருப்பினு சூர்யப்ரபை. அந்த ப்ரபையையே அந்தப் பக்கம் திருப்பினு சந்த்ரப்ரபை.*

*ஸுர்யனுடைய வெளிச்சம் மேரு பர்வதத்தை விடறதே இல்லையாம். மேரு பர்வதத்தை ஸுர்யன் ப்ரதக்ஷிணம் பண்றபடியாலே, மேரு பர்வதத்துல ஸுர்யனுடைய ப்ரபை இல்லாத நாளே கிடையாது. இந்த பக்கம் இல்லாத போனுலும் வெளிச்சம் அந்தப்பக்கத்துலயாவது இருக்கும்.*

*அதைப் போல ராமனைவிட்டு இருக்கமாட்டாள் ஸீதை.*

**அஹோ லக்ஷ்மண ஸித்தார்த்த: ஸததம் ப்ரியவாதிநம் ।**
**ப்ராதரம் தேவஸங்காஶம் யஸ்த்வம் பரிசரிஷ்யஸி ॥** *(2.40-25)*

*லக்ஷ்மணு மஹாபாக்யவான்டா நீ ! கூடப் போற ! தேவனுக்கு ஸமானமான ராமனை எப்போதும் கைங்கர்யம் பண்ணப் போற. மஹாபாக்யவான்.*

**ப்ரியவாதிநம்** *- நீ கைங்கர்யம் பண்ணச்சே ஒரு வார்த்தை சொல்வான் ராமன், குதிரைகள் ஆறுமைல் எட்டு மைல் பத்துமைல் ஓடினு நிறுத்தினவுடனே அந்த முதுகுல தட்டினு ஓடின ஶ்ரமமெல்லாம் போயிடுமாம். அது தத்வம் அதுக்கு. அது ஒரு ஸந்தோஷம் அதுக்கு. எல்லாத்தையும்*

மறக்கறதுக்கு. இவ்வளோ கைங்கர்யம் பண்ணுனே. லக்ஷ்மணு ! ஆச்சர்யம்டா உன்னுடைய கைங்கர்யம், என்னுடைய தம்பியைப் போல எங்கயும் இல்ல ன்னு எல்லாம் மறந்துபூடுமாம்.

நாசமாப்போன மூஞ்சியைப் பாரு. உன் மூஞ்சியைப் போலத்தான் தளிகையும் இருக்கும்னுக்க அவளுக்கு என்னமா இருக்கும்?

நன்னு இல்லாப்போனலும் ஸ்தோத்ரம் பண்ணனும். அதான் ஸந்தோஷப்படுவா. ப்ரியவாதிநம்னுர் ராமனே. எப்போதும் ப்ரியத்தைத் தவிர அப்ரியமா பேசறதுக்கே தெரியாதுன்னுட்டார்.

**மஹத்யேஷா ஹி தே புத்தி: ஏஷ சாப்யுதயோ மஹாந் ।**
**ஏஷ ஸ்வர்கஸ்ய மார்க்க: ச யதேநம் அநுகச்சதி ॥** *(2.40-26)*

லக்ஷ்மணு! உனக்கு பெரிய ஐச்வர்யம்டா. ராம கைங்கர்யம்ன்றதான ஐச்வர்யம். இதைக் காட்டிலும் ச்ரேயஸ்ஸான மார்க்கம் கிடையாது. ராமனுடயதான கைங்கர்யம் மோக்ஷத்துக்கு மார்க்கம்.

இப்படியாக அழுதுகொண்டே - ஜனங்கள்ளாம் பின்னுடியே ஓடிவராளாம். ஸுமந்த்ரரே! கடிவாளத்தை செத்த (சற்று) இழுத்துப் பிடியும்னுளாம்.

ராமன் சொன்னுராம். சீக்ரம் வேகமாக ஓட்டுடா. இவா இப்படித்தான் சொல்லுவா.

ஊரைவிட்டுப் போயிட்டா அப்பறம் எல்லாம் மறந்துடும். கிட்டக்க இருக்கச்சே அப்படித்தான சொல்ற வழக்கம் இல்லையா!

ஊருக்குப்போறேன்னு, ஏளக் கூடாது. இங்கயேதான் இருக்கணும். அவஶ்யம் இங்கயேதான் இருக்கணும். க்ருபை பண்ணனும் பா.

*ஊருக்குப் புறட்டுப்போயிட்டாக்க அடுத்ததா இங்க வரச்சேதான் பார்ப்பா.*

**ஸூதம் ஸஞ்சோதயாமாஸ த்வரிதம் வாஹ்யதாம் இதி ।**

*ஜனங்களுடைய ஸ்வபாவம் இது.*

**நிர்கச்சதி மஹாபாஹௌ ராமே பௌரஜநாஶ்ருபி : ।**
**பதிதைரப்யவஹிதம் ப்ரணநாஶ மஹீரஜ: ॥** ***(2.40.33)***

**ஹா ராமேதி ஜநா: கேசித் ராமமாதேதி சாபரே ।**

*ஒவ்வொருத்தர் கதறுளாம். ராமா ராமாங்கற. ராமமாதாங்கருள். அப்படியானது கஷ்டப்படருள் எல்லாரும். மேலமேல ச்ரமமா இருக்கு.*

*உடனே தஶரதன் பார்த்தார். பிள்ளை போகறத ரொம்ப துக்கத்தோட பார்க்கறுர். உடனே கத்திறுராம்.*

**திஷ்டேதி ராஜா சுக்ரோஶ, யாஹி யாஹீதி ராகவ : ।**
**ஸுமந்த்ரஸ்ய பபூவாத்மா சக்ரயோரிவ சாந்தரா ॥**

***(2.40.46)***

*ரொம்ப அழகாச் சொல்றுர். வால்மீகி பேசறுர். ரொம்ப நல்ல ஶ்லோகங்கள். என்ன சொல்றுர்ஞ திஷ்ட* **திஷ்டேதி ராஜா** *- ஸுமந்த்ரரே ரதத்தை நிறுத்து நிறுத்து, ராமனைப் பார்க்கணும், செத்த (சற்று) நிறுத்து ரதத்தைங்கறுராம்.*

**யாஹி யாஹீதி ராகவ:** *- அவா துக்கத்தால கத்தறு. நீ வேகமாப் போ. ஶீக்ரமா குதிரையை விடு அப்படீன்றுராம் ராமன். நீ வேகமாப் போன்றுராம்.*

*ஸுமந்த்ரருக்கு* time *சரியில்ல. 60,000 வருஷம்* Service *பண்ணியிருக்கார். இன்னும்* Retire *ஆகல்ல.* Pension, Gratuity*ல்லாம் வாங்கணும். ஆகையினுல தசரதன் சொன்னத்தைக் கேழ்க்க வேண்டாமா? ராமன் ராஜாவா இருந்தாலும் இவன் வார்த்தையைக் கேழ்க்கலாம்.*

இவனே காட்டுக்குப் போறான். இவன் சொன்னதைக் கேழ்க்கறதா, அவர் சொன்னத்தைக் கேழ்க்கறதா? என்ன பண்ணறது?

**ஸுமந்த்ரஸ்ய பபூவாத்மா, சக்ரயோரிவ சாந்தரா ।**

ஸுமந்த்ரருடைய ஆத்மா முன் சக்ரத்துக்கும் பின் சக்ரத்துக்கு நடுவுல ஆப்டுண்ட ஆத்மாப் போல திண்டாடறதாம். **சக்ரயோரிவ சாந்தரா.**

நடுவுல அகப்பட்டுண்டு ஸுகமில்ல.

ராமன் ''போ''ங்கறார். ஸுமந்த்ரர் திரும்பிப் பார்த்தாராம்.

''அப்பா நில்லுங்கறாரே''ன்னார்.

''நீ பாட்டுக்கு போடா''

''அவர் நில்லுன்னு சொல்றாரே''

**நாஶ்ரௌஷமிதி ராஜாநம் உபாலப்தோபி வக்ஷ்யஸி ।**
**சிரம் து:கஸ்ய பாபிஷ்டம் இதி ராம: தமப்ரவீத் ॥**

*(2.40.47)*

சொல்றார். ரொம்ப கஷ்டம் ரொம்ப கஷ்டம். போ சீக்ரம்னார். ராமன்.

'நானைக்குக் கோவிச்சுண்டார்'னு

**''நாஶ்ரௌஷமிதி ராஜாநம் உபாலப்தோऽபி வக்ஷ்யஸி ।**

'நான் சொன்னத்தை ஏன் கேழ்க்கல்ல. ரதத்தை ஓட்டிண்டு போன'ன்னு கோவிச்சுண்டாக்க என்ன பண்ணறதுன்னு கேட்டா, **நாஶ்ரௌஷம் இதி ராஜாநம் வக்ஷ்யஸி ।** இத்தனை கூட்டத்துல, இவ்வளவு பேச்சுல காதுல விழலன்னு சொல்லிபூடுடா. **ந அஶ்ரௌஷம்'னு என்ன? காதுல விழலன்னு சொல்லிப்பூடு. என்ன பண்ணிபூடுவா.**

*ராமன் ரொம்ப ஸத்ய ஸந்தன்னு சொன்னீரே! பொய் சொல்லச் சொல்றுளேன்னு சிலபேர் கேழ்க்கறு.*

*ராமன் ஒருதரம் பொய் சொல்லச் சொல்லிட்டார். ஸீதை ஒருதம் பொய் சொன்னுளாம். நாம் நித்யம் பொய் சொல்றோம். இதுக்கு ஒருத்தரம் கேழ்ப்பாரில்ல. அவாளைக் கேழ்க்கறு. ஏன்னு? பொய் சொல்லாதவா சொன்னத்தால கேழ்க்கறு.*

**பொய் சொல்லாம இருக்கணும்னு அது ரொம்ப கஷ்டமாம். ஸத்யம் ஶதேந விக்நாநாம்** *- மெய்தான் சொல்லணும்னு ஸங்கல்ப்பிச்சா நூறு விக்நம் வருமாம்.*

**ஸஹஸ்ரேண ததா தப:** *- தபஸ் பண்றதுன்னு ஆயிரம் விக்நம் வரதாம்.*

*..விக்நாயுதேந கோவிந்தே ந்ருணும் பக்தி: ப்ரஜாயதே ஶ்ரீமந் நாராயணனிடத்துல பக்தி பண்ணணும்னு பதினுயிரம் விக்நம் வரணுமாம்.*

**ஸத்யம் ஶதேந விக்நாநாம்** *- இன்றைய தினம் கார்த்தாலேர்ந்து ஸாயம் காலத்துக்குள்ள பொய் சொல்றதில்லன்னு ஸங்கல்பிச்சண்டு உட்கார்றுளாம். இன்றைய தினம் நிச்சயமா பொய் சொல்லப் போறதில்லேன்னு தீர்மானம் பண்ணிக்கறது.*

*அன்னிக்குத்தான்* corporation *லேர்ந்து வருவா. எத்தனை குடியிருக்கா? என்ன வாடகை? அன்னிக்கு கேழ்ப்பன். ஏன் முதல் நாளிலயே வந்தா என்ன? (ஸபையில் சிரிப்பொலி)* **ஸத்யம் ஶதேந விக்நாநாம்** *- அவன் நேத்திக்கு வரக் கூடாதா? பாபம் அது. ஈச்வர ஸங்கல்பம்.*

*எங்க பொண்ணே குடியிருக்கா, ரெண்டு பிள்ளைகள்தான் தனித் தனியா இங்க இருக்கா. அந்த உள்ள காபி போடறதுக்காக தனியா வெச்சிருக்கோம் (ஸபையில் சிரிப்பொலி) எத்தையாவது சொல்லுவன்.*

**ஸத்யம் ஶதேந விக்நாநாம் - ஸஹஸ்ரேண ததா** தப: தபஸ் பண்ணு, ஆயிரம் விக்நம். விஶ்வாமித்ரருக்கு எவ்வளோ விக்நம் வந்தது பார்க்கா.

**விக்நாயுதேந கோவிந்தே ந்ருணும் பக்திர் நிவார்யதே**

பகவான்கிட்ட பக்தி பண்ணனும்ணு பதிணுயிரம் விக்னம் வரதுன்ணு.

கோயிலுக்குப் போகணும்ணு. கார்யம், குழந்தை அழறது. மாப்பிள்ளை வருவர். ஸம்பந்தி வருவர். எத்தனையோ ஹிம்ஸை, அதனுல நம்மப் பத்தி என்ன? ஸத்யத்தைக் காப்பாத்தறது ரொம்ப கஷ்டமா இருக்கு.

**ராமோ த்விர்நாபிபாஷதே ।**
**அந்ருதம் நோக்த பூர்வம் மே ந ச வக்ஷ்யே கதாசந ।**

நான் பொய்யே சொல்றது இல்லன்னு சொல்லிண்டு இருக்காரே. காதுல விழலன்னு சொல்லச் சொன்ணுரே ! இது ந்யாயமா?

**நாஶ்ரௌஷமிதி ராஜாநம் உபாலப்தோऽபி வக்ஷ்யஸி ।**

ராஜ தர்மத்துல, ஒருத்தன் ஒருத்தனைக் கொன்னுட்டான்ணு அவனுக்கு அதிக தண்டனையில்ல. அவனைக் கொல்லச் சொன்னவனுக்குத்தான் அதிக தண்டனை. அதே மாதிரி, பொய் கூடச் சொல்லலாம். அவனைப் பொய் சொல்லச் சொன்ணு அதிக பாபம்ணு.

ஸுமந்த்ரரை பொய் சொல்லச் சொன்ணுரே ராமன் **நாஶ்ரௌஷமிதி ராஜாநம் உபாலப்தோऽபி வக்ஷ்யஸி । ந அஶ்ரௌஷம்** - காதுல விழலன்னு சொல்லிபுடு. அப்படீன்னு சொல்ருரே இது ந்யாயமான்னு கேட்டுண்டார். வ்யாக்யானத்துலயே ஸமாதானமும் சொல்லியிருக்கா.

என்ன சொன்ஞன்ஞ, ஶ்ருண் தாதுவினுடைய அர்தத்தையானதை யோசிக்கணும் வால்மீகியானவர் என்ன சொல்லியிருக்கார்.

ஶ்ருணோதின்ஞ கேழ்க்கறதுன்னு அர்த்தம். நாஶ்ரௌஷம்ஞ கேழ்க்கலன்னு அர்ததம்.

'கேழ்க்கறது'ன்றதுக்கு ரெண்டு வித அர்ததம் உண்டு. ஆத்துல கறமது தீர்ந்து போச்சுன்னு சொன்னேனே. கேட்டேளான்ஞ? ஆமாம் கேட்டேன்ஞன். வரச்சே கடைலே வாங்கிண்டு வந்தேளா? இல்லே மறந்து போயிட்டேன்ஞன். கேட்டா மட்டும் போதுமா ! அதும்படி செய்யணும்.

கதை நடக்கறதே. கேழ்கலயா?ன்ரு. கேழ்க்கத்தான் போறேன்ரு. அந்த கேழ்கறது வே ற இந்த கேழ்க்கறது வேற. ஶ்ருணு verb க்கு ரெண்டு அர்த்தம்.

அர்ஜுனனைச் சொல்றார் பகவான். நான் இவ்வளவு உபதேசம் பண்ணனே. நீ கேழ்ப்பயா?ன்றார். யதி சேத் த்வம் அஹங்காராத் ந ஶ்ரோஷ்யஸி விநங்க்ஷ்யஸி । கீதையில சொல்றார்.

நீ அஹங்காரத்துஞல இவன் சொன்னத்தை நாம் என்ன கேழ்க்கறது?ன்னு உன்னுடைய க்ஷத்ரிய குணத்துஞல நினைச்சயாஞ, நான் சொன்னத்தை நீ கேழ்க்காத போஞல் 'விநங்க்ஷ்யஸி' 'நாசமாப் போயிடுவ' நீ நாஶத்தை அடைவாய். க்ஷேமத்தை அடைய மாட்டாய்.

அர்ஜுனன் கேட்டான். நீ சொன்னதை நான் கேழ்க்காம இருக்கஞ? நான் இத்தனை நாழி நீ சொன்னதைத் தானே கேட்டேன். வேறயாருக்கு இந்த கீதையைச் சொன்ன இப்ப?ன்ஞன். வேற ஒருத்தரும் கிட்டக்க இல்ல. நான்தானே கேட்டுண்டிருந்தேன்.

யதி சேத் த்வம் அஹங்காராத் ந ஶ்ரோஷ்யஸின்ஞ என்ன அர்த்தம் அதுக்கு?

நான் கேழ்க்காம யார் இந்த கீதையை கேழ்க்கறு. கேட்டுண்டுத்தானே இருக்கேன். 'நான் சொன்னத்தைக் கேழ்க்காம போறு நாசத்தை அடைவாய்'னு சொல்றீரே, நீர் சொன்னத்தைச் கேழ்க்காமயா இருந்தேன் இத்தனை நாழி?ன்னுனும்.

ஶ்ரு verbக்கு வேற அர்த்தம் டா. என்ன அர்த்தம்? நான் சொல்றத்தைக் கேழ்க்காத இருக்கன்னு இல்ல.

நான் சொன்னத்தைக் கேழ்க்கல்லன்னு நீ உருப்படமாட்ட !ன்னு. கேட்டுண்டு தானே இருக்கேன் பா ன்றுன்.

கேழ்க்கறதுன்னு கேட்டபடி நடக்கறதுன்னு அர்த்தம்.

'நான் சொன்னத்தைக் கேழ்க்காதபோறு உனக்கு கஷ்டம் வரும்னு என்ன அர்த்தம்?

கேழ்க்கலயான்னு அவன்?

ஶ்ருண் தாதுக்கு என்ன அர்த்தம் அப்போ?

கேட்டபடி, காதுல விழுந்தபடி, நடக்கறதுன்ற அர்த்தம். சரி போச்சா? (கர்நாடகத் தமிழில் சொல்லி ரஸித்தாகிறது). சரி போகாதுன்னு சொல்லுவா.

**நாஶ்ரௌஷம் இதி ராஜாநம் உபாலப்தோऽபி வக்ஷ்யஸி ।**

ஸுமந்த்ரரை இப்படிச் சொன்னுரே।

அப்பா நாளைக்குக் கேட்டா என்ன பண்ணுவேன் னுர் சுமந்த்ரர்.

'நீ கேட்டபடி நான் நடக்கல'ன்னு சொல்லு'ன்னுதான் சொன்னுர் ராமன்.

'ந அஶ்ரௌஷம்'-னு சொன்னது காதுல விழலன்னு அர்த்தம் இல்ல. நீர் சொன்னபடி நான் கேட்டு நடக்கலன்னு அர்த்தம்.

**வையத்து வாழ்வீர்காள் நாமும் நம் பாவைக்குச் செய்யும் கிரிசைகள் கேளீரோ !**

*ன்னுளே. இவா இத்தனை பொண்கள் கேழ்க்காமயா இருக்கா. 'கேளீரோ !'ன்னு சொல்றுளேன்னு.*

*கேளீரோ! ன்னு கேட்டபடி நடப்பேளா?ன்னு அர்த்தம். நான் சொல்ற திருப்பாவைக்கு சில நியமங்கள் உண்டு. அந்த நியமங்களைச் சொல்லப் போறேன். அந்த நியமங்களை நான் சொல்றபடி கேட்டு நடப்பீர்களா?ன்னு அர்த்தம். வெறும் காதால கேழ்க்கறது உபயோகமில்ல. இதென்ன உபந்யாஸமான்னு காதால கேட்டு போகறதுக்கு. கேட்டபடி செய்யணும்னுளாம் அவள். உபந்யாஸம் கேழ்க்கறவா கேட்டபடி செய்யணும்ங்கற அவஶ்யமில்ல. சொல்றவர்க்கும் அந்த அவஶ்யமில்ல இல்லையா. (ஸ்ரீமத் ஆண்டவன் பெரிதாக சிரித்தருளி ரஸித்தாகிறது) என்னச் சொன்னுர்.*

**தஸ்மிந் ஸ்து புருஷவ்யாக்ரே நிஷ்க்ராமதி க்ருதாஞ்ஜலௌ ।....................**

**நாஶ்ரௌஷமிதி ராஜாநம் உபாலப்தோऽபி வக்ஷ்யஸி ।**
**சிரம் து:கஸ்ய பாபிஷ்டம் இதி ராம: தமப்ரவீத் ॥**

*என்ன ஆச்சுன்னு கேட்டா.*

*ஜனங்கள்ளாம் கதறறதாம்.*

**அநாதஸ்ய ஜநஸ்யாஸ்ய துர்பலஸ்ய தபஸ்விந: ।**
**யோ கதி: ஶரணம் சாஸீத் ஸ நாத: க்வநு கச்சதி? ॥** *(24.1.2)*

**நமக்கெல்லாம் நாதனுக இருந்தானே.**
**அமர்ந்த நாதனுகி அவர்கருள் அருளும் அம்மானை**
*(திருவாய்மொழி 8.4-)*

**அமர்ந்த நாதன் = அநுரூப: ஸ வை நாத:ன்னுர்.** *அப்படி நமக்கெல்லாம் பொருத்தமான நாதன். அவன்*

*நம்மையெல்லாம் விட்டுட்டுப் போகிறானே. அவனை இனி பார்க்கமுடியுமா?*

**ந க்ருத்யத்யபிஶப்தோऽபி க்ரோதநீயாநி வர்ஜயந் ।**
**க்ருத்தாந் ப்ரஸாதயந் ஸர்வாந் ஸமது:க: க்வ கச்சதி? ॥**

*ராமன் புறப்பட்டுப் போகிறானே. என்ன வைசாலும் திருப்பிக் கோவிச்சுக்கமாட்டானே. ரொம்ப கோவிச்சுண்டா, கோவிச்சுண்டவாளை ஸமாதானப்படுத்தி உட்காரவைத்து அவர்களுடைய கோவம் நிவ்ருத்தியாகும்படி பண்ணுவனே. நமக்கு துக்கம் வந்தா தானும் துக்கமாக இருப்பனே.*

**கௌஸல்யாயாம் மஹாதேஜா: யதா மாதரி வர்த்ததே ।**
**ததா யோ வர்த்ததேऽஸ்மாஸு மஹாத்மா க்வநு கச்சதி? ॥**

*கௌஸல்யையினிடத்தில் எப்படி இருப்பனோ அதே மாதிரி நம்மிடத்திலயும் இருப்பனே அவன்? அப்பேர்ப்பட்ட ராமன் எங்க போவான்?*

**ஸ தம் அந்த:புரே கோரம் ஆர்த்த ஶப்தம் மஹீபதி: ।**
**புத்ரஶோகாபிஸந்தப்த: ஶ்ருத்வா சாஸீத் ஸுது:கித: ॥**

***(2.41.8)***

*அந்த:புரத்துல எல்லா ஸ்த்ரீகளும் அழறா. அதெல்லாம் தஶரதன் காதுல விழறது. ரொம்ப கஷ்டப்படறார்.*

**நாக்நிஹோத்ராண்யஹூயந்த நாபசந் க்ருஹமேதிந: ।**
**அகுர்வந் ந ப்ரஜா: கார்யம் ஸூர்யஶ்சாந்தரதீயத ॥**

**வ்யஸ்ருஜந் கபலாந் நாகா: காவோ வத்ஸாந் ந பாயயந் ।**
**புத்ரம் ப்ரதமஜம் லப்த்வா ஜநநீ நாப்யநந்தத ॥**

***(2-41-9.10)***

*அழகா ச்லோகம் சொல்றார்.*

*ராமன் காட்டுக்குப் போனு என்னமா இருக்கு?ன்னு* **நாக்நிஹோத்ராண்யஹூயந்த** *- அக்நி ஹோத்ரிகள்ளாம் ஹோமம் பண்ணலையாம். ரெண்டு வேளையும் ஹோமம் பண்ணுத்தாலே அக்நி லௌகிகமாப் போச்சுங்கறுர்.*

*எங்கவேணு போறு ! எல்லா இடத்துலயும் ஸஞ்சரிக்கறு ! யாகம் பண்ணச்சே மாத்ரம் அக்நியை உபசரிக்கிறு. அவா நித்யப்படி அக்நிஹோத்ரம் எப்படி பண்றுளோ தெரியல்ல ! ராமாயணத்துல ப்ரமாணம் இருக்கு ! ராமன் போகச்சே அக்நிஹோத்ரம் பண்ணுதவுட்டுட்டா.*

**நாக்நி ஹோத்ராண்ய ஹூயந்த** *- அக்நிஹோத்ரங்களை எல்லாம் வுட்டுட்டா. அக்நிஹோத்ரத்தால் யாரை ஆராதிக்கணுமோ அவர் இல்ல. அவர் வனத்துக்குப் போயிட்டார். ஸர்வகர்ம ஸமாராத்யனுன பரமாத்மா. காட்டுக்கு ஏளுறுரே. அந்த து:கத்துனுல அக்நிஹோத்ரத்தைவுட்டுட்டா. (ராமன் புறப்பட்ட துக்கத்தில் செயலிழந்து அக்நிஹோத்ரத்தை விட்டார்கள். சில நாளில் மீண்டும் ராமனுக்கு உகப்பு என்பதாலேயே ஸ்வதர்மத்தைப் பரிபாலிக்க ப்ராயச்சித்த பூர்வமாக மீண்டும் அக்நி ஹோத்ரம் சரிவரச் செய்து வந்தார்கள் என்று அர்த்தம்). க்ருஹஸ்தாள் இருக்காளே. ஆத்துல அத்தனை குழந்தைகள் இருக்கே. யாரும் சாப்பிடல. தளிகையே பண்ணல. எல்லாரும் அழுதுண்டு உட்கார்ந்துண்டிருக்காளாம். ஸன்யாஸிகள் தளிகைப் பண்ணிக்கலன்னு எழுதல. அதனுல (சிரித்தாகிறது).* **நாபசந் க்ருஹமேதிந:** *- ஸந்யாஸிகள் தளிகை பண்றதில்ல. தளிகை பண்ற ஆத்துல கேட்டு வாங்கி சாப்டுட்டு போயிடுவா.*

**யதி: ச ப்ரஹ்மசாரீ ச பக்வாந்ந ஸ்வாமிநாவுபௌ ।**

*யதி - ஸந்யாஸியும் ப்ரஹ்மசாரீயும் பக்வாந்நத்தைத்தான் வாங்கிக்கணும். பிக்ஷை வாங்கச்சே*

ஸந்யாஸியும் ப்ரஹ்மசாரியும் பக்வாந்நத்தைத்தான் பிக்ஷு வாங்கிக்கணும். வெறும் அரிசியை வாங்கக் கூடாது.

நாபசந் க்ருஹமேதிந: - க்ருஹஸ்தாள் எல்லாரும் தளிகையே பண்ணலயாம். குழந்தைகள் பசியா இருக்கே ன்னு பார்க்கலயாம். அகுர்வந் ந ப்ரஜா: கார்யம் - கடைக்குப் போறவா கடைக்குப் போகல. பிஸினஸ் பண்றவா எந்த பிஸினஸ்ஸூம் பண்ணல. வக்கீல்கள், ஜட்ஜ்கள் கோர்ட்டுக்கு போகல. எல்லோரும் ஸ்வஸ்வ கார்யங்களே விட்டுட்டு துக்கப்பட்டுண்டு இருக்கா. ஸூர்யாஸ்தமநம் ஆச்சு.

யானேக்கு சாப்பாடு போடல யானேப் பாகன். ஏன்னு? வ்யஸ்ருஜந் கபலாந் நாகா: - ப்ரஸாதத்தை கபளமா உருட்டிப் போடருளாம். அதுகள் ஆஹாரத்தைச் சாப்பிடலயாம். ராமன் இல்லன்னு தெரிஞ்சுடுத்தாம். அதனுல ஆஹாரம் சாப்பிடலயாம். காவோ வத்ஸாந் ந பாயயந் - ஸாயங்கால வேளே. கன்றுக் குட்டிய ஊட்டவிட்டா பால் சுரக்கல்லயாம் பசுக்கள் எல்லாம். பட்டினியா இருக்காம்.

முதல் குழந்தை பொறந்திருக்காம். தாயார் ஸந்தோஷப்படலயாம்.

புத்ரம் ப்ரதமஜம் லப்த்வா ஜநநீ நாப்யநந்தத ।

வால்மீகி ச்லோகம்னு! (ஆசார்யர் சிரித்தருளி ரஸித்தாகிறது).

புத்ரம் ப்ரதமஜம் லத்வா ஜநநீ நாப்யநந்தத ।

குழந்தையைக் கூட திரும்பி பாக்கல, பால் கொடுக்கல்ல. கொழந்தையைப் பிடிக்கல. ஏன்னு ! ஏழெட்டுக் குழந்தை இருக்கோ ! அதனுல கவனிக்கலயான்னு ! இது போனுப் போகறதுன்னு இருக்காளோ !

**புத்ரம் ப்ரதமஜம் லப்த்வா ஜநநீ நாப்யநந்தத ।**

*வால்மீகியோன்ன! ஸம்ஸ்க்ருத வார்த்தை ஆச்சர்யமான வார்த்தை. ஒரு பதம் போட்டா இப்படிதான் இருக்கணும்.* **புத்ரம் ப்ரதமஜம் லப்த்வா ஜநநீ நாப்யநந்தத ।** *வெகு நாள் பிள்ளையில்லாம இருந்து வ்ரதங்கள்ளாம் பண்ணி, தேவதைகளையெல்லாம் ப்ரார்த்திச்சு பகவத் அனுக்ரஹத்தாலே உண்டாகி, ஸீமந்தத்துல நாந்திக்கு ஸ்வாமிகளுக்கெல்லாம் பத்தாறு வாங்கிக் கொடுத்து அப்படியெல்லாம் விசேஷமாப் பண்ணி, பஹுநாள் ஆசைப்பட்டு பெத்த குழந்தைக்கு பாலூட்டலையாம் தாயார்.*

**புத்ரம் ப்ரதமஜம் லப்த்வா ஜநநீ நாப்யநந்தத ।**

*ரொம்ப கஷ்டமா இருந்ததாம்.*

**ந வாதி பவந: ஶீத: ந ஶஶீ ஸௌம்யதர்ஶந: ।**

*காற்றுனது அசைவற்றுப் போச்சாம். ரொம்ப தஹிப்பா இருந்ததாம். சந்த்ரனுடைய அழகெல்லாம் போச்சாம்.*

**அநர்த்திந: ஸுதா: ஸ்த்ரீணும் பர்த்தாரோ ப்ராதர: ததா ।**

**ஸர்வே ஸர்வம் பரித்யஜ்ய ராமமேவாந்வசிந்தயந் ॥**

*குழந்தைகள், ஸ்த்ரீகள், பர்த்தாக்கள் எல்லாரும் எல்லாத்தையும் வுட்டுட்டாளாம்.*

**யே நு ராமஸ்ய ஸுஹ்ருத: ஸர்வே தே மூட சேதஸ: ।**
**ஶோக பாரேண சாக்ராந்தா: ஶயநம் நைவ பேஜிரே ॥**

*(2.41.20)*

*ராமனுடைய* friends *இருக்காளே, ஸ்நேஹிதாள் அவாள்ளாம் என்ன பண்ணிணுளாம்.*

**ஶோகபாரேண சாக்ராந்தா:** - *வாக்கிங் போனுளாம். பெஞ்ச்ல படுத்துண்டுட்டாளாம். கண்ணை மூடிண்டு அழுதுண்டே இருக்காளாம். எழுந்துக்கவே இல்லையாம்.*

ஏன் தெரியுமா? எழுந்துக்க முடியலேயாம். ஆசார்யன் வந்தாக் கூட எழுந்திருக்கலேயாம். அப்படியே கிடக்கருளாம்.

ஏண்டா எழுந்திருக்கலேனு?

எம்மேலே நாலு பெரிய மூட்டையை வெச்சிருக்கே நான் எப்படி எழுந்திருக்கறது?ன்னுளாம்.

என்ன மூட்டை?னு

**ஶோக பாரேண சாக்ராந்தா:** - துக்க பாரமாம். து:க்க பாரத்தினுலே **ஆக்ராந்தா: ஶயநம் நைவ பேஜிரே !** சரியான படுக்கையிலயாவது போய் விழலாமோல்லேயோ! இருந்த இடத்தைவுட்டு அசையாம ஸ்தம்பிச்சுப் போய் கிடந்தாளாம்.

என்ன இவ்வளவு துக்கமா?

ராமன் காட்டுக்குப் போனு?

**மற்றிருந்தீர் கட்கு அறியலாகா மாதவன் என்பதோர் அன்புதன்னை**
**பெற்றிருந்தேனுக்கு உரைப்பதெல்லாம் ஊமையரோடு செவிடர் வார்த்தை**
**பெற்றிருந்தாளை ஒழியவேபோய் பேர்த்தொருதாயில் வளர்ந்த நம்பீ**
**மற்பொருக்கா மற்கள மடைந்த மதுரைப் புறத்தென்னை உய்த்திடுமின்**
*(நாச்சியார் திருமொழி 12-1)*

ரொம்ப கஷ்டப்பட்டாளாம். ரொம்ப கஷ்டம்.

**கைகேயி மா மமாங்காநி ஸ்ப்ராக்ஷீ: த்வம் துஷ்டசாரிணீ)**

ரதம் போயின்டேயிருக்காம். தஶரதர் மூர்ச்சையா கீழ விழுந்துட்டாராம். மூர்ச்சையா கீழ விழுந்தவுடனே அவரை ஸீட்ல தூக்கி உட்கார்த்தி வெக்கறதுக்காக கைகேயி பிடிச்சுக்க வந்தாளாம். புருஷன் விழுந்தா தூக்கி உட்கார வைக்கவேணுமா? அதுக்காக பிடிச்சு உட்கார்த்தி வைக்கறதக்காக கைகேயி வந்தாளாம். 'நீ என்னைத் தொடாதே'ன்னுராம்.

**கைகேயி மா மமாங்காநி ஸ்ப்ராக்ஷீ: த்வம் துஷ்டசாரிணீ ।**

*இவ்வளவு செய்ஞ்சுபுட்டு தூக்கறதுக்கு வரயா? போனப்பறம் தூக்கலாம்ஞர்.*

**ந ஹி த்வாம் த்ரஷ்டும் இச்சாமி ந பார்யா ந ச பாந்தவீ ।**

*உன்னே கண்ணுல பார்க்கறதக்கே பிடிக்கல. நீ பார்யையுமில்ல.* **ந ச பாந்தவீ** *- பந்து கூட இல்லன்ஞராம். ரொம்ப* distant relation *கூட இல்லன்னுட்டார்.* **ந பார்யா ந ச பாந்தவீ.**

**யே ச த்வாம் அநுஜீவந்தி நாஹம் தேஷாம் ந தே மம ।**
**கேவலார்த்தபராம் ஹி த்வாம் த்யக்ததர்மாம் த்யஜாம்யஹம் ॥**

*உன்னைச் சேர்ந்தவா, உன் அரண்மனையில இருக்கறவா, உன் பந்துக்கள் எல்லாரையும் விட்டுட்டேன். கேவலம் பணத்தை ஆசைப்பட்டவள். கேவலம் அர்த்தபரையான உன்னே விட்டுட்டேன்ஞராம்.*

**பரத: சேத் ப்ரதீத: ஸ்யாத் ராஜ்யம் ப்ராப்யேதம் அவ்யயம் ।**
**யந்மே ஸ தத்யாத் பித்ரார்த்தம் மாம் மா தத்தம் ஆகமத் ॥**

*பரதன் மாதுலக்ருஹத்துக்குப் போயிருக்கானே. அவன் திரும்பி வந்து இந்த ராஜ்யத்தை ஒத்துண்டானேயாஞல் அவன் பண்ர ச்ராத்தத்துல குடுக்கறது எனக்கு வரவேண்டாம்ஞர். அவன் ஒப்புத்துக்கற பக்ஷத்துலன்ஞர்.* if *போட்டார் அதுல. பரதன் அங்கீகரித்து ராஜ்யம் ஆளும் பக்ஷத்துலேன்ஞர். அவனும் பிள்ளையில்ல. அவன் பிள்ளையா நினைச்சுண்டு எனக்கு தர்ப்பணம் பண்ணும் பக்ஷத்துல எனக்கு வரவேண்டாம்ஞர். அதுக்குமேல கைகேயி என்ன பண்ணுவள். போஞப் போறது நல்லதாப் போச்சுன்னு பேசாம இருந்தாள்.*

**அத ரேணு ஸமுத்வஸ்தம் தமுத்தாப்ய நராதிபம் ।**
**ந்யவர்த்தத ததா தேவீ கௌஸல்யா ஶோக கர்ஶிதா ॥**

*கௌஸல்யை என்ன பண்ணுவள்? போஞப் போறதுன்னு அவரைத் தூக்கி பிடிச்சு உட்கார வெச்சாள்.*

## வருந்துகிறோம்

நம் சென்னை ஆச்ரமத்தில் அலுவலகத்தில், நம் *''ஸ்ரீரங்கநாத பாதுகா''* பத்ரிகையில் அலுவலக மேலாளராக இருந்த ஸ்ரீமான் தில்லையம்பூர் நரஸிம்ஹன் 24.12.2009 அன்று ஆசார்யன் திருவடிகளை அடைந்தார். எதிர்பாராதவிதமாக இரண்டுநாள் ஜுரத்துடன் இருந்தவர். ஐம்பத்தி ஆறும் வயதிலேயே இப்படி திடீரென மறைந்துவிட்டது ஆச்ரமத்தில் அனைவர்க்கும் பெரும் துயரத்தைத் தந்தது. ஆச்ரமத்தின் பெருமாள் மர்யாதையைச் சாற்றி இந்த ஸ்வாமிக்கு சரம கைங்கர்யம் நடந்தது. ஸ்ரீமத் ஆண்டவன் நியமிக்கும் எந்த கைங்கர்யத்தையும் பய பக்தியுடன் சிரமேற்கொண்டு செய்வார். இவர் வைகுண்டவாஸி குங்குமம் வரதாசார்யரின் ஜாமாதா. குங்குமம் வரதாசார்யரின் வம்சாவளியினர் அனைவரும் ஆச்ரமத்தில் அத்யந்த அந்தரங்கப் பணி செய்து வருபவர்கள் என்பது யாவரும் அறிந்ததே. அவ்வனைவர்க்கும் நம் பாதுகை பத்ரிகையின் சார்பில் இந்த ஸ்வாமியின் மறைவிற்கு நம் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*—ஸம்பாதகர்*


|| श्रीः ||

### ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமம், கும்பகோணம்

கும்பகோணம், பொற்றாமரைக் குளத்தெருவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள நம் ஆச்ரமத்தில் குறைந்த வாடகையில் அறைகளும், A/c அறைகளும் கிடைக்கும். மற்றும் சிறிய விசேஷங்களுக்கும் கிடைக்கும். சிறந்த வசதிகள் உள்ளன.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி :-
**ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமம்**
பொற்றாமரைக் குளத் தெரு, கும்பகோணம்.
**Phone : 0435-2401185. 9442101185.**

|| ஸ்ரீ: ||

*ஸ்ரீமதே ரங்கராமாநுஜ மஹாதேஶிகாய நம:*

# கேள்வி - பதில்

**கேள்வி-1** *எனக்கு வயது 40. உடம்பு ரொம்ப படுத்துகிறது. பல அஸௌகர்யங்கள். வைத்யத்திற்குச் செலவழிக்க முடியவில்லை. செலவு அதிகமில்லாமல் ஏதாவது வைதிகம் (பரிஹாரம்) சொல்லும்படி ப்ரார்த்திக்கிறேன். எனக்கு குணமாக மிகவும் தயவு செய்து ஏதாவது நல்ல வழி சொல்லும்படி ப்ரார்த்திக்கிறேன்.*

**பதில்** *:-எந்தச் செலவும் செய்ய வேண்டாம். அருகில் உள்ள பெருமாள் கோயிலில் சென்று முடிந்த அளவு கோயில் வெளியேயும் உள்ளேயும் திருவாசல் வெளியையும் நன்றாகப் பெருக்கி, சுத்தம் செய்து வாருங்கள். நம்பிக்கையுடன் செய்து வாருங்கள். நல்ல முன்னேற்றம் இருக்கும்.*

**ஸபாஹ்யாப்யாந்தரம் யஸ்து மார்ஜயேத் அச்யுதாலயம் ।**
**ஸ பாஹ்யாப்ணயாந்தரம் தஸ்ய காஞ்ஞோ நிஷ்கல் மஷோபவேத் ॥**
*(விஷ்ணு தர்மம் 3-17)*

*கோயிலை உள்ளும் புறமும் சுத்தம் செய்பவர்க்கு ஶரீரம் உள்ளும் புறமும் தோஷம் நீங்கும் என்று இந்த ப்ரமாணம் சொல்கிறது.*

**அணிந்தபுரம் கடைத் தலை சீய்க்கப் பெற்றால் கடுவினை களையலாமே** *என்று நம்மாழ்வார் அருளியுள்ளார். கடைத்தலை சீய்த்தல் - திருவாசலை சுத்தம் செய்தல்.*

**கேள்வி-2** *:-கல்யாணப் பெண்ணின் கூரைப் புடவை சிவப்பு வர்ணம்தான் சரியா, வேறு வர்ணப்புடவையும் இருக்கலாமா? சிலர் எதுவாக இருந்தாலும் பட்டுப் புடவையாக இருந்தால் போதும் என்கிறார்கள்.*

பதில் :-நல்ல சிவப்புப் பட்டுப் புடவைதான் உடுத்த வேண்டும் என்பர்.

शांख्यायन க்ருஹ்ய ஸூத்ரத்தில்

रक्तकृष्णं आविकं क्षौमं वा कन्यायाः என்று ஸ்பஷ்டமாக உள்ளது. கருஞ்சிவப்பு வண்ணப் பட்டுப் புடவையே சரி.

வேறு அபிப்ராயம் இருக்குமானாலும் நீல வண்ணம் கூடவே கூடாது.

**ஸ்நாநம் தாநம் தபோ ஹோம:**
**ஸ்வாத்யாய: பித்ரு தர்பணம் ।**
**வ்ருதா தஸ்ய மஹாயஜ்ஞா:**
**நீலிவஸ்த்ரஸ்ய தாரணாத் ॥**

என்று அங்கிரஸ் ஸ்ம்ருதியில் நீலி (அவுரி)யினால் சாயம் ஏறிய நீல வஸ்த்ரத்தை எப்போதும் உடுத்தக் கூடாது என்று சொல்லப்பட்டுள்ளது. நீல வஸ்த்ரம் உடுத்தினால் ஒருநாள் உபவாஸம் இருந்து பஞ்ச கவ்யம் சாப்பிட்டால்தான் சுத்தி என்று சொல்லியுள்ளார். ஸம்ஸ்க்ருத பாஷையில் நீலம் என்பது நீலம் கறுப்பு இரண்டு வர்ணத்தையும் குறிக்கும். ரக்தம் வச்யகரம் ரூபம் என்பதால் கூரைப் புடவை dark-red ஆக இருப்பதுதான் சுபம்.

கேள்வி :- கணவனின் பாதி மனைவி. சிவ பார்வதி கூட அர்த்தநாரீஶ்வரர் என்கிறார்கள். அர்த்த நாரீச்வரர் மாதிரி ஆகிவிட முடியாது. அப்படி இருக்கக் கணவனின் பாதி மனைவி. மனைவி இல்லாமல் க்ருஹஸ்தனுக்கு எந்த கர்மாவும் பண்ணத் தகுதி இல்லை என்றால் என்ன?

பதில்: ஒரு பிண்டத்தை எடுத்து இரண்டாக்கி அதில் ஒன்றை பர்த்தாவாகவும் மற்றொன்றை பத்நீயாகவும் ப்ரஹ்மா ஸ்ருஷ்டிக்கிறார்.

வ்யாஸ ஸ்ம்ருதி 2.13ல்

पाठितोऽयं द्विजाः पूर्वं एकदेहः स्वयं भुवा ।
पतयोऽर्धेन चार्धेन पत्न्योऽभूवन् इति श्रुतिः ।
यावन्न विन्दते जायां तावदर्धो भवेत् पुमान् ॥

*என்று உள்ளது.*

*பத்நீயை அடைந்தவன்தான் முழு மனிதன். அடையாதவரை அவன் பாதி மனிதன்தான் என்கிறார். அதனால் இருவரும் சேர்ந்தேதான் வைதிக கர்மங்களை அநுஷ்டிக்க வேண்டும்.* अर्धो वा एष आत्मनः यत् पत्नी *என்று வேதம்.*

**கேள்வி** *:-நாமேதான் தர்ப்பங்களை க்ரஹித்து வைத்துக்கொள்ள வேண்டும். இன்னொருவர் தரும் தர்ப்பங்கள் கூடாது. அது ச்லாக்யமில்லை என்கிறார்கள். வாத்யார் கொண்டுவரும் தர்ப்பங்கள் ஶாஸ்த்ரப்படி நமக்குக் கூடாதா?*

**பதில்** *:-*ऋत्वित्-पुरोहिताभ्यां ते यद्यानीताः समित्कुशाः ।
निश्रेयसकराः प्रोक्ताः स्वानीतेऽभ्योधिकाः पुनः ॥

*தானே க்ரஹித்த தர்ப்பங்கள் விசேஷம்தான். அதைக் காட்டிலும் நம் வாத்யார் நமக்காக சுத்தமாக க்ரஹிக்கும் தர்ப்பங்கள் இன்னும் உயர்ந்தவையாக இந்த ப்ரமாணம் சொல்கிறது. இது மார்க்கண்டேயர் வசநம்.*

**கேள்வி-5** *:-ஶ்ராத்த கர்மாக்களைத் தம் சொந்த வீட்டில் செய்வதுதான் சிறந்தது என்று சிலர் சொல்கிறார்கள். சிலபேர் அது அச்சோன்யம் வெளியில் எங்காவது செய்வதுதான் சரி என்கிறார்கள். எது சரி?*

**பதில்** *:- கர்த்தா தன் சொந்த வீட்டில் ஶ்ராத்தம் செய்வதுதான் மிகவும் ஶ்லாக்யமானது. அதற்கு இயலாதவர்கள் வேறு ஏதாவது க்ருஹத்தில் வாடகை தந்து அங்கும் நடத்திக் கொள்ளலாம். இதற்கு ப்ரமாணம்-*

**ஸ்வாந்நேநைவ ஸ்வஹஸ்தேந ஸ்வக்ருஹே தத்ஸமாசரேத் ।**
**கதாசித் வை க்ருஹே தைவாத் துர்லபே ஸதி தத்திநே ।**
**யஸ்ய கஸ்ய க்ருஹம் வாபி ததா விக்ரயணுதிநா।**
**ஸ்வயத்நேநைவ ஸம்பாத்ய க்ருத்வா தத் ஸ்வாமி வாக்யத:।**
**தஸ்மிந் தத; தத்குர்யாத் து ந கதாசித் பராஶ்ரயே ॥**

*புண்ய க்ஷேத்ரங்களை நாடிச் சென்று அங்கு ஶ்ராத்தம் செய்வதும் அதிக விசேஷம்.*

**கேள்வி-6** *:- பரமைகாந்திகள் என்று சொல்லிக் கொள்பவர்கள் தேவதாந்தரத்தைப் பழிக்கிறார்கள். அது பாவமில்லை என்றும் நினைக்கிறார்கள். இது எப்படி சரியாகும்?*

**பதில்** *:- கேள்வியில் ''பரமைகாந்திகள்'' என்று சொல்லிக் கொள்பவர்கள்'' என்று க்ஷேபமாக உள்ளது. பரமைகாந்திகளை க்ஷேபிக்கக் கூடாது.*

*தேவதாந்தரங்களை யாருமே பழிக்கக் கூடாது. இது விஷயமாகவும் பாதுகையில் அடியேனின் ஓடக்காரர் என்கிற வ்யாஸத்தை ஐப்பசி இதழில் காண்க.*

देवान्तरं नासूयेत यद्यसूयेत मूढधीः ।
लक्ष्मीः सा नाशं आयाति तस्य वंशोऽपि कालतः ॥

*என்று மார்க்கண்டேய ஸ்ம்ருதி. தேவதாந்தரங்களை தூஷிப்பவர்கள் மூடர்கள் என்றும், அவர்களின் செல்வம் அழிந்து அவர்களின் வம்சமும் ஏழ்மையில் சிக்கும் என்றும் இந்த வாக்யம் சொல்கிறது. ஜாக்ரதையாக விலகி இருக்க வேண்டும்.*

**கேள்வி-7** *:- ப்ராணாயாமம் என்றால் மூச்சை இழுத்துப் பிடித்து அடக்குதல் என்றுதானே பொருள். எனக்குத் தெரிந்து எந்த ஸ்வாமியும் மூச்சை அடக்கி ப்ராணாயாமம் செய்து பார்த்ததில்லை. வெறுமனே மனதிற்குள் மந்த்ரம் சொல்லிக் கொண்டு மூக்கைத் தொட்டுக் கொள்கிறார்கள். இந்த மாதிரி ப்ராணாயாமத்திற்கு என்ன மஹிமை இருக்கும்?*

**பதில் :-**

**ததா கர்த்தும் அஶக்த: சேத் ப்ராஹ்மணோஸௌ நிரந்தரம் ।**
**நாஸாம் ப்ரக்ருஹ்ய தூஷ்ணீம் மந்த்ர மாத்ரம் உதீரயேத்।**
**ஏதந்மாத்ரவர்ணாநாம் கேவலோச்சாரணத்பரம்**
**ப்ராணாயாமாக்யகம் கர்ம க்ருதமித்யேவ சோதிதம் ॥**

*மூச்சடக்கி, மந்த்ரோச்சாரணம் செய்வதே சிறந்த ப்ராணாயாமம். மூச்சடக்க முடியாதவர்கள், மீண்டும் கவனிக்க, மூச்சடக்க முடியாதவர்கள் மட்டும் ப்ராணமுத்ரையினால் (கட்டைவிரல் வலது மூக்கிலும், சுண்டு விரல், மோதிர விரல் இடது மூக்கிலும் வைத்து ஆள் காட்டி, நடுவிரல்களை சேராமல் தனித் தனியே நீட்டி) மூக்கைத் தொட்டுக் கொண்டு ப்ராணாயாம மந்த்ர மாத்ரத்தை உச்சரித்தாலும் போதும் என்று இந்த வாக்யம் சொல்கிறது. வ்யாஹ்ருதிகளையும் காயத்ரீயையும், காயத்ரீ ஶிரஸ்ஸையும் ப்ரணவத்துடன் சொல்லும் மந்த்ரமே அதிக ப்ரபாவம் உள்ளதாயிற்றே.*

**கேள்வி** *:-ப்ரஹ்ம சாரிகளுக்கு சந்தனம், தாம்பூலம் கூடாது என்று சொல்வர். தங்க செயின்போட்டுக் கொள்ளலாமா?*

**பதில்** *:-ஸாதாரணமாக அணிவது கூடாதுதான். மாதா பிதாக்களின் ஆசைக்காகப் போட்டுக்கொள்ளலாம். அது ஶ்ரேயஸ்ஸைத் தரும்.* function *முடிந்தவுடன் கழட்டிவிட வேண்டும் என்று ப்ரமாணம் உள்ளது.*

माता पिता वा पुत्रैकवात्सल्येन महेष्वपि।
हिरण्य रत्नरजत भूषणालङ्कृतिं यदि ।
कुर्यातां तस्य दोषो न तदन्ते च पुनस्त्यजेत्।
पितुमातृकृतं यत्तत् वर्णिनां अधिकोत्सवे।
स्वर्णालङ्करणं रत्नरजतादिकृतं तथा ।
श्रेयस्कारकं इत्येव प्रवदन्ति मनीषिणः॥

|| श्रीः ||

# ஸ்ரீ பெருந்தேவி நாயிகா ஸமேத
# ஸ்ரீ ஸுந்தரவரதப் பெருமாள் திருக்கோயில்

**பாராசூர் க்ராமம், திருவண்ணாமலை மாவட்டம்**

*காஞ்சீபுரத்திலிருந்து சுமார் 40 கி.மீ. தொலைவிலும், செய்யாறு கொடநகரிலிருந்து சுமார் 10 கி.மீ. தொலைவிலும், முக்கூரிலிருந்து சுமார்2.கி.மீ. தொலைவிலும் உள்ள பாராசூர் க்ராமத்தில் ப்ராசீனமான ஸ்ரீ பெருந்தேவி நாயிகா ஸமேத ஸ்ரீ ஸுந்தரவரதப் பெருமாள் திருக்கோயில் 1996ல் புனருத்தாரணம், ஸம்ப்ரோக்ஷணம் செய்யப்பட்டது. முந்தைய ஸம்ப்ரோக்ஷணத்திலிருந்து 12 வருஷங்கள் ஆனதால் ஸ்ரீ தாயார், ஸ்ரீ ஆண்டாளுக்குத் தனிச் ஸந்நிதிகள் மற்றும் வசந்த மண்டபம் தற்போது அமைத்து, திருக்கோயில் புனருத்தாரணம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி திருப்பணிகளுக்கு ரூ. 20 லக்ஷம் செலவாகும் என உத்தேசமாக மதிப்பிடப்பட்டுள்ளது. வரும் விக்ருதி வருஷம் சித்திரை மாதத்தில் மஹாஸம்ப்ரோக்ஷணம் செய்ய உத்தேசிக்கப் பட்டுள்ளது. திருக்கோயில் வேலைகள் ஓரளவு முடிந்துள்ள நிலையில் முழுமையடைந்து மஹாஸம்ப்ரோக்ஷணம் செய்ய நிதி உதவி தேவைப்படுகிறது. ஆஸ்திகர்கள், பக்தர்கள் மற்றும் தர்ம சிந்தனை உள்ளவர்கள் தங்களால் இயன்ற அளவு பொருள் ஸஹாயம் செய்து ஸ்ரீ பெருந்தேவி நாயிகா ஸமேத ஸ்ரீ ஸுந்தரவரதப் பெருமாளின் அனுக்ரஹத்திற்கு பாத்திரர்களாகும்படி ப்ரார்த்திக்கிறோம்.*

*காசோலை / வரைவோலை ''ஸ்ரீ ஸுந்தரவரதப் பெருமாள் கைங்கர்ய ஸபா'' என்ற பெயரில் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்.*

*ஸ்ரீ ஸுந்தரவரதப் பெருமாள் கைங்கர்ய ஸபா,*

**81/55C, திருமங்கலம் ரோடு, வில்லிவாக்கம், சென்னை-600049.**

**விவரங்களுக்கு : ஸ்ரீ.வி. சந்தானம், 97911 85851**

**ஸ்ரீ.பி.ஜெ. கமலக் கண்ணன் 99625 24737**

**ஸ்ரீ கண்ணன் ஸுதர்ஸனம் 92822 03233**

Visit us at : **www.parasoorsrisundaravaradhaperumal.com**

|| श्रीः ||

ஸ்ரீமதே ரங்கராமாநுஜ மஹாதேஶிகாய நம:

# பாதுகை ஒரு தேவியா?

ரீ.உ.வே. நாட்டேரி கிடாம்பி ராஜகோபாலாசார்யர்,
ஆசிரியர்)

பாதுகா தேவியை ஆயிரத்தெட்டு ஶ்லோகங்களால் அத்புதமாகக் கொண்டாடினார் ஸ்வாமி தேஶிகன். அது நாம் பண்ண புண்ணியம்.

சில கேள்விகள்? பெருமாளின் பாதுகைகள் இரண்டு. பாதுகை ஒரு தேவியா? இரு தேவிகளா?

ஸ்ரீ தேஶிகன் ஒரு தேவியைாகத்தான் இரண்டு பாதுகைகளையும் சேர்த்து ஸ்தோத்ரம் பண்ணியுள்ளார். **பாதுகாஸஹஸ்ரம்** முழுவதிலும் ஒருமையில்தான் பாதுகாதேவியை விளித்துள்ளார்.

त्वन्नामानं मुनिं इह भजे - இது மூன்றாம் ஶ்லோகம்.

त्वमिव जगतीं पादुके गाहमाना - இது நான்காம் ஶ்லோகம்.

இப்படி நூற்றுக் கணக்கான, ஶ்லோகங்களில் ஒருமையில்தான் பாதுகா தேவியை விளித்துள்ளார்.

பல கேள்விகள் எழுகின்றனவே?

பாதுகை ஒரு தேவியா? இரு தேவிகளா?

பெருமாள் திருவடியில் சாற்றிக் கொள்வது எப்படி தேவியாக முடியும்?

பாதுகை என்பதை ஸ்வாமி தேஶிகனே ஸ்வரஸத்திற்காக தேவியாக உருவகப்படுத்திவிட்டாரா?

உருவகப்படுத்திவிட்டால் கவிதையே ஒழிய உண்மைக்கு சரி வருமா? தேவியாக நினைத்து பக்தி செய்ய முடியுமா? **பாதுகா** என்பது ஸம்ஸ்க்ருதத்தில் பெண்பால்

சொல், அதனுல் ஸ்ரீ தேஶிகன் தேவியாகச் சொல்லிவிட்டாரா? பாதுகை என்பது யார்? ஆதிஶேஷன்தானே.

சென்றல் குடையாம் இருந்தால் சிங்காதனமாம் நின்றல் மரவடியாம்........ திருமாற்கு அரவு

என்று ஆழ்வாரே சாதித்துள்ளார்.

ஆதிஶேஷன்தான் பாதுகை.

ஶேஷஸ்யைகாம் பூமிகாம் அப்ரவீத் த்வாம்

ஆசார்யாணும் அக்ரணீர் யாமுநேய: ।

ஸ்ரீ ஆளவந்தார், ஸ்தோத்ர ரத்னத்தில் ஆஸந, பாதுகா, அம்ஶுக முதலான எல்லாம் பெருமாளுக்கு ஆதிஶேஷன்தான் என்று அருளியுள்ளதைதான் மேற்படி ஶ்லோகத்தில் ஸ்வாமி தேஶிகன் ஆதரித்துள்ளார்.

இது இருக்கட்டும். அர்ச்சாவதாரத்தில் பெருமாளுக்கு எங்கும் பாதுகையை ஶடாரி என்கிறேம். ஶடாரிக்கு ப்ரதிஷ்டை உண்டா?

வைகானஸ அர்ச்சைகளில் ஆதிஶேஷனே சடாரியில் ஆவாஹநம் செய்து ப்ரதிஷ்டை செய்வதாக அர்ச்சகர்கள் சொல்கிறர்கள்.

சில பாஞ்சராத்ர ஆகமங்களில் ஸ்ரீ கருடனே ஸ்ரீ ஶடாரியில் ப்ரதிஷ்டை செய்வதாகச் சொல்கிறர்கள்.

இரண்டு ஸம்ப்ரதாயமும் உண்டு என்றதை ஸ்வாமி தேஶிகன் (அம்ருதாஸ்வாதிநீ 32ம் பாசுரம்) அரவும் கருடனும் அன்புடன் ஏந்தும் அடியிரண்டும் என்று ஸூசிப்பித்துள்ளார். இந்த ஸ்ரீ ஸூக்திக்கு இந்த அர்த்தமும் உண்டு என்று ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் ஸாதித்தபடி. இதையெல்லாம் விட நம் ஆழ்வார் ஸம்ப்ரதாயத்தில் பெருமாளின் ஶடாரியை நம்மாழ்வார் என்றே அநுஸந்திக்கிறேம். நம்மாழ்வாருக்குத்தானே ஶடகோபர், ஶடாரி என்று திருநாமம். ஆழ்வாரே தம்மைப்

பலகாலும் ஶடகோபன் என்று திருவாய்மொழியில் சொல்லியுள்ளார். குருகூர் சடகோபன் என்று திருவாய்மொழியில் பலமுறை வரும்.

நம்மாழ்வாரை ஸ்ரீ ஶடாரியில் ப்ரதிஷ்டை செய்யும் வழக்கமே கிடையாது என்றுதான் ஆலய அர்ச்சகர்கள் சொல்கிறார்கள். ஆனால் அவர்களும் ஸ்ரீ ஶடகோபம் என்றுதான் வ்யவஹாரம் செய்கிறார்கள்.

**பஹுவித புருஷார்த்தக்ராம ஸீமாந்தரேகாம்**
**ஹரிசரணஸரோஜ ந்யாஸ தஸ்யாம் அநந்ய: என்று**

**பரத ஶிரஸி லக்நாம் பாதுகே பாவயம்ஸ்த்வாம் ஶதமிஹ ஶரதஸ்தே ஶ்ராவயேயம் ஸம்ருத்திம் என்று**

ஸ்ரீ ஸ்வாமி தேஶிகன் கொண்டாடும்படி, நமக்கு எல்லா நன்மைகளும் தரக் கூடிய உயர்ந்த பாதுகைகளைப் பற்றி இத்தனை கேள்விகளா?

எல்லா மங்களங்களையும் அருளவல்ல பாதுகா தேவிதான் நமக்கு விளக்க வேண்டும். அவள் அருளாலேதான் அவளை அறிய முடியுமே அன்றி நாம் என்ன செய்ய?

பாதுகையை ஏன் நம்மாழ்வாராகப் பேசுகிறோம் என்பதற்கு ஸ்வாமி தேஶிகன் அருளும் காரணம் கேளீர்.

ஸ்ரீ ஸ்வாமி தேஶிகன், பெருமாள் பாதுகைக்குள் நம்மாழ்வார்தானே ப்ரவேஶித்து விடுகிறார். அதனால் பெருமாள் பாதுகையை ஸ்ரீ ஶடகோபன் என்கிறோம் என்ற அர்த்தத்தை ஸூசிப்பிக்கிறார் ஶ்லோகத்தில்

**த்ரமிடோபநிஷந் நிவேஶ ஶூந்யாந்**
**அபி லக்ஷ்மீரமணாய ரோசயிஷ்யந் ।**
**த்ருவம் ஆவிஶதி ஸ்ம பாதுகாத்மா**
**ஶடகோப: ஸ்வயம் ஏவ மாநநீய: ॥**

இங்குள்ள ஶடகோப: ஸ்வயம் ஆவிஶதி என்கிறதைக் கவனிக்க வேண்டும்.

*நம்மாழ்வாரின் ஸம்பந்தம் இல்லாதவர்களுக்கு பெருமாளின் அருள் கிடையாது. நம்மாழ்வாரின் ஸம்பந்தம் உள்ளவர்களைத்தான் பெருமாளுக்குப் பிடிக்கும்.*

*நாம் திருவாய்மொழியைக் கற்றால்தான் நமக்கு நம்மாழ்வாரின் ஸம்பந்தம் வரும். எல்லாரும் திருவாய்மொழி கற்பதில்லை. நம்மாழ்வார் பார்த்தார். திருவாய்மொழி கற்காமல் போனாலும் மக்களுக்கு நம் ஸம்பந்தத்தை ஏற்படுத்த வேண்டும். கோவிலில் பெருமாள் ஸேவிப்பவர்களக்கு ஸ்ரீ ஶடாரி ஸாதிப்பர். நாமே பாதுகையாக ஆகிவிட்டால் எல்லார் தலையிலும் ஸ்ரீ ஶடாரி ஸாதிக்கும் போது நம் ஸம்பந்தம் மக்களுக்கு ஏற்படும். நம் ஸம்பந்தம் ஏற்பட்டவர்களை பெருமாள் கட்டாயம் அநுக்ரஹிப்பர் என்று அருளாளரான நம்மாழ்வார் தானே பெருமாளின் பாதுகைக்குள் ப்ரதிஷ்டையாய் விடுகிறார்.*

*பெரிய திருவந்தாதி 31ஆம் பாசுரத்தில் நம்மாழ்வார் குறிப்பால் காட்டுகிறார்.*

**வல்வினையும் தீர்ப்பான் நிழலும் அடிதாறுமா** *அடிதாறு - பாதுகை.*

**நிழல்போலும் பாதுகை போலும்** *பெருமாளின்* **திருவடியைப் பிரிவதில்லை நாம்** *என்று நம்மாழ்வார் சாதித்துள்ளதாகப் பொருள் விளக்குவர். ஆனால் ''அடிதாறும் ஆனோம்'' என்பது ஸூசக வார்த்தையாகக் கொண்டால் சரிவரும். பாதுகை ஆனேன் என்று அர்த்தம். ஶரணாகதிப் பாசுரமான* **அகலகில்லேனிலும்,**

**அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே** *என்பதற்கு வ்யாக்யானங்கள் உண்டேயாகிலும்* **திருவடிக்கும் கீழே பாதுகைக்குள் ப்ரவேசித்தேன்** *என்ற அர்த்தமும் குறிப்பால் வருவது.*

*ஸ்ரீ ஸ்வாமி தேஶிகனின்,* **த்ரமிடோபநிஷந்நிவேஶ** *ப்லோகத்திற்கும் இதே ரீதியில்தான் அர்த்தம் ஸ்வரஸப்படுகிறது.*

*சரி. நம்மாழ்வார் தாமே பாதுகையாகிவிட்டார். ஏற்கனவே பெருமாளுக்குத் திருப்பள்ளியாகிய ஆதிஶேஷனின் இன்னொரு வடிவமான பாதுகைக்கு ஶடாரியான நம்மாழ்வாரின் அம்சமும் சேர்ந்துவிட்டது. அதனால் பெருமாளின் பாதுகை ஸ்ரீ ஶடாரி.*

*அதற்கும் முன்பாகவே பெருமாளின் பாதுகைக்கு ஸ்ரீ ஶடாரி என்றுதான் பெயராம். நம்மாழ்வாரின் அவதாரம் 5100 சொச்சம் வருஷம் ஆகிறது. யுகாந்தரமாகவே, பல கோடி வர்ஷங்களாகவே, பாதுகைக்கு ஸ்ரீ ஶடாரி என்றுதான் பெயராம்.*

*பாதுகா ஸஹஸ்ரத்தின் ஸமாக்யா பத்தத்தியில் வந்தே* **விஷ்ணுபதாஸக்தம் தம்ருஷிம் தாம் ச பாதுகாம்** *என்று சாதிக்கிறார் ஸ்வாமி தேஶிகனும்.*

*நம்மாழ்வாரின் அம்ஶமாவதற்கு முன்னமே பாதுகைக்கு ஶடாரி என்று திருநாமம்.*

*நம் ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆசார்ய பரம்பரையில் ஆறாவது பீடாதிபதியாய் மாற்றாரும் கூட அன்புடன் நம்மாண்டவன் என்று விரும்பும்படி எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் தேரழுந்தூர் ஆண்டவன் பரதாழ்வானைப் போல் ஸ்ரீ பாதுகா உபாஸகா: அத்புதமாக உரை செய்தருளியுள்ளார் ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரத்திற்கு.*

*மேற்கண்ட ஶ்லோகத்தின் உரையில் பெருமாளின் பாதுகை ஏற்கனவே ஶடன் என்று அஸுரனை ஸம்ஹரித்திருப்பதால் ஶடாரி என்ற பெயர் பெற்றது. இந்த விஷயம் பாஞ்சராத்ரத்தில் உள்ளது என்று சாதித்துள்ளார். மற்ற உரையாசிரியர்களும் இதை ஸாதித்துள்ளனர்.*

*அடியேனுக்கு அப்போதும் ஒரு கேள்வி உண்டு. எந்த பாஞ்சராத்ர ஸம்ஹிதையில் இந்த விஷயம் உள்ளது? அநேக பாஞ்சராத்ர ஸம்ஹிதைகள் கிடைப்பதில்லை. சரி பாதுகைக்கு ஶடாரி என்ற பெயர் ஏற்கனவே உண்டு என்றாலும், ஸ்வாமி தேஶிகன் பாதுகையை ஒரு தேவியாக*

பரமபக்தியோடு உபாஸித்திருப்பதுதான் ஏன்?

பாதுகா தேவியின் பரம கருணையால் அடியேனுக்கு ஸந்தேஹம் நீங்கியதை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

ப்ரக்ருதம் ஸ்ரீமத் ஆண்டவனின் திவ்ய நியமனத்தினுல், ஸ்ரீ R.R. ஸ்வாமி உத்ஸாஹப்படுத்தினுர். அடியேன், 1955ல் ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவனுல் ''பூர்வாஶ்ரமத்திலேயே தொங்கப்பட்ட'' ஸ்ரீரங்கநாத பாதுகை பத்ரிகையின் ஸமஸ்த ப்ரதிகளையும், digitize செய்ய ஆரம்பித்தேன். சுமார் இரண்டு வர்ஷங்களாக இந்த கைங்கர்யம் நடக்கிறது. ஆனுலும் பெரிய சிக்கல். 1955ல் ஆரம்பிக்கப்பட்டு, நடுநடுவில் நின்றுபோய் மீண்டும் 1964ல் ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் ஆச்ரம ஸ்வீகாரம் ஆன பிறகு மீண்டும் ஆரம்பித்து தொடர்ந்து விடாமல் நம் பாதுகை வெளிவருகிறது.

அக்காலத்திய பல ஸௌகர்யக் குறைவுகளால் எல்லா ஸஞ்சிகைகளும் ஆச்ரம கார்யாலயத்தில் இல்லை. சுமார் 170 ஸஞ்சிகைகள் விட்டு விட்டு கைவசம் இல்லை. பல முயற்சி செய்ததில் நம் ஆச்ரமத்தின் பரம ஆப்த சிஷ்யர்கள், அபிமானிகள் பல ப்ரதிகளைக் கண்ணே போல் காப்பாற்றி வந்ததை நமக்குத் தந்தனர். அவர்களுக்கு நன்றிக் கடன் பட்டுள்ளோம்.

90 வயதுக்கும் மேற்பட்ட ஸ்ரீமான் T.D. ரங்கராமாநுஜம் (திருவஹீந்த்ரபுரம்) மிகப் பெரும் உதவி செய்தார்.

முன்னுள் ஸுப்ரீம் கோர்ட் ஜட்ஜ் ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் ஸ்வாமியின் தேவிகள் ஸ்ரீமதி ரங்கநாயகி மாமி அநேகம் ப்ரதிகள் தந்தார்.

ஸ்ரீமான் Halls Road கண்ணன் என்று ப்ரஸித்தி பெற்ற நம் பரம ஆப்தர் சில அபூர்வ ப்ரதிகளைத் தந்தார்.

German Book House ஸ்ரீமாந் சேஷாத்ரி (C.I.T. Nagar) சில ப்ரதிகள் தந்தார்.

ஸ்ரீமான் C.B.I. ரங்காச்சாரி, (அநகாபுத்தூர்) அபூர்வமான ப்ராசீன ப்ரதிகளைத் தந்து உதவினார்.

இன்னும் சில ப்ரதிகள்தான் கிடைக்கவில்லை. இந்த வ்யாஸத்தோடு ஒரு விண்ணப்பத்தைச் சேர்த்துள்ளேன். மிகவும் க்ருபை பண்ணி, யாரிடம் அந்த ப்ரதிகள் இருக்கிறதோ, இருக்குமானால், அவர்கள் தந்து உதவ வேண்டும் என்று ப்ரார்த்திக்கிறேன்.

எல்லாம் சேர்த்து ப்ரக்ருதம் ஸ்ரீமத் ஆண்டவனின் 75ஆவது திருநக்ஷத்ர பூர்த்தி வைபவம் இந்த வருடம் சென்னையில் நடைபெறும்போது, ஸ்ரீமத் ஆண்டவனின் திருக்கரத்தாலேயே CD யாக வெளியிடப்படும். நம் ஆண்டவனின் பரமானுக்ரஹத்துடன் ஸ்ரீ ரங்கநாதனின் பாதுகா தேவியே பத்ரிகை உருவில் நம்மிடையில் ப்ரதி மாதம் வெளிவந்து நம் இல்லம் தேடிவந்து அருள்கிறாள். எத்தனை எத்தனை மஹோந்நதமான ஸத்விஷயங்கள் பாதுகை பத்ரிகையில் ஆசார்யர்களாலும் மஹான்களாலும் அநுக்ரஹிக்கப்படுகின்றன !

இந்தப் பழைய பாதுகா பத்ரிகைளை க்ரோடீகரணம் செய்து வந்தபோது 1958 பங்குனி (ஹேவிளம்பி) பத்ரிகையில் இந்த வ்யாஸத்தில் நமக்கு உண்டாகும் இன்னபிற சங்கைகளைத் தீர்க்கும்படியாக அபூர்வமான வ்யாஸம் ஒன்று உள்ளதை ஸேவித்தேன்.

ஸத்ய லோகத்தில் ப்ரஹ்மாவும், பின்னர், வைவஸ்வத மநுவும் ஆராதித்த ஸ்ரீரங்கநாதனை, ப்ரணவாகார விமாநத்தோடு அயோத்யைக்கு எழுந்தருளப் பண்ணினார் இக்ஷ்வாகு சக்ரவர்த்தி. அதற்காகக் கடும் தபஸ் பண்ணியிருந்தார்.

அயோத்யையில் ஸ்ரீரங்கநாதனைப் பல மஹர்ஷிகள் ஸேவித்து வந்தனர். அவர்களோடு ஶடன் என்கிற

அஸுரன் ரிஷிவேஷம் போட்டுக் கொண்டு வந்து ஸ்ரீரங்கநாதனின், மஹிமைமிக்க, உயர்ந்த ஹாரத்தைத் திருடிக் கொண்டு போனான்.

இக்ஷ்வாகு மஹாராஜா ரொம்ப வருத்தப்பட்டார். ஸ்ரீரங்கநாதனைப் ப்ரார்த்தித்தார். பெருமாளும் தம் பாதுகையை அனுப்பினார். அந்த தேவி (தேவியாகப் புறப்பட்டாள்) ஶடனைத் தேடிச் சென்றாள்.

தப்பிப்பதற்காக ஶடன் பெரிய மரமாக மாறி, தன் ஸகாக்களையும் மரமாக உருவெடுக்க வைத்து பெரிய காடுபோல இருந்தாள்.

பாதுகா தேவி சடனைக் காணாமல் ஸ்ரீரங்கநாதனைத் த்யானம் செய்தார்.

ஶடாஸுரனின் வேஷம் புரிந்தது. பாதுகா தேவி உடனே காட்டுத் தீயாக மாறி அந்த காடாக இருந்த அஸுரர்களை எல்லாம் எரித்து பஸ்மமாக்கினாள்.

ஸ்ரீரங்கநாதனின் ஹாரத்தையும் மீட்டாள். இக்ஷ்வாகுவும், வஸிஷ்டரும் மகிழ்ந்து அந்த திவ்யஹாரத்தை பெருமாளுக்குச் சார்த்தி மகிழ்ந்தனர். பாதுகைகளுக்கு அன்று முதல் ஶடகோபம் என்கிற திருநாமம் ஏற்பட்டது.

இந்த வ்ருத்தாந்தம் ஸ்ரீ பாஞ்சராத்ரத்தில் பௌஷ்கர ஸம்ஹிதை 49ஆம் பரிச்சேதம் ஶடகோப வ்ருத்தாந்த: என்று உள்ளதை பூர்ணமாக 34 ஶ்லோகங்களையும் எழுதி மிக அழகாக ஸ்ரீரங்கம் ஆராதகர் R. ராகவ பட்டர் என்ற ஸ்வாமி விளக்கியுள்ளார். இது 1958 ஹேவிளம்பி பங்குனி பாதுகையில் ப்ரசுரமாகி உள்ளது. இதே விஷயம் சுருக்கமாக வைகானஸஸங்கரஹத்திலும், அத்ரி ஸம்ஹிதை (வைகானஸம்)யிலும் உள்ளதை ப்ரமாணத்துடன் எழுதி விளக்கியுள்ளார்.

பவித்ரமான ஆறு கங்கை எப்படிப் பெண் வடிவில் தேவியோ அதேபோல் பரமனின் பவித்ரமான பாதுகையும்

தேவி. ஸ்வாமி தேஶிகன் பாதுகா ஸஹஸ்ரம் முழுதும் ''தேவி ! தேவி !'' என்று கசிந்து உருகி ஸ்தோத்ரம் செய்துள்ளது உயர்ந்த ப்ரமாணங்களை ஒட்டித்தான்.

ஸ்ரீ தேஶிகன் ஸ்ரீ ஸூக்தியே ப்ரமாணம்தானே ! பாதுகா தேவியை ஸாக்ஷாத்கரித்தல்லவா ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம் அருளிச் செய்தார்.

Srimathe Rangaramanuja Mahadesikaya Namaha

## We seek your help

## AN APPEAL BY THE EDITOR

As per the divine instruction of His Holiness Srimad Andavan Sri Rangaramanuja Mahadesikan, Sri Ranganatha Paduka issues (since 1955 to date) are being digitized for preservation and distribution. Almost 99% (about **600** issues) of the Kainkaryam is over.

Yet few old issues are to be traced. It is earnestly requested that, If any devotee, is preserving the following issues, kindly help us to digitize them also, so as to complete the kainkaryam in full. Please help our Sampradayam to preserve **Sri Ranganatha Paduka.**

**Sri Rangapanatha Paduka issues requested**

| | | | | |
|---|---|---|---|---|
| 1957 | March | துர்முகி | பங்குனி | 1 issue |
| 1957 | April to Sep. | ஹேவிளம்பி | சித்திரை to புரட்டாசி | 6 issues |
| 1957 | Dec. | ஹேவிளம்பி | மார்கழி | 1 issue |
| 1976 | Oct. | நள | ஐப்பசி | 1 issue |

in all 9 issues

Sreemathe RangaRamanuja Mahadesikaya Namaha

Srirangam Srimath Andavan Ashramam web site ;

www.andavan.org

Web site of USA branch of Ashramam: www.ramanujamission.org.

Srirangam Srimath Andavan Ashramam News groups

Ashramam News Group Address : andavan@yahoogroups.com

Ashramam news group in USA : ramanujamission@yahoogroups.com

To enroll for the news groups, you may please visit the respective web sites

**Subscription information for"Sri Ranganatha Paduka",monthly**

For Indian Residents
Annual Rs. 200 , 5 years Rs. 1000, 10 years RS. 2000.

For Overseas Residents.(Including Airmail postage)

(Annual subscriptions are not available due to logistics issues

| | | |
|---|---|---|
| Print Edition : | 5years US $ 200, | 10 years US$ 400 |
| Print plus E Edition | 5 years US $ 300, | 10years US$ 600. |
| E Edition only | 5 years US$ 100, | 10 years US$ 200. |

Payment mode;

**Cheques/ D.D. encashable at Chennai are to be drawn in the name of**

**"Sri Ranganatha Paduka" and sent to Srirangam Srimath Andavan Ashramam,**
**No. 31, Desikachari Road, Mylapore, Chennai 600004. India**

**Payments by USA residents may be made to Sri Ramanuja Mission Inc. For details contact Sri. Aravamudhan at ramanaravamudhan@yahoo.com.**

**For any further information on the above matters , you may please contact e mail to Sri R.Srinivasan at r_sv@yahoo.com.**

|| ஶ்ரீ: ||

# பரமைகாந்திகளின் ஸ்வஸ்திவாசனம்

(ஸ்ரீ.உ.வே. வில்லூர் நடாதூர் கருணாகராசார்யர் ஸ்வாமி, சென்னை)

*1998ல் ஒரு ஸமயம் வடுவூர் சக்ரவர்த்தித் திருமகனின் அத்புதமான திருமஞ்ஜன உத்ஸவம் ஸேவிக்கும் பாக்யம் கிடைத்தது.*

*திருமஞ்ஜனம் ஆனவுடன் அஶ்வமேத மந்த்ர பாராயணத்தைச் சக்ரவர்த்தித் திருமகன் முன்னிலையில் செய்ய வேண்டும் என்று அவர் ஏற்பாடு. அப்பொழுது மன்னார்குடியில் வாஸம் செய்து வந்த வேத பாஷ்யமணி ஸ்ரீ மதுபயவே கனபாடி ஸ்ரீ தேசிகாசார்ய (இப்பொழுது ஸ்ரீமதாண்டவன் ஆச்ரம ஸ்ரீகார்யம் ஆகவும் பணியாற்றும்) ஸ்வாமி தலைமையில் அவர்களுடைய சிஷ்யர்கள் குழு அஶ்வமேத மந்த்ர பாராயணம் செய்ய வந்திருந்தது. ஸ்வாமி அடியேனை அழைத்து ''இன்றைய அஶ்வமேத பாராயண வழக்கமான ப்ராஹ்மண பாராயணம் இல்லை. ஸம்ஹிதையில் வரும் அஶ்வமேத மந்த்ரங்களை பாராயணம் செய்யப் போகிறோம். அந்த மந்த்ரங்களின் ஆரம்பங்களைக் காட்டிப் பட்டியல் தயாரித்துள்ளேன். அதைக் குறித்துக் கொண்டு பாராயணத்தில் கலந்து கொள்ளத் தயார் செய்துகொள்ளவும்'' என்று அருளி ஒரு பட்டியலைத் தந்தருளியபடி. அப்பொழுது அடியேன் ஸ்ரீ ஸாதவலேகர் பதிப்பில் உள்ளதொகுப்பை அந்த ஸ்வாமியிடம் காட்டினேன். இரண்டு பட்டியலிலும் இரண்டு இடங்கள் மட்டுமே வரிசை மாறி இருந்தது. ஸ்வாமி அதைப் பற்றி விளக்கம் அருளினார். அன்று எம்பெருமானுக்கு விபவ நிலையில் அஶ்வமேத யாகத்தை அயோத்தியில் வஸிஷ்டர் நடத்தி வைத்தது போல அந்த வஸிஷ்டரின் கோத்ரத்தினரான நம் ஸ்வாமி வடுவூரில் அர்ச்சையில் அஶ்வமேத மந்த்ர பாராயணத்தை நடத்தி வைத்தார்.*

''இப்படியே இந்த ஸம்ஹிதையில் வரும் மந்த்ரங்களையும் ப்ராஹ்மணங்களையும் மூன்றும் அஷ்டகம் எட்டு மற்று ஒன்பது ப்ரஶ்னங்களையும் இணைத்துப் பாராயணம் செய்தால் தானே ஏகாதஶீயில் அஶ்வமேத பாராயணம் முழுமையாக அமையும். ஸ்வாமி அப்படிச் செய்யும்படி ஏற்பாடு செய்யக் கூடாதா?'' என்று அடியேன் ஸ்வாமியிடம் விண்ணப்பம் செய்தேன்.

''ஏதோ இன்று இதைச் செய்ய இயன்றதே என்று இன்பம் பெறலாம். அடியேன் நானாக இதை வலியுறுத்துவதில்லை.'' என்று அருளினார் அந்த ஸ்வாமி.

ஸ்ரீ ஸாதவலேகரின் பதிப்பில் ஏழாம் காண்டம் ஐந்தாம் ப்ரச்னம் இருபத்திரண்டாவது அனுவாகத்திற்கு ம்ருகாரேஷ்டி என்று தலைப்பு ஆனால் இருபத்தி ஓராவது அனுவாகத்திற்கு அஶ்வமேதக் குதிரைக்கு நோய் குறை வந்தால் அதற்குச் செய்ய வேண்டிய ப்ராயஶ்சித்தங்களின் பட்டியல் (ப்ராஹ்மணம்) தரப்பட்டுள்ளது. இதற்கு இணைப்பாக மூன்றும் அஷ்டகம் ஒன்பதாம் ப்ரஶ்னத்தில் பதினேழாவது அனுவாகத்திலும் ப்ராயஶ்சித்தம் சொல்லப்படுகின்றது.

அதில் இருந்து ம்ருகாகரேஷ்டி என்று ஒரு இஷ்டி ப்ராயஶ்சித்தம் ஆகக் கூறப்படுவது தெரிந்தது. வேதமே ம்ருகாகரம் என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளது. ம்ருகாரேஷ்டி என்ற சொல் க்ருஷ்ண யஜுர் வேதத்தில் காணக்கிடைக்கவில்லை. தஶ ஹவிஷம் ஆன இஷ்டி என்றுதான் உள்ளது. ஸூத்ரகாரர்தான் ம்ருகாரேஷ்டி என்ற பெயர் சூட்டி இந்த இஷ்டியைக் குறிப்பிடுகின்றார்.

அடியேன் குழம்பத் தொடங்கினேன். ம்ருகாகரேஷ்டி என்பதும் ம்ருகாரேஷ்டி என்பதும் ஒன்றுதானா? வெவ்வேறா? ஒன்றாக இருப்பின் வேதம் வழங்கிய பெயரான **ம்ருகாகரேஷ்டி** ஸூத்ரங்களில் எப்படி ம்ருகாரேஷ்டி ஆயிற்று?

இதற்கு விடை காண்பதற்கு முன் ம்ருகாகரேஷ்டி என்று அடியேன் உணர்ந்து கொள்ளும்படி வேதம் சொல்லும் இஷ்டியின் பின்னணியையும் சிறிது பார்ப்போமே.

ஸ்ரீ ஸாதவலேகரின் பதிப்பில் ஏழாம் காண்டம் ஐந்தாம் ப்ரச்னம் இருபத்திரண்டாவது அனுவாகத்திற்கு ம்ருகாரேஷ்டி என்று தலைப்புக் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

அதற்கு முந்தியதான இருபத்தி ஒராவது அனுவாகத்திற்கு அஶ்வஸ்ய ரோகாதி நிமித்தே ப்ராயஶ்சித்தி: (அஶ்வமேதக் குதிரைக்கு நோய் முதலிய ஏற்படின் அதற்குச் செய்ய வேண்டிய ப்ராயஶ்சித்தங்கள்) என்று தலைப்பு தரப்பட்டிருக்கிறது. அதில் குதிரைக்கு வரக் கூடிய நோய்கள் போன்ற சில குறைகள் பற்றிச் சொல்லி அவை வரின் செய்யப்பட வேண்டிய ப்ராயஶ்சித்தங்கள் பட்டியல் இடப்பட்டுள்ளன. வரிசை எண்கள் இட்டு அவைகளின் பட்டியலைத் தருகின்றேன் பாருங்களேன்!

**1. குதிரைக்கு ஜ்வரம் (குதிரைக் காய்ச்சல்) வந்தால் !**

அஶ்வமேத யாகத்தில் பலி கொடுக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டு பூமியை வலம் வரும் குதிரைக்கு ஏதேனும் நோய் வந்தால் அதனை வேள்வியில் பயன்படுத்துவது தவறாகும். அதற்காகப் பூமியில் ஏற்கனவே வலம் வந்துவிட்ட அந்தக் குதிரையை மாற்றுவதும் கூடாது. எனவே இப்படி நேர்ந்துவிட்ட தவறுக்குக் கழுவாயாக அதாவது ப்ராயஶ்சித்தமாக அக்னி என்னும் தேவதையைக் குறித்து எட்டுப் புரோடாசங்களை அர்ப்பணித்திட வேண்டும். ஸோமன் என்கிற தேவதைக்குச் சருஹோமம் செய்தல் வேண்டும். ஸவிதா என்கின்ற தேவதைக்கு எட்டு புரோடாசங்களை அர்ப்பணித்திட வேண்டும் என்று வேதபுருஷன் இந்த அனுவாகத்தின் தொடக்கத்தில்-

**ஆக்நேயோऽஷ்டாகபாலஸ்ஸௌம்யச்சருஸ்ஸாவித்ரோऽஷ்டாகபால:** என்று அறிவித்திடுகின்றான்.

*இது தைத்திரீய ப்ராஹ்மணம் மூன்றும் அஷ்டகம் ஒன்பதாம் ப்ரச்னத்தில் (அச்வமேதம் - இரண்டாம் ப்ரஶ்னம் என்று ப்ரஸித்தி பெற்றுள்ள ப்ரஶ்னத்தில்) பதினேழாவது அனுவாகத்தில்*

**யத்யஶ்வம் உபதபத் விந்தேத் ।**
**ஆக்னேயமஷ்டாகபாலம் நிர்வபேத் ।**
**ஸௌம்யம் சரும் । ஸாவித்ரமஷ்டாகபாலம் ।**

*என்று தொடங்கி விவரணம் செய்யப்படுகின்றது.*

**௨. குதிரை முடம் ஆனால் !**

*அடுத்துக் குதிரை நொண்டி ஆக இருப்பின் அதற்குப் ப்ராயஶ்சித்தமாக பூஷா என்கிற தேவதைக்குச் சரு ஹோமம் செய்ய வேண்டும் என்று தைத்திரீய ஸம்ஹிதையில் ஏழாம் காண்டம் ஐந்தாம் ப்ரஶ்னம் இருபத்தோராவது அனுவாகத்தில்* **பௌஷ்ணஶ்சரு:**

*என்ற ரத்னச் சுருக்கமாகச் சொல்லப்படுகிறது. இது தைத்திரீய ப்ராஹ்மணம் மூன்றும் அஷ்டகம் ஒன்பதாம் ப்ரச்னத்தில் (அஶ்வமேதம் - இரண்டாம் ப்ரஶ்னம் என்று ப்ரஸித்தி பெற்றுள்ள ப்ரஶ்னத்தில்) பதினேழாவது அனுவாகத்தில்*

**பௌஷ்ணம் சரும் நிர்வபேத் । யதி ச்லோணஸ் ஸ்யாத்।**

*என விவரணம் செய்கின்றது.*

*இங்கு* **மஹதீ** *தேவதா என்று மூலத்தில் உள்ளது. மேலெழுந்தவாரியாகப் பார்ப்பின் இதற்குப் பெரிய தேவதை என்றப் பொருள் தோன்றும். ஆனால் வேத பாஷ்யகாரர்கள் இதற்குச் சிறு தேவதை என்றே பொருள் கொள்கின்றனர். அந்தச் சிறிய தேவதைதான்* **ருத்ரன்** *என்று வேதமே விளக்குவதையும் எடுத்துக் காட்டியுள்ளனர். ஆக மூலத்தில் உள்ள* **மஹதீ** *என்ற சொல் விபரீத லக்ஷணை அதாவது எதிர் மறைப் பொருளில் வந்த சொல் ! எனவே ருத்ரனைப் பர தேவதை என்று* **மஹதீ** *தேவதா என்ற தொடர்*

மூலம் வேதம் குறிப்பிடுவதாக வேதம் வல்லார் கொள்ளமாட்டார்கள்.

4. குதிரை லாயத்திற்கு வரவில்லை என்றால் !

ஸம்ஹிதையில் அடுத்து

வைஶ்வானரம் த்வாதஶ கபாலம் நிர்வபேத் ம்ருகாகரே யதி நாSSகச்சேத் என்று ஒரு ப்ராயஶ்சித்தம் சொல்லப்படுகிறது. இதனை அப்படியே ஓதி ப்ராஹ்மணம் விளக்கம் அருளிடுகின்றது.

ம்ருகாரம் என்பதை ம்ருக - ஆகரம் என்று உடைத்துப் பொருள் உணர வேண்டும் ஏன்? மேற்படி ஸம்ஹிதைக்கு உள்ள பதபாடத்தில் ம்ருகாகர இதி ம்ருக-ஆகரே என்று வேஷ்டனை சொல்லும் மரபு இருக்கின்றது. ஆகரம் என்பது தங்கும் இடம். ம்ருகாகரம் என்பது விலங்குகள் தங்குவதற்கான இடம் இங்குக் குதிரை லாயம் என்பது பொருள்.

பகலில் வெளியில் ஸஞ்சாரம் செய்ய அனுப்பப்பட்ட வேள்விக்கான குதிரை அதன் லாயத்திற்கு வந்து சேராது போனால் அது ஒரு பிழை. அதற்காகச்செய்யப்பட வேண்டிய ப்ராயஶ்சித்தம் இங்கே சொல்லப்படுகின்றது.

அம்ஹோமுக் (பாவத்திலிருந்து விடுவிப்பவன்) என்று சிறப்பிக்கப்படும் அக்னி என்கிற தேவதையைக் குறித்து எட்டு கபாலங்களில் புரோடாசத்தை அர்ப்பணிக்கும் இஷ்டியைச் செய்ய வேண்டும் என்றபடி.

5. குதிரை காதல் வேட்கை உற்றால் !

இதன் மேலே குதிரை காதல் நோயில் தவித்தால் அகும்ஹோமுக் என்று சிறப்பிக்கப்படும் அக்னி என்கின்ற தேவதைக்கு எட்டுப் புரோடாசங்கள் அர்ப்பணிக்க வேண்டும். ஸூர்யன் என்கிற தேவதைக்கு பாலை ஹோமம் செய்ய வேண்டும். வாயு என்கிற தேவதைக்கு நெய்யை ஹோமம் செய்ய வேண்டும் என்று ப்ராயஶ்சித்தங்கள் விதிக்கப்படுகின்றன.

**6. குதிரை கோவேறுக் கழுதை அல்லது பெண் குதிரையைப் புணர்ந்து வந்து விட்டால் !**

*இதற்கும் மேலே கூறிய ப்ராயஶ்சித்தமே என்று*

**அக்நயேऽகும்ஹோமுசேऽஷ்டாகபாலஸ்ஸௌர்யம் பயோ வாயவ்ய ஆஜ்யபாக:**

*என்று ஸம்ஹிதையில் ரத்னச் சுருக்கமாகச் சொல்லப்பட்டுள்ளதை ப்ராஹ்மணம் விவரிக்கிறன்றது.*

*அஶ்வமேதத்தில் பலி கொடுக்கப்பட வேண்டிய குதிரை ஒரு விலங்கு தானே ! அது கூட ப்ரஹ்மசர்யத்துடன் இருக்க வேண்டுமா? என்று ஓர் ஐயம் சிலருக்கு வரலாம்.*

*வேள்வி செய்பவருக்கு எப்படி நியமமோ அப்படியே அந்த வேள்வியில் பயன்படுத்தப்படும் குதிரைக்கும் நியமம் இருக்க வேண்டுமாம். ஏன்? அந்தக் குதிரை யஜமானனின் வடிவம். எனவே இந்த நியமம் என்கிறுன் வேதபுருஷன்.*

**யஜமாநோ வா அஶ்வ:** *என்று இங்கு ப்ராஹ்மணம். இங்கு* **யஜமாந: வை, அஶ்வ:** *என்று பதங்கள். யஜமானனே குதிரை என்பது இதன் பொருள்.*

*ஆக வேள்வி செய்யும் யஜமானனைப் போலவே வேள்வியில் அவனுக்கு உதவும் குதிரையும் ப்ரஹ்மசர்யத்துடன் இருக்க வேண்டும்.*

*இதனுல் தான் போலும் ஶ்ராத்தத்தில் வரிக்கும் ப்ராஹ்மணர்களிடம் ஶ்ராத்தத்தில் அவனுக்கு உதவி செய்யும் அவர்களும் ப்ரஹ்மசர்யத்துடனே இருக்க வேண்டும் என்பதை நினைவூட்டி ''ஸ்வாமிகளே ! இப்பொழுது தொடங்கி ஶ்ராத்தம் செய்யும் அடியேனும் அதில் அடியேனுக்கு உதவி செய்தருளப் போகும் தாங்களும் ப்ரஹ்மசர்யம் முதலிய நியமங்களுடன் கோபத்தை விலக்கிக் கொண்டு தூய்மையில்*

*எப்பொழுதும் விழிப்புடன் இருக்க வேண்டும்'' என்று விண்ணப்பம் செய்ய வேண்டும் என்பது ஆன்றோர்கள் நெறி. இதனைத் திருக்குடந்தை தேஶிகன் அருளிச் செய்த ஶ்ராத்த ப்ரயோகத்தில் காணலாம்.*

**அக்ரோதனைச் ஶௌசபரைஸ் ஸததம் ப்ரஹ்மசாரிபி: ।**
**பவிதவ்யம் பவத்பிஶ்ச மயா ச ஶ்ராத்தகாரிணா ॥**

*என்ற ஶ்லோகத்தைச் சொல்லி அவர்கள் திருவடியில் வணங்கி நியமங்களை நினைப்பூட்டும் விண்ணப்பத்தைச் செய்ய வேண்டும்'' என்று அருளிடுகின்றார் திருக்குடந்தை தேஶிகன்.*

*இஞ்சி மேடு ஸ்ரீமத் அழகியசிங்கர் சின்ன அழகிய சிங்கர் ஆக எழுந்தருளி இருந்த போது சில காலம் நோவு சாற்றிக் கொண்டிருந்தபடியாம். அப்போது அவருக்குச் சிறப்புப் பணிவிடை செய்யத் தற்பொழுது ஸ்ரீமத் அஹோபிடமடத்தின் ஸ்ரீகார்யமாகத் திகழும் ஸ்ரீமதுபயவே மஹாவித்வான் சூராத்யாயீ பழவேரி சடகோபாசார்ய ஸ்வாமியின் திருத்தகப்பனாரின் திருநாமத்தைச் சிபாரிசு செய்தார்களாம். அப்பொழுது அவர் புதியதாகத் திருமணம் செய்து கொண்டிருந்த இளைஞர். எனவே பெரிய அழகியசிங்கராக எழுந்தருளி இருந்த காருக்குறிச்சி ஸ்ரீமதழகியசிங்கர் மிகவும் தயங்கி அவர் சின்ன ஸ்ரீமதழகியசிங்கர் திருமேனி பாங்காகும் வரை ப்ரஹ்மசர்ய நியமத்துடன் இருந்து அந்தச் சிறப்புப் பணிவிடையினைச் செய்ய வேண்டும் என்று நயம் பட அருளிய அழகைத் தம் திருத்தகப்பனார் பல முறை நினைந்து நினைந்து தம்மிடம் கூறி அருளியதாக ஸ்ரீ பழவேரி ஸ்வாமி அருளிச் செய்ய அடியேன் கேட்டிருக்கின்றேன்.*

# பெங்களூர் ஸ்ரீபுரம் ஸ்ரீமதாண்டவன் ஆச்ரமம்

*பெங்களூர் ஸ்ரீபுரத்தில், ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ஆஶ்ரமம் ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் ஸந்நிதியில் 28.11.09 அன்று தொடங்கி, திருப்பவித்ரோத்ஸவம் 1.12.09 அன்று பூர்ணாஹுதியுடன் முடிவுற்றது. திருமங்கையாழ்வாரின் திருநக்ஷத்ர உத்ஸவமும் சேர்ந்து கொண்டதால் - ஸேவாகாலம் வெகு நன்றாக அமைந்திருந்தது. பல ஸ்வாமிகள் ஸேவாகாலத்தில் ஶ்ரத்தையுடன் அந்வயித்தனர். ஸ்த்ரீகளும் அநேகர் கலந்து கொண்டனர். ஸ்வாமிகளுக்கு உசித ஸம்பாவனையுடன், வேஷ்டி மற்றும் சால்வைகள் ஸமர்ப்பிக்கப்பட்டன.*

*1.12.09 திருப்பவித்ரோத்ஸவ முடிவு அன்று பெருமாளுடன் கூட திருமங்கையாழ்வாரும் திருமஞ்ஜனம் கண்டருளினார்.*

*ஆராதகர்களும், கைங்கர்ய பரர்களும், மற்றும் ஆச்ரம நிர்வாஹிகளும் சிறந்த ஏற்பாட்டைச் செய்திருந்தனர்.*

*ஸ்ரீமதாண்டவன் அனுக்ரஹத்துடன், திருப்பவித்ரோத்ஸவம், மற்றும் திருமங்கையாழ்வார் திருநக்ஷத்ரமும் நன்கு நடந்தேறியது.*

*தாஸன்*

*கண்ணன்*

*ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ஆச்ரமம், ஸ்ரீபுரம், பெங்களூர் - ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் ஸந்நிதியில் 8.12.09 அன்று, சின்னாண்டவன் ஸ்ரீ பாதுகாஸேவக ராமாநுஜ மஹாதேஶிகன் திருநக்ஷத்ரம் ஸேவாகாலம், சாற்றுமுறை, ஆசார்ய ஸம்பாவனையுடன் சிறப்புடன் நடந்தது.*

*சுண்டப்பாளையும் ஸ்ரீ.உ.வே. வாஸுதேவாசார்யர் ஸ்வாமி சின்னாண்டவன் திவ்ய பாதுகைகளை எழுந்தருளப்பண்ணியிருந்தார். பாதுகாராதனம் செய்யப்பட்டு, ஸ்ரீபாத தீர்த்தமும், ஸ்ரீ பாதுகைகளும் அனைவருக்கும் ஸாதிக்கப்பட்டது. ப்ரஸாத விநியோகமும் செய்யப்பட்டது.*

*ப்ரக்ருதம் ஸ்ரீமதாண்டவன் அநுக்ரஹத்துடன் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் நன்கு நடந்தது.*

*தாஸன்*

**கண்ணன்**

|| श्रीः ||

# ஸ்ரீ லக்ஷ்மீநாராயண ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள் திருக்கோயில்

## அக்ரஹாரம், சிங்கனூர் க்ராமம், திண்டிவனம்.

## வேண்டுகோள்

*திண்டிவனம் விழுப்புரம் மெயின் ரோடில் திண்டிவனத்திலிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தூரத்தில் சிங்கனூர் க்ராமத்தில், அக்ரஹாரத்தில், மிகவும் ப்ராசீனமான ஸ்ரீ லக்ஷ்மீ நாராயண பெருமாள் கோயிலில் ஸ்ரீ பத்மாவதி நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாளை எழுந்தருளப்பண்ணி நூதன மஹாஸம்ப்ரோக்ஷணம் வருகிற சித்திரை மாதத்தில் நடக்கிறபடி, ஆலயத்திருப்பணிகள், மஹான்கள் பக்தகோடிகள் ஸஹாயத்தில் பாதி முடிந்துள்ளது. மீதமுள்ள பணிகளை முடித்து மஹாஸம்ப்ரோக்ஷணம் நடத்தி வைக்க ஆஸ்திகர்கள், பக்தர்கள், மஹான்கள் தர்மசிந்தனை உடையவர்கள் நன்கொடையளித்து ஸஹாயம் செய்ய ப்ரார்த்திக்கிறேன்.*

*எல்லோருக்கும் நீண்ட தனதான்ய ஸம்ருத்தியுடனும், குடும்பத்தில் சீக்ரமாக விவாஹ, சந்ததி ப்ராப்த்யாதி அநேக சுபப்ராப்திகளுடனும் ச்ரேயஸ்ஸுடனும் மேன்மேலும் அபிவிருத்தியடையவும் எம்பெருமானை ப்ரார்த்திக்கிறேன்.*

*அழைத்தால் நான் (S. அஹோபிலேசன்) நேரில் வருகிறேன்.*

**S. அஹோபிலேசன்,** *யஜுர்வேத பண்டிதர், (ஆலய ஸ்தாபகர்), 18/22, அரிசிக்காரத் தெரு, மைலாப்பூர், சென்னை-600 004* Cell **: 94 44 84 62 65.**

**Issued by : சிங்கனூர் ராகவாச்சார்,**
*ஆகம ஆராதகர் / அர்ச்சகர், கல்யாண ப்ருஹஸ்பதி*
Please visit : **www.nithyakalyanam.com**
**Mobile : 98 40 59 28 28**

॥ ஸ்ரீ: ॥

# ஸங்கல்ப ஸூர்யோதயம்

*(வ.ந. ஸ்ரீ.உ.வே.கோபால தேசிகாசார்யர், ஒப்பிலியப்பன் ஸந்நிதி)*

விஷ்ணுவின் ஸங்கல்பன் - இந்தப் புருஷனின் (ஜீவாத்மா) தவறான ஞானம், ஸந்தேஹம் போன்ற அழுக்குகளை எல்லாம் விவேகன் போக்கடித்துவிட்டான். அதனால் இவன் இப்போது தெளிந்த ஞானத்துடன் இருக்கிறான். அதனால், உலக ஸுகங்கள், செல்வம், முதலியவற்றில் உள்ள ஆசையை விட்டுவிட்டான். தன்னுடைய ஆத்மாவையே அனுபவிப்பது என்கிற கைவல்யமும் இளப்பமானது என்று தெரிந்துகொண்டான்.

ஆக ஐஶ்வர்யம், கைவல்யம் இவற்றில் ஆசை என்ற சேற்றைத் தாண்டி விட்டான். த்யானம் என்கிற கண்ணாடியில், இந்த ஜீவாத்மா இப்போது மோக்ஷத்தைப் பார்க்கிறான். அதனால், இப்போதே இவன் ஸம்ஸாரம் என்னும் கடலைக் கடந்து, அக்கரையை அடைய விரும்புகிறான்.

ஜீவாத்மா இப்போது நிவ்ருத்தி தர்மம் என்று சொல்லப்படும், மோக்ஷத்தை அடைய வேண்டிய முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறான். இளப்பமான விஷயங்களை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. மூடர்களின் மனதை மயக்கி விடுபவைகள், சூதாட்டம், கெட்ட பெண்களின் ஸஹவாஸம் முதலியவை. அந்த விஷயங்களில் வேறு யாராவது ஈடுபட்டால் கூட, அதைக் கண்டு வெட்கப்படுகிறான். அவர்களுக்காக வருத்தப்படுகிறான்.

இந்த உலகத்தில் கூட த்யானம் அல்லது தவம் செய்து கொண்டும், கர்மாக்களைச் செய்து கொண்டும் பலர் இருக்கின்றனர். ஆனால் ஒருவரும் இந்த ஜீவாத்மாவுக்கு ஈடாக மாட்டார்கள்.

போன்ற திருவடிகளில் இவன் தன் ஆத்ம பரத்தை ஸமர்ப்பித்து விட்டான் (ப்ரபத்தி). அதனுல் யமனுடைய தூதர்கள் கூட இவனிடம் நடுங்குகின்றனர். எல்லாரையும் ஸம்ஹாரம் செய்யும் யமனும் இவனிடம் நடுங்குகிருன். தேவர்கள் கூட இவனிடம் பயப்படுகிருர்கள் - எங்கே தங்கள் இடத்தை இவன் பிடித்துக் கொண்டு விடுவானோ - என்று !! யக்ஷர்கள், அஸுரர்கள், ராக்ஷஸர்கள் எல்லாரும் பயந்து ஓடுகின்றனர்.

இப்படி, பெருமானைத் தவிர வேறு ஒன்றிலும் மனதை வைக்காதவன் இந்த ஜீவாத்மா. புண்ணியம் செய்தவர்களான ஞானிகள் இவனுடைய மஹிமையை அறிந்து கொண்டு, இவனைப் பூஜிக்கிருர்கள். இவன் எங்கே வசிக்கிருனே, அதுவே மிகவும் புனிதமான இடம். அங்கே வசிக்கும் மக்களும் வ்யாதி, துக்கம் ஒன்றும் இல்லாமல், மகிழ்ச்சியுடன் இருக்கிருர்கள்.

என்ன ஆப்ச்சர்யம் ! இவனுக்கு பகவானிடத்தில் இருக்கும் அன்பைவிட, அவன் அடியார்களிடம் இருக்கும் அன்பு இன்னும் அதிகமாக இருக்கிறது.

இந்தப் புருஷன் (ஜீவாத்மா) ப்ரார்த்திக்கிருன் - பெருமானுடைய நாபியில் இருந்து தாமரை பூக்கிறது. அந்தத் தாமரை மலரின் வாசனையைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? அது கூட வேறென்றின் வாசனை தனக்கு வேண்டும் என்று ஆசைப்படுகிறது. எதை? என்னுடைய நாக்கின் நறுமணத்தை.

அந்த நாக்கால் (வாயால்), நான் ''இந்த உலக சுகங்களையும், செல்வத்தையும் எனக்குக் கொடு'' என்று எம்பெருமானை வேண்டமாட்டேன். ஏனென்றல், அவையெல்லாம் ஒரு புல்லைப் போல் அற்பமானவை. இவற்றை விட மேலான கைவல்யத்தையும் (ஆத்மாவை அனுபவிப்பது) கேட்கமாட்டேன். ஏன், எல்லாவற்றையும் விட உயர்ந்ததான மோக்ஷத்தையும் கூடக் கேட்க மாட்டேன்.

ஆனால் நான் ப்ரார்த்திப்பது என்ன? பரிஶுத்தர்களான, தெளிந்த புத்தியை உடையவர்கள் எம்பெருமானுடைய அடியவர்கள். ராஜாவுக்கு, அந்தப் புரத்தில் இருக்கும் ராணிகளைப் போல, பகவானுக்கு அவர்கள் மிகவும் ப்ரியமானவர்கள், அந்த மஹான்களுடைய அனுக்ரஹம்தான் எனக்கு வேண்டும். அந்த அனுக்ரஹம் எப்படிப்பட்டது? மோக்ஷம் என்கிற பகலுக்கு, விடியற் காலையைப் போன்றது.

ஆகையால் இந்த ஜீவாத்மா ஆழ்ந்த யோகத்தில் இருக்கிறான். அம்ருத மயமான ஸமுத்ரத்தில் கலந்த தேன் துளியைப் போல, பகவானிடத்திலேயே நிலைத்திருக்கிறான் - புத்தியை வைத்திருக்கிறான். (அம்ருத மயமான ஸமுத்ரம் = பகவான். தேன்துளி = ஜீவாத்மா). இவனை நானும் பார்த்து, மர்யாதை செய்கிறேன்.

(மதிப்புடனும், மகிழ்ச்சியுடனும் ஜீவாத்மாவிடம் வருகிறான்).

மஹாத்மாவே ! எம்பெருமானிடம் அடிமையையே விரும்பும் நீ மிகவும் பாக்யசாலி.

ஜீவாத்மா - (மகிழ்ச்சி, பரபரப்பு, பயம் இவற்றுடன் ஸங்கல்பனைச் ஸேவித்து, கையைக் கூப்பிக் கொண்டு) ஸ்வாமி! அளவற்ற பெருமையை உடைய தேவரீர் யார் என்று அடியேனுக்குத் தெரியவில்லை. தேவரீர் ஆதி மூலமான ஸாக்ஷாத் பகவானேயா? அல்லது, அவருக்கு மிகவும் நெருங்கிய, வேண்டியவரா?

ஸங்கல்பன் - பாக்யஶாலியே, நான் பகவானின் ஸங்கல்பம் ஆவேன். பகவானுக்கு மிகவும் ப்ரியமான பத்தினி (மனைவி) தயாதேவிதான் (கருணை), அந்த தயாதேவி மக்களிடம் மிகவும் இரக்கம் கொண்டவள். அவள்தான் என்னை உம்மிடம் அனுப்பி இருக்கிறாள். எதற்கு?

பாகவதர்களின் கூட்டத்தில் மிகவும் சிறந்தவர் நீர். உம்மை எண்ணற்ற புண்யங்கள், பாபங்கள் ஆகிற

விலங்குகளில் இருந்து விடுவிக்க வேண்டும். வைகுண்டத்தில் **அமிதௌஜஸ்** என்னும் ஸிம்ஹாஸனத்தில், ஸ்ரீ தேவி, பூமி தேவி, நீளா தேவிகளுடன் எழுந்தருளி இருக்கிறான் பெருமான்.

அந்தப் பெருமானிடம் கைங்கர்யத்துடன் சேர்ந்த பக்தி என்னும் செல்வத்தை உமக்குக் கொடுக்கும்படி, தயாதேவி என்னை இங்கே அனுப்பி இருக்கிறாள். எனக்கும் உம்மைப் பார்க்க வேண்டும் என்று வெகு நாட்களாகவே ஆசை உண்டு. உமக்கு மோக்ஷம் ஆகிற செல்வம் வெகு ஸமீபத்தில் இருக்கிறது. அதனால் நீர் பயப்பட வேண்டாம்.

இப்போது உமக்கு ரஜோ குணம், தமோ குணம் இரண்டும் விலகிப் போய் விட்டனவா? ஸத்வ குணம் நிலையாக இருக்கிறதா? உம்முடைய இந்த்ரியங்கள் இளப்பமான உலக விஷயங்களில் செல்லாமல் இருக்கின்றனவா? அவை முழுமையாக உம்முடைய கட்டுப்பாட்டில் இருக்கின்றனவா? உம்முடைய யோகம் சீராக வ்ருத்தியாகிக் கொண்டிருக்கிறதா? மனம் பயம் இல்லாமல், தெளிவாக இருக்கிறதா? மதுகைடபர்களை வதம் செய்த பகவானுடைய க்ருபை பரிபூர்ணமாக உம்மிடம் இருக்கிறது. உமக்கு எதுதான் கிடைக்காது?

புருஷன் (மகிழ்ச்சியால் தழுதழுத்த குரலுடன்) - என்ன பாக்யம் செய்தேன்! பகவானுடைய தயையால் ஏவப்பட்டு, நீர் இங்கே வந்து எனக்கு அனுக்ரஹம் செய்தீரே. உம்முடைய அனுக்ரஹம் கிடைத்த பிறகு, எவனுக்குப் பலன் கிடைக்குமா என்ற ஸந்தேஹம் ஏற்படும்? வேதாந்தங்களைக் கற்றறிந்த பெரியோர்கள் உம்முடைய மஹிமையை நன்கு அறிவார்கள்.

உம்முடைய கட்டளை நித்யஸூரிகளின் முடிகள் ஆகிற கூட்டில் வசிக்கும் புறா. (அதாவது, நித்ய ஸூரிகளும் உம்முடைய கட்டளையைத் தலையால் தாங்கி, அதன்படி நடக்கின்றனர்).

ப்ரஹ்மா, சிவன் போன்றவர்கள் பல பல அண்டங்களில், தங்கள் தங்கள் ஸ்தானங்களில் (position) இருக்கிறார்களே. அவை எல்லாம் உம்முடைய புருவ நெறிப்பின்படி நடப்பவை ஆகும்.

ப்ரஹ்மா முதல் புழு, செடி வரை எல்லா உலகங்களின் பாரத்தையும் நீர் வஹிக்கிறீர்.

நீர் நினைத்தால், எவனுக்கு எது கிடைப்பதில்லை? நீர் நினைக்காவிட்டால், எவனுக்கு எதுதான் கிடைக்கும்?

ஸங்கல்பன் (தனக்குள்) - இவனுக்கு இப்போது யோகத்தின் நிலை எப்படி இருக்கிறது என்று கேட்க வேண்டும். (உரக்க) அப்பனே, அறிவில்லாதவர்களுக்கு எளிதில் கைகூடாதது யோகம். அறிவாளிகள் ஆர்வத்துடன் முயற்சி செய்வது யோகம். அந்த யோகத்தின் நிலை உன்னிடம் எப்படி இருக்கிறது?

புருஷன் (ஜீவாத்மா) - ஸ்வாமி, தெளிவாக நான் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். ஆனாலும் என்னால் விரிவாகச் சொல்ல முடியவில்லை. தெரிந்தவரை சொல்கிறேன்—

எம்பெருமான்—

மூன்று வேதங்களுக்கும் இருப்பிடமாக உள்ளவர் (அவற்றால் போற்றப்படுபவர்);

எல்லா ஜீவராஶிகளுக்கும் வேண்டியதைக் கொடுக்கிற சிந்தாமணியாக இருப்பவர்;

தம்மை த்யானம் செய்பவர்களிடத்தில் விஶேஷமாக அனுக்ரஹம் செய்பவர்;

ஸ்ரீ தேவி, பூமிதேவியுடன் சேர்ந்து விளங்குபவர்.

அவரிடத்தில் அடியேன் செய்யும் த்யானம், மிகுந்த ப்ரீதியுடன் நடைபெறுகிறது. வெகு ஶீக்ரத்தில் அவரிடமே லயித்து விடுகிறது.

ஸங்கல்பன் (மகிழ்ச்சியுடன்) - மற்றவர்கள் பெறமுடியாத, மிகவும் உயர்ந்த நிலை உம்முடையது. அதைக் கண்டு மிகவும் ஆஶ்சர்யம் அடைகிறேன்.

மோக்ஷ தர்மத்தில் உமக்குத் தீவ்ரமான ஈடுபாடு, ஏற்பட்டிருக்கிறது. அதனால், காமம், கோபம் போன்ற இடையூறுகள் அழிக்கப்பட்டன. உம்முடைய புத்தி பகவானுடைய த்யானத்திலேயே நிலையாக நிற்கிறது. சர்க்கரை கலந்த பால் எவ்வளவு இனிமையாக இருக்கும்? அதைவிட இனிமையாக இருக்கிறது உம்முடைய நிலை.

மேலும், ஒரு கவியாக, நூல்களை எழுதுவதால் ஏற்படும் அஹங்காரம் என்கிற தோஷத்தைவிட்டு விட்டாய்;

திறமையாக வாதம் செய்து எதிராளிகளை ஜயிக்கிறோம் என்ற கர்வம் ஆகிற ஜ்வரம் உன்னிடம் இல்லை;

தற்புகழ்ச்சி, நன்றாகப் பேசுகிறோம் என்ற பெருமை - ஆகிற பிசாசும் உன்னை விட்டு விட்டது;

மற்றவர்களுக்குப் போதிப்பதால் ஏற்படும் அஹம்பாவத்தையும் விட்டு ஒழித்தாய்;

தெளிந்த நீரோடை போல மனதை உடையவனாக இருக்கிறாய்.

ஜீவாத்மா : உலக விஷயங்களில் ஓடித்திரிவதே மனதின் ஸ்வபாவம். என் மனம் பகவானிடத்திலேயே நிலையாக இருப்பது, உம்முடைய அனுக்ரஹத்தால்தான் வந்தது. ஆகம ஶாஸ்த்ரங்கள் உம்முடைய பெருமையை எல்லையற்றதாக வர்ணிக்கின்றன.

சிலர் உம்மை பகவானுடைய செயல்படும் ஶக்தி (க்ரியா ஶக்தி) என்று கூறுகின்றனர்;

சிலர் உம்மை அஸுரர்களை ஸம்ஹாரம் செய்யும் ஸுதர்ஶனர் (சக்ரத்தாழ்வான்) என்கின்றனர்;

வேறு சிலர் உம்மை மனம் என்னும் தத்வம் என்கின்றனர்;

மற்றும் சிலர், இவை எல்லாவற்றுடனும் சேர்ந்த பரமாத்மாவே நீர் என்கிறார்கள்.

இப்படிப் பெருமை உடைய நீர் இந்த ஸம்ஸாரம் என்னும் கடலை வற்றச் செய்வதற்காக வந்திருக்கிறீர்.

ஸங்கல்பன் - இப்போது பகவானுடைய அனுக்ரஹம் உம்மிடத்தில் பரிபூர்ணமாக இருக்கிறது. அதனால், நான் உமக்கு நல்லதைச் செய்யப் போகிறேன்—

ஒரு கிளியைக் கூண்டிலிருந்து விடுவித்து, வானத்தில் பறக்க விடுவதைப் போல, உம்மையும் செய்யப் போகிறேன். பெருமானிடத்திலேயே ஆசை உடையவராக இருக்கிறீர். நாராயணனே பரதத்வம் என்று அறிந்து கொண்டிருக்கிறீர். ஸத்வகுணம் என்ற கூண்டிலேயே இருக்கிறீர். விடுதலை பெறுவதற்கு (மோக்ஷத்தை அடைவதற்கு) முற்றிலும் தகுந்தவராக இருக்கிறீர்.

அதனால், இப்போது உமக்குக் கிடைக்கப் போகிற, மற்றவர்களால் ஸுலபமாக அடைய முடியாத, மோக்ஷத்தைப் பற்றிச் சொல்கிறேன். கேளும். (தொடரும்)


|| श्रीः ||

**திருப்புல்லாணி ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமம்**
**ரிக்வேத பாடசாலை**

ஸ்ரீமத் ஆண்டவனின் திவ்ய அநுக்ரஹத்தால் நடைபெறும் இந்த பாடசாலையில் வித்யார்த்திகள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். எல்லா வசதிகளும், மாத உபகாரச் சம்பளம், அத்யயநம் முடித்துவுடன் ரொக்கத் தொகை ஸந்மானம் எல்லாம் உண்டு.

தொடர்புகொள்ள : Ph: 04567-254247
ஸ்ரீரகுவீர் தயாள், Cell :99437-84885.

॥ श्रीः ॥

विश्वोपकारमधिकृत्य विहारकालेष्वन्योन्यतः प्रथममेव परिस्फुरन्त्योः ।
दृष्टान्तयन्ति युवयोर्मणिपादरक्षे ! दिव्यं तदेव मिथुनं दिविपन्निषेव्यम् ॥

*With Obeisance to His Holiness*

**SRIMATH ANDAVAN**

**SRI SUDHARSHANA HOUSING PVT. LTD.,**

A9/16, *Industrial Estate, J.J. Nagar East,*
*Mugappair, Chennai - 600 037*
*Tel : 4355 0650 Fax : 2652 1423*
*e:mail : srisudharshana@gmail.com*

*Contact Person ; K.S. Ramabadran*
***98404 83337***

**PROJECT**
**"PANCHAJAYANAM"**
No. 9, Civil Avitation Colony
Nanganallur,
Chennai - 600 061
Slit +3 Floors, 6 Apartments,
Lift, Covered Car Parking

**"OUR NEXT PROJECT @**
Old No. 13, New 25,
Jeypore Nagar,
Gopalapuram,
Chennai - 600 086

***We are interested in promoting your Land on Joint Venture***

|| श्रीः ||

# அர்த்தமுள்ள வைஷ்ணவம்

(ஸ்ரீ.உ.வே. வாஸுதேவதாதாசார்யர் ஸ்வாமி,
திருவனந்தபுரம்)

## பெருமாள் ப்ரஸாதம்

பகவானுக்கு நிவேதநம் செய்த ப்ரஸாதத்தையே நாம் உண்ண வேண்டும்; அது மிக விஶேஷமானது என்பதை வேதம் முதலிய பல வசநங்கள் மூலம் பார்த்தோம்.

அந்த ப்ரஸாதம் மட்டுமல்ல; பெருமாள் தீர்த்தம், மஞ்சள்காப்பு, சந்தநம், குங்குமம், மாலை, துளஸி, முதலிய எல்லாமே பெருமாளுக்கு ஸமர்ப்பித்தது மிக விஶேஷம். அவற்றையே நாமும் உபயோகிக்க வேண்டும் என ஶாஸ்த்ரங்கள் சொல்கின்றன. அவற்றைப் பார்ப்போம்-

முதலில் பெருமாள் தீர்த்தத்தின் பெருமை.

i) **ப்ரஹ்மாண்ட புராணம் :-**

पृथिव्यां यानि तीर्थानि तेषु स्नानेन यत्फलम् ।
विष्णोः पादोदकं मूर्ध्नी धारयेत् सर्वमाप्नुयात् ॥

(பூமியில் எந்த எந்த புண்ய தீர்த்தங்கள் உண்டோ, அவற்றில் எல்லாம் ஸ்நாநம் செய்தால் வரும் பலன் முழுவதும், விஷ்ணுவினுடைய திருவடி - தீர்த்தத்தைத் தலையில் தரிப்பதால் வரும்.) (தலையில் ப்ரோக்ஷணம் செய்து கொள்ளவேண்டும் என்று பொருள்).

ii) **அத்ரிஸம்ஹிதா-**

तत्पाद्यतीर्थमादाय भक्त्या देवमनुस्मरन् ।
आत्मानं प्रोक्षयेत् यस्तु सर्वपापैः प्रमुच्यते ॥

(அந்த பகவானுடைய திருவடி தீர்த்தத்தை வாங்கிக் கொண்டு, பக்தியுடன் பகவானை நினைத்துக்

*கொண்டு, தலையில் ப்ரோக்ஷித்துக் கொள்பவன், எல்லா பாபங்களிலிருந்தும் விடுபடுவான்).*

iii) **ப்ரஹ்மாண்ட புராணம் :-**

मानवो यस्तु गङ्गायां स्नानं पानं समाचरेत् ।
तस्य यादृग्भवेत्पुण्यं तादृक् पादाम्बुधारणात् ॥

*கங்கையில் குளித்து, கங்கை நீரைப் பருகினால் வரும் புண்ய அளவு, பகவானுடைய திருவடி தீர்த்தத்தை தரிப்பதால் - ப்ரோக்ஷித்துக் கொள்வதால் வரும்.*

iv) **ஸ்ரீ நாரஸிம்ஹ புராணம்**

गङ्गाप्रयागगयनैमिशपुष्कराणि पुण्यानि यानि कुरुजाङ्गलयामुनानि ।
कालेन तीर्थसलिलानि पुनन्ति पापं पादोदकं भगवतस्तु पुनाति सद्यः ॥

*புண்ய தீர்த்தங்களான கங்கை, ப்ரயாகை, கயை, நைமிசம், புஷ்கரம், ஸ்யமந்த பஞ்சகம், யமுனை ஆகியவை மெதுவாக பாபத்தைக் களையும்; பகவானின் திருவடி தீர்த்தமோ உடனே சுத்தமாக்கும்.*

v) **ஸ்ரீ பாகவதம்**

पादोदकस्य माहात्म्यं जानात्येव हि शङ्करः ।
विष्णुपादोद्भवां गङ्गां शिरसाऽधारयद्धि सः ॥

*பெருமாளுடைய திருவடி தீர்த்தத்தின் பெருமை, பரமஶிவனுக்குத் தெரியும்தான்! ஏனெனில் அவர்தானே, பெருமாளுடைய திருவடியில் உண்டான கங்கை நதியைத் தலையால் ஏற்று தரித்தார்.*

vi) **ஸ்ரீ பாகவதம்**

प्रायश्चित्तमनुप्राप्तं कृच्छ्रं वाप्यघमर्षणम् ।
विष्णुपादोदकं पीत्वा शुद्धिमाप्नोति तत्क्षणात् ॥

*(க்ருச்ரம் அல்லது அகமர்ஷணம் என்னும்*

*ப்ராயஶ்சித்தம் போன்று ஸ்ரீ விஷ்ணுவின் திருவடி தீர்த்ததைப் பருகி, அந்த நொடியே சுத்தியடையலாம்).*

vii) **ப்ரஹ்மாண்ட புராணம்**

त्रिषु लोकेषु यत्तीर्थं प्रयागपुष्करादिकम् ।
तत्पादयुग्मे कृष्णस्य तत्र तिष्ठति नित्यशः ॥

*(மூவுலகங்களிலும் மிகப் புண்ணியமான ப்ரயாகை, புஷ்கரம், முதலியது ஸ்ரீ க்ருஷ்ணனுடைய இரு திருவடிகளில் என்றும் உள்ளது).*

viii) **ஒரு புராண வசநம்**

पादोदकं पिबेन्नित्यं चक्राङ्किताशिलां हरेः ।
प्रक्षालयतिति यत्तोयं ब्रह्महत्यादि पातकम् ॥

*(பகவானுடைய சக்ர-அடையாள முள்ள சாளக்ராம சிலையின் திருவடி தீர்த்தத்தைத் தினமும் பருகவும், அந்த தீர்த்தம், ப்ரஹ்ம ஹத்தி முதலிய பாபத்தையும் போக்கிவிடும்).*

ix) **ஒரு புராணம்**

बहुचक्रसमायुक्तं द्वारकापुरवासिनम् ।
स्नापयित्वा तु तत्तोयं पिबन् ज्ञानमवाप्नुयात् ॥

*(பல சக்ரங்களின் அடையாளமுடைய த்வாரகா - நாதனின் சிலையைத் திரு நீராட்டி, அந்த தீர்த்தத்தைப் பருகினால், ஜ்ஞாநம் பெறலாம்)*

x) **பௌஷ்கரம்**

भक्तपादच्युतेनापि मत्स्नापितजलेन वा ।
नरः पापात्प्रमुच्येत स्नानपानादिकर्मभिः ॥

*(என்னுடைய (பகவானுடைய) திருமஞ்ஜந தீர்த்தம் கொண்டோ அல்லது பக்தர்களின் ஸ்ரீபாத தீர்த்தம் கொண்டோ ஸ்நாநம், பாநம் (பருகுதல்) முதலிய*

*செயல்களைச் செய்தால், மனிதன் பாபத்திலிருந்து விடுபடுவான்).*

*அடுத்து மாலை, சூர்ணம் முதலிய ப்ரஸாதம் பற்றி பார்ப்போம்.*

i) **பாத்மோத்தரம்**

विष्णुदेहपरामृष्टं यश्चूर्णं शिरसा वहेत् ।
सोऽश्वमेधफलं प्राप्य विष्णुलोके महीयते ।।

*(பகவானின் திருமேனியில் பட்ட சூர்ணத்தை (மஞ்ஜள் காப்பை), யார் தலையில் தரிக்கிறானோ, அவன் அஶ்வமேத யாகம் செய்த பலனைப் பெற்று விஷ்ணு லோகத்தில் கொண்டாடப்படுவான்).*

ii) **பாத்மோத்தரம்**

विष्णुगात्रच्युतं चूर्णं ललाटे धारयेत् द्विजः ।
अपोह्य पातकान्याशु मोदते दिवि देववत् ।।

*(விஷ்ணுவின் திருமேனியிலிருந்து பட்டுவந்த சூர்ணத்தை நெற்றியில் தரிக்க வேண்டும்; உடனே, எல்லா பாபங்களையும் தொலைத்து, பின் தேவலோகத்தில் தேவர்களைப் போல் மகிழ்ந்திருப்பான்).*

iii) **ஈஶ்வர ஸம்ஹிதா :-**

कुङ्कुमं चन्दनं चैव कर्पूरं चानुलेपनम् ।
विष्णुदेहपरामृष्टं तद्वै पावनपावनम् ।।

*(மேனியில் பூசக் கூடிய குங்குமமும், சந்தனமும், கற்பூரமும் பகவானின் திருமேனியில் பட்டதானால், அதுவே சுத்தத்துக்கெல்லாம் சுத்தமானது).*

iv) **ஸ்ரீ விஷ்ணுதத்த்வம்**

त्वद्भुक्तशेषभोगा स्यात् जिह्वा घ्राणस्तथाविधः ।

*(பகவானே ! எனது நாக்கு, நீ அமுது செய்த மீதி ப்ரஸாதத்தையே விரும்ப வேண்டும்; அப்படியே எனது மூக்கும் ஆக வேண்டும்).*

v) **ஸ்ரீ நாரஸிம்ஹ புராணம்**

मालां यो धारयेन्नित्यं वैष्णवीं भक्तिमाश्रितः ।
सर्वपापविनिर्मुक्तः स याति परमां गतिम् ॥

*(யார், எப்போதும், பகவான் விஷ்ணுவினுடைய மாலையையே பக்தியுடன் தரிக்கிறானோ, அவன், எல்லா பாபங்களிலிருந்தும் விடுபட்டு, உயர்ந்த கதியை அடைவான்).*

vi) **ஸ்ரீ பாகவதம்**

त्वयोपभुक्तस्रग्गन्धवासोऽलङ्कारचर्चिताः ।
उच्छिष्टभोजिनो दासाः तव मायां तरेमहि ॥

*(பகவானே ! நீ உபயோகித்த மாலை, சந்தனம், வஸ்த்ரம், அலங்காரம் இவற்றால் அலங்கரித்துக் கொண்டு, உனது ப்ரஸாதத்தை உண்ணும் உனது தாஸர்களான நாங்கள், உனது மாயையைக் கடப்போம்).*

vii) **ஒரு புராணம்**

विष्णुगात्रेण संस्पृष्टं पत्रं वा पुष्पमेव वा ।
शिरसा धारयेत् यो वै स याति हरिमञ्जसा ॥

*(விஷ்ணுவின் திருமேனியில் சார்த்திய இலையோ, (துளசி முதலியன) புஷ்பமோ, யார் தலையில் தரிக்கிறானோ, அவன் கட்டாயம் விஷ்ணுவையே சென்றடைவான்).*

viii) **ஸ்ரீ பாகவதம்**

हृदि रूपं मुखे नाम नैवेद्यमुदरे हरेः ।
पादोदकं च निर्माल्यं यस्य मूर्ध्नि स वैष्णवः ॥

*(யாருடைய இதயத்தில் ஹரியின் திருமேனி பதிந்துள்ளதோ, வாயில் திருநாமமும், வயிற்றில் பகவத் - ப்ரஸாதமும், தலையில் பெருமாள் திருவடி தீர்த்தமும், சூடிக்*

*களைந்த மாலை, சூர்ணம் முதலியதும் உள்ளதோ, அவனே வைஷ்ணவன் ஆவான்).*

ix **ஒரு புராணம்**

हृदि रूपं मुखे नाम नैवेद्यमुदरे हरेः ।
पादोदकं च निर्माल्यं मस्तके यस्य सोऽच्युतः ॥

*(யாருடைய இதயத்தில் பகவானின் திவ்யரூபம், உதரத்தில் அவனது ப்ரஸாதம், தலையில் அவனது தீர்த்தமும் புஷ்பம் முதலியதும் உள்ளதோ, அவன் பகவானால் கைவிடப்படுவதில்லை).*

x) **ஈச்வரஸம்ஹிதா**

उपभुक्तस्य सर्वस्य गन्धपुष्पादिकस्य च ।
स्नानादौ उपयुक्तस्य दधिक्षीरादिकस्य च ॥..........

प्रत्यक्षेण प्रमाणेन लोकदृष्टेन हेतुना ।
शिष्टैरनुष्ठिता चैव वैष्णवस्य पवित्रता ।

सिद्धा पादोदकान्तस्य महत्ता देवपूजिता ॥

*(பகவானுக்கு உபயோகித்த சந்தனம், புஷ்பம் முதலிய எல்லாமும், திருமஞ்ஜனம் முதலியவற்றில் உபயோகித்த தயிர், பால் முதலியதும், மிக மிக விசேஷ சுத்தம் என்பது நேராகவே தெரியும்; உலக ரீதியில் ஊஹிக்கவும் முடியும்; மஹான்களான வைதிகர்களால் அனுஷ்டாநத்தின் மூலமும் தெரியப்படுத்தப்படுகிறது. எனவே திருவடி தீர்த்தம் வரை எல்லாம் உயர்ந்தது, தேவர்களாலும் பூஜிக்கப்படுவது என்பது ஏற்படும்).*

xi) **ஸ்ரீ ஸாத்த்வத-ஸம்ஹிதா**

सुगन्धफलपुष्पाद्यं अपूर्वमुचितं च यत्)
अभोज्यं गुरुदेवादिनिवेदनविवर्जितम् ॥

*(சந்தனம், பழம், புஷ்பம் முதலியதும், புதியதாயும், தகுந்ததாயும் உள்ள எதுவும், பகவானுக்கு ஸமர்ப்பிக்கவில்லையென்றால், நாம் அனுபவிக்கத் தக்கதல்ல).*

xii) **ஈஶ்வரஸம்ஹிதா**

दूषणं न प्रयोक्तव्यं शब्दैरप्रतिपत्तिजैः ।
ते यान्ति नरकं मूढाः तत्प्रभावापलापिनः ॥

*(பகவானது ப்ரஸாதங்களான சூர்ணம், மாலை முதலியவற்றை பக்தியில்லாமல் இகழக் கூடாது. இவற்றின் பெருமையை மறுக்கும் மூடர்கள் நரகமடைவார்கள்.)*

*ஆக, பகவானுடைய மஞ்சள் சூர்ணம், துளசி, வஸ்த்ரம், பெருமாள் தீர்த்தம் முதலிய எல்லாமே மிக விஶேஷம் என்னும்போது, பகவான் அமுது செய்த ப்ரஸாதம் பற்றிக் கேட்பானேன்? அதுமிக மிக விஶேஷமானது.*

*நம், ஆழ்வார், ஆசார்யர்களோ, பகவத் - ப்ரஸாதத்தைப் போற்றி, அதிலேயே காலம் கழித்தார்கள் என்று கூட ச்சொல்லலாம்.*

**உடுத்துக்களைந்த நின் பீதகவாடை உடுத்துக், கலத்தது உண்டு
தொடுத்த துழாய் மலர் சூடிக்களைந்தன சூடும் இத்தொண்டர்களோம்**

*என்று பெரியாழ்வார் அருளினார்.*

**யாம் பெறும் சம்மானம்** *என்று நாச்சியார் அருளினார்.*

*ஸ்வாமி தேஶிகனும், ஸ்ரீரங்கத்தில், தினமும் கோயிலுக்குச் சென்று, தீர்த்த ப்ரஸாதாதிகளை ஸ்வீகரித்தார் என்று தினசர்யா ஸ்தோத்ரம் சொல்கிறது. எல்லா ஆசார்யர்களும் தவறாமல் செய்த அனுஷ்டாநம் இது; செய்து காட்டிய அனுஷ்டாநம் இது.*

ஸச்சரித்ர ரக்ஷா நூலில் கடைசியில் ஸ்வாமி தேஶிகன் அருளுவது.

''प्रथितगुणगणानां प्रापणप्राशनाद्यैः

अयमहमनघानामस्मि पात्रं दयायाः ।''

(பகவானது ப்ரஸாதத்தை ஏற்கும் நற்குணம் படைத்த வைஷ்ணவர்களின் தயைக்கு நான் பாத்ரம் ஆகிறேன்)

ராமாநுஜ தயாபாத்ரமான ஸ்வாமி தேஶிகன், பகவத் ப்ரஸாதத்தை ஏற்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களுடையவும் தயாபாத்ரம் என்று தன்னைக் கூறிக் கொள்கிறார்.

இதற்குமேல் என்ன சொல்ல வேணும்?


## காளிதாஸ - ஸம்ஸ்க்ருத - கேந்த்ரம்

18, ஸந்நிதித் தெரு, மதுராந்தகம் - 603306 Ph: 90479-65260.

### தபால் மூலம் ஸம்ஸ்க்ருதம்

1. மிகவும் சுலபமான தமிழ் விளக்கங்கள்.
2. 6 மாதத்திற்கு ஒரு முறை தேர்வுகள் உங்கள் ஊரிலேயே.
3. 7 வயதுக்கு மேற்பட்டவர் யாவரும் பயிலலாம்.
4. ரூ. 150/- மணியார்டர் அல்லது டிடியுடன் தங்கள் முழு விவரங்களுடன் அனுப்பி வைக்கவும்.
5. ஸம்ஸ்க்ருதம் தெரிந்த யாவரும் பாடம் நடத்தி தேர்வு வைக்கலாம்.
6. விவரங்கள் பெற போதிய தபால் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட கவர் இணைக்கவும்.

|| श्रीः ||

# இடைகழி எம்பெருமான்

(ஶ்ரீ R. கண்ணன், பெங்களூர்)

திருக்கோவலூர் திவ்யதேஶத்து எம்பெருமானுக்கு தேஹளீஶன் என்று திவ்ய நாமம். ஸ்வாமி தேஶிகன் இந்த எம்பெருமான் விஷயமாகவே **ஸ்ரீ தேஹளீச ஸ்துதி** என்னும் 28 ஶ்லோகங்களடங்கிய ஸ்தோத்ரம் அருளிச் செய்துள்ளார். தேஹளீ என்றால் இடைகழி (ரேழி) என்று பொருள். க்ருஹத்தின் வாசலுக்கும், உட்புறத்துக்கும் இடையிலுள்ள சிறிய இடம்தான் இடைகழி என்று கூறப்படுகிறது.

**வீற்றிருந்து ஏழுலகும் தனிக்கோல் செல்ல, வீவில்சீர் ஆற்றல் மிக்காளும் அம்மான்** என்றும் **அனைத்துலக முடைய அரவிந்தலோசனன்** என்றும் **அங்கணெடு மதிள் புடைசூழ் அயோத்தி என்னும் அணிநகரத்துலகனைத்தும் விளக்கும் சோதி** என்றும் **பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராமே ஆள்கின்ற எம்பெருமான்** என்றும் **உபய விபூதி நாதன்** என்றும் பலவாறு போற்றப் பெறும் எம்பெருமான், தேஹளிக்கு ஈசன் - **இடைகழி எம்பெருமான்** என்று அருளிச் செய்யும்போது - அவனுடைய ஸௌலப்யம் ஒளிவிடுகிறது. இடைகழிக்கு மட்டும் ஈசன் என்று பொருளல்ல. இடைகழியில் தோன்றிய எம்பெருமான். அவன் எங்கும் தோன்றுவான். தூணினின்றும் நரங்கலந்த சிங்கமாய் ஆவிர்பவித்தான். சதுர்முகனின் நாசியினின்றும் வராஹமாய் அவதரித்தான். கம்ஸன் சிறைக் கூடத்திலும்தான் கண்ணனாக அவதரித்தான். எங்கும் அவதரிப்பது அவன் தன் ஸங்கல்பத்தாலேயே. திருக்கோவலூர் ம்ருகண்டு மஹர்ஷியின் ஆச்ரம இடைகழியில் தோன்ற வேணும் என்று ஸங்கல்பித்துக் கொண்டான் போலும், யோகிகளின் ஸம்பந்தம் தனக்கு

ஏற்படவேண்டும், தான் விரும்பிய இந்தத் திவ்யதேஶத்தில் அவதரித்தான்.

பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார் மற்றும் பேயாழ்வார் ஆகிய மூன்று முதலாழ்வார்களும் ஒரு ஸமயம் திருக்கோவலூர் ம்ருகண்டு மஹர்ஷியின் ஆச்ரமத்தில் கூடினர். கூடின இடம் ஆச்ரமத்தின் இடைகழி - இரவு நேரம் - எங்கும் இருள் - அங்கு மூவர்தான் நிற்க இடம் போதுமானதாக இருந்தது. எப்படியாவது இந்தச் சிறிய இடத்தில், நின்று கொண்டாவது இரவு நேரத்தைக் கழித்துவிட்டு, காலையில் புறப்பட்டுச் சென்றுவிடலாம் என்று அந்த யோகீஶ்வரர்கள் அங்கு நின்று கொண்டிருந்தனர். இந்தப் பரம யோகிகளுடைய ஸம்பந்தம் வேண்டுமென்று எண்ணிய பரமன், இவர்கள் கண்களுக்குப் புலப்படாமல், அந்த இடைகழியில், இவர்களை நெருக்கலானான். (இவர்கள் எம்பெருமானிடம் மிகுந்த பக்தி கொண்டவர்கள் - **அணுகில் அணுகும்** என்று நம்மாழ்வார் அருளிச் செய்தபடி - தன்னை மனதால் அணுகும் இவர்களை, தன் திருமேனியோடு அணுக நினைத்தான் போலும்). மூன்று ஆழ்வார்களும் நெருக்கத்தை உணர்ந்தனர். ''நாம் மூவர்தாம் உளோம். அப்படி இருக்க, நாம் காணமுடியாமல் - யாரேனும் நான்காமவர் வந்திருக்கின்றாரோ'' என்று ஐயமுற்றனர். அந்தக் காரிருளில், விளக்கு ஏற்றினால் தான், யார் நெருக்குகிறார் என்று காணமுடியும் - ஆகவே, முதலில் **பொய்கையாழ்வார் வையந்தகளியா** என்று ஒரு விளக்கு ஏற்றினார். அவரைத் தொடர்ந்து **பூதத்தாழ்வார், அன்பே தகளியே** என்று மற்றொரு விளக்கு ஏற்றினார். இரண்டு விளக்கின் ஒளியிலே இருள் அகன்றது. மூன்றாவதாழ்வாரான **பேயாழ்வார்,** அந்த விளக்கின் ஒளியிலே **திருக்கண்டேன், பொன் மேனி கண்டேன்,** என்று பிராட்டியோடு கூடிய எம்பெருமானைக் கண்டார்; மற்ற இருவரும் அவருடன் சேர்ந்து எம்பெருமானைக் கண்டனர். முதல் மூன்று திருவந்தாதி பிறந்தது. நாலாயிர திவ்ய

ப்ரபந்தத்துக்கு நாற்றங்கால் இடப்பட்டது. ஆகவே நாலாயிர திவ்ய ப்ரபந்தம் தோன்றிய இடம் திருக்கோவலூர் ம்ருகண்டு மஹர்ஷி ஆச்ரமத்தின் இடைகழியே.

எம்பெருமான் பிராட்டியும் தானுமாக வந்து நெருக்கினதை பொய்கையாழ்வார் **முதல் திருவந்தாதியில்** தானே அருளிச் செய்கிறார்-

**நீயும் திருமகளும் நின்றாயால் குன்றெடுத்துப்**
**பாயும் பனிமறைத்த பண்பாளா - வாசல்**
**கடைகழியாவுள்புகாக் காமர் பூங்கோவல்**
**இடைகழியே பற்றியினி** - *(பாசுரம் - 86)*

''கோவர்த்தனம் என்னும் குன்றைக் குடையாகப் பிடித்து இந்த்ரன் பொழிந்த கல்மாரியைத் தடுத்த நீர்மையை (ஸௌஶீல்யத்தை) உடையவனே ! வாசற்புறத்துக்கு வெளியிலே போகாமலும், உட்புறத்தில் நுழையாமலும் அழகு நிரம்பிய திருக்கோவலூரில் இடைகழியையே இடமாகக் கொண்டு, நீயும், பிராட்டியுமாக இப்போது நின்று அநுக்ரஹம் செய்தாயன்றோ'' என்பது இந்தப் பாசுரத்தின் சுருக்கமான பொருள்.

ஸ்வாமி தேசிகனும் முதலாழ்வார்கள் திருக்கோவலூர் எம்பெருமான் தேஹளீசனை, விளக்கேற்றி, ஸாக்ஷாத்கரித்ததை, **ஸ்ரீ தேஹளீச ஸ்துதியில்,** அத்புதமாக அருளிச் செய்துள்ளார். அதை நாம் சற்றே அநுபவிப்போம்.

**தீபேந கேநசிதகீதருசா நிசீதே**
**ஸ்நேஹோபபந்ந பரிஶுத்த குணார்ப்பிதேந ।**
**தஹ்ராவகாச நிபிடம் தத்ருசு: பவந்தம்**
**ஸ்வாத்யாய யோக நயநா: ஶுசய: கவீந்த்ரா: ॥**

**(6)**

முன்பு ஒரு சமயம் காளராத்ரியில் ஸ்நேஹத்தோடு (ஸ்நேஹம் - பக்தி அல்லது எண்ணெய்) கூட, நல்ல குணத்தினால் (குணம் - ஸத்த்வகுணம் அல்லது திரியினால்) ஏற்றிய ஜ்ஞான ஸூர்யனாகிற விளக்கினால் சிறிதான ஹ்ருதயகுஹை எனப்படும் தஹ்ராகாசத்தில்

மறைந்திருக்கும் (தேஹளீசனான) உன்னை ஶாஸ்த்ரக் கண்கள் யோகக் கண்கள் இரண்டும் கொண்டு முதலாழ்வார்களான கவிச் சக்ரவர்த்திகள் ஸாக்ஷாத்தாக ஸேவித்தனர். (முதலாழ்வார்களை, நம்மாழ்வார், இன்கவிபாடும் பரமர் (திருவாய்மொழி 7.9,6) என்று குறிப்பிடுவது நோக்கற்பாலது).

தேஹளீசன் ஆழ்வார்களை நெருக்கியதால் ப்ரபந்தங்கள் உண்டாயின என்று மற்றொரு ஶ்லோகத்தால் ஸ்வாமி அருளிச் செய்கிறார்.

**காஸார பூர்வ கவி முக்ய விமர்த்தஜந்மா**
**பண்ணாதடேக்ஷு ஸுபகஸ்ய ரஸோ பஹுஸ்தே ।**
**த்வத்பாத பத்ம மதுநி த்வதநந்ய போக்யே**
**நூநம் ஸமாஶ்ரயதி நூதந சர்க்கராத்வம் ॥ 7**

பெண்ணை நதியின் கரையில் விளைந்த ரஸமான கரும்பான எம்பெருமானுன உன்னை முதலாழ்வார்களான மூன்று நித்ய ஸூரிகளும் ஒரு இரவில் இடைகழியில் நெருக்கியதால் பெருக்கெடுத்த மூன்று அந்தாதிகளான ப்ரபந்தங்களின் கோவை மிகவும் உயர்ந்தது. அது உன் பக்தர்களுக்கு மிகவும் போக்யமான உன் திருவடித்தாமரையின் மதுவுடன் கலந்த சர்க்கரைப் போலாயிற்று'' என்பது இதன் கருத்து).

(கரும்பைப் பிழிய மூன்று உருளைகள் கொண்ட யந்திரமுண்டு - மூன்று உருளைகள்தான் முதல் மூன்று ஆழ்வார்கள் - கரும்புதான் எம்பெருமான் - கரும்பு நெருக்கப்பட்டு கிடைத்த கருப்பஞ்சாறுதான் - ரஸமான ப்ரபந்தங்கள்)

இன்னொரு ஶ்லோகத்தால், ஸ்வாமி, ''எம்பெருமானே! நீ உலகளந்தது பெரிய ஆச்சர்யமல்ல. ஆனால் உன் அன்பர்களான ஆழ்வார்களுடன் நெருங்கி இருக்க வேண்டும் என்று, உன் பெரிய உருவத்தை அடக்கி இடைகழியில் தோன்றினையே அதுதான் மிகவும் ஆச்சர்யமானது'' என்று அருளிச் செய்கிறார்.

ஸ்ரீ தேஹளீசாஸ்துதியின் இறுதியில், ஸ்வாமி ''திருக்கோவலூர்'' இடைகழியில் அவதரித்த எம்பெருமானை ஆதி பக்தர்கள் எனப்படும் முதலாழ்வார்கள் நன்கு கண்டனர் - மூன்று திருவந்தாதிகளை அருளிச் செய்தனர் - அந்த ப்ரபந்தங்கள் எம்பெருமானுடைய ஸ்வரூப, ரூப, குண, விபவங்களை உள்ளபடி உரைக்கின்றன. இவ்வெம்பெருமானை அடைந்தவர்களின் பாபங்களை, எந்த வித சிரமுமின்றி, விளையாட்டாக, அழிப்பதற்கு அவன் ஸங்கல்பித்துள்ளான்'' என்று அருளிச் செய்கிறார்.

இப்பேற்பட்ட, ஸர்வ ஸுலபனாய், திருக்கோவலூரில் எழுந்தருளியிருக்கும் இடைகழி எம்பெருமானை, நாம் வணங்கி வழிபட்டால், நம் அநிஷ்டங்களெல்லாம் நீங்கி, இஷ்டங்களெல்லாம் கை கூடும்.

*ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:*


ஸ்ரீ பூமிதேவி ஸமேத ஸ்ரீ ஸ்ரீனிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ மதே நிகமாந்த மஹா தேஶிகாய நம:

**ஸ்ரீ வைஷ்ணவ ஆஸ்திகர்களுக்கு ஒரு நற்செய்தி**

**உப்பிலியப்பன் கோயிலில் வைதீக கர்மாக்கள் விவாஹம், உபநயனம், சீமந்தம், ஷஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேகம், ஆயுஷ்ஹோமம், போன்ற சுபமுஹூர்த்தங்களும் மற்றும் சுதர்ஸன, ந்ருஸிம்ஹ, ஹயக்ரீவ, தன்வந்தரி ஹோமங்களும் சிறந்த முறையிலே செய்து கொடுக்கப்படும்.**

குறிப்பு: பாஞ்சராத்ர ஆகம முறைப்படி திருக்கோயில்களில் ஸம்ப்ரோக்ஷணங்கள், உத்ஸவங்கள், ஶாந்தி ஹோமங்களும் நடத்திக் கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்:
Cell: **9443524064, Tel Ph: 0435-2001684**
ஸ்ரீ.உ.வே.வரதாச்சாரியார் ஸ்வாமி (ப்ருகஸ்பதி), No:4, சத்திய சாயிநகர், ஸ்ரீநிவாச நல்லூர், சாக்கோட்டை Post. கும்பகோணம் - 612401

## பெங்களூர் ஸ்ரீபுரம் ஸ்ரீமதாண்டவன் ஆச்ரமம்

*பெங்களூர் ஸ்ரீபுரத்தில், ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ஆய்ரமம் ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் ஸந்நிதியில் 28.11.09 அன்று தொடங்கி, திருப்பவித்ரோத்ஸவம் 1.12.09 அன்று பூர்ணாஹுதியுடன் முடிவுற்றது. திருமங்கையாழ்வாரின் திருநக்ஷத்ர உத்ஸவமும் சேர்ந்து கொண்டதால் - ஸேவாகாலம் வெகு நன்றாக அமைந்திருந்தது. பல ஸ்வாமிகள் ஸேவாகாலத்தில் ய்ரத்தையுடன் அந்வயித்தனர். ஸ்த்ரீகளும் அநேகர் கலந்து கொண்டனர். ஸ்வாமிகளுக்கு உசித ஸம்பாவனையுடன், வேஷ்டி மற்றும் சால்வைகள் ஸமர்ப்பிக்கப்பட்டன.*

*1.12.09 திருப்பவித்ரோத்ஸவ முடிவு அன்று பெருமாளுடன் கூட திருமங்கையாழ்வாரும் திருமஞ்ஜனம் கண்டருளினார்.*

*ஆராதகர்களும், கைங்கர்ய பரர்களும், மற்றும் ஆச்ரம நிர்வாஹிகளும் சிறந்த ஏற்பாட்டைச் செய்திருந்தனர்.*

*ஸ்ரீமதாண்டவன் அனுக்ரஹத்துடன், திருப்பவித்ரோத்ஸவம், மற்றும் திருமங்கையாழ்வார் திருநக்ஷத்ரமும் நன்கு நடந்தேறியது.*

*தாஸன்*
*கண்ணன்*

---

॥ श्रीः ॥

## ஸ்ரீபுரம் ஸ்ரீமதாண்டவன் ஆச்ரமம், பெங்களூர்

*ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ஆச்ரமம், ஸ்ரீபுரம், பெங்களூர் - ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் ஸந்நிதியில் 8.12.09 அன்று, சின்னாண்டவன் ஸ்ரீ பாதுகாஸேவக ராமாநுஜ மஹாதேபரிகன் திருநக்ஷத்ரம் ஸேவாகாலம், சாற்றுமுறை, ஆசார்ய ஸம்பாவனையுடன் சிறப்புடன் நடந்தது.*

சுண்டப்பாளையும் ஸ்ரீ.உ.வே. வாஸுதேவாசார்யர் ஸ்வாமி சின்னாண்டவன் திவ்ய பாதுகைகளை எழுந்தருளப்பண்ணியிருந்தார். பாதுகாராதனம் செய்யப்பட்டு, ஸ்ரீபாத தீர்த்தமும், ஸ்ரீ பாதுகைகளும் அனைவருக்கும் ஸாதிக்கப்பட்டது. ப்ரஸாத விநியோகமும் செய்யப்பட்டது.

ப்ரக்ருதம் ஸ்ரீமாதண்டவன் அநுக்ரஹத்துடன் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் நன்கு நடந்தது.

தாஸன்
கண்ணன்


THIRUKKUDANTHAI ANDAVAN'S
**DISCOURSE ON THIRUPPAVAI**

**Price : Rs. 250/-**
Courier /Postage charges extra
(Local Cheques accepted)

English Rendering by
Sri V.N. Vedantha Desikan

Copies can be had from :
**VAINAVAN KURAL**
21/1, Parangusapuram Road,
Kodambakkam, Chennai-24,
Mobile : **93801 140404**
**944461 2088**

# Matrimonial

***For the Month Of***

***THAI MAATHAM (JANUARY 2010)***

Kindly forward your replies to
**BOX NUMBERS** to the following address

इहैव स्तं मा वि योष्टं विश्वमायुर्व्यश्नुतम् ।
क्रीडन्तौ पुत्रैर्नप्तृभिः मोदमानौ स्वस्तकौ ॥
अथर्व वेदः (१४.१.२२)

"O groom and bride ! May you both live the full span of your life, in wedded bliss. Never be separated from each other. May you always live joyously in your home with your children and grand children." *(Atharva Veda 14.1.22)*

**BOX NO. WILL BE KEPT OPEN FOR TWO MONTHSONLY**

To Box No;.......................

***C/o* SRI RANGANATHA PADUKA,**
***21, Sir Desikachari Road, Mylapore,***
***Chennai 600 004.***

## ***BRIDE GROOM WANTED***

Wanted a suitable non-Bharathwaja vadagalai bridegroom (not born earlier than 1980) for a bride born 1985, Chithrai-5.4'' BISM, MBA employed in MNC / Chennai . Contact. Ph.No 24640189, 24616336,9884090017

Vadagalai Srivatsam Kettai 5.3" 22 years BE (Comp Science) working in TCS, Chennai seeks well employed professionally qualified Groom Below 27 years. Contact 9444843070. E.Mail: ramarajan60@gmail.com

Vadakalai, Naithruvakasyapam, Mirugaseersham, Nov 1985 5.4”, B.Tech (EEE) software Engineer seeks BE MS, MBA, Qualified groom age below 28 years. Ub11185@gmail.com, 044 – 42614143

Vadakalai, Vadhoolam, Thiruvadhirai Nov 1985, 5.2”, doing MBA in Bangalore seeks BE MS / MBA qualified groom age upto 29 yrs, sudhas02@yahoo.com 044 – 43534064

Vadakalai, Kousigam, Avittam 2nd Padam, Aug 1985, Fair 5.7”, Employed Chennai BE Civil seeks MS/ MBA, well employed vadakalai groom. Contact : 9840312092 or 9445001927.

## ***BRIDE WANTED***

Vadagalai, Kausika, Krittika,Padam -3, 18.May.1977, 5’7”, B.Com. MBA ( Marketing), Family business 10 – 12 Lakhs p.a. seeks professionally qualified girl, contact : 022- 25062068 , 67554014 email – kavikri@yahoo.com.

Vadagalai Athireya gothram Ashwini 1st padam Age 24 height 163cm B.Tech software MNC seeks well qualified well placed Bride groom 25 / 29 . Sudda Jatakam contact 9381745530 email hema_seshadri43@yahoo.com

***சி. கண்ணன், வாதூல கோத்ரம் ரோஹிணி நக்ஷத்ரம், வயது 34, வருமானம்*** Rs.6,000 p.m. ***கல்வி*** SSLC ***வலது காது பிறவி ஊனம். முகவரி :*** S.R. ***கோபாலன், 31/7, முதல் மெயின்ரோடு, திருவேங்கட நகர், திருநின்றவூர்*** R.S. ***-602 204..***

Thenkalai Gowthama gothram punarpoosam DOB 01.04.1982 height 5.8” M.A. (Mascom) employed Journalist premier news agency Rs.2,80,000/- p.a. seeks graduate employed Bride. kalai no bar Contact C.V.Srikumar Krishnan, 45, II Street, Sudarshan Nagar, Madambakkam, Chennai 600 073. Ph : 9940140819.

Vadakalai Kousigam Uthiradam IV Padam, Sep 1982, 5.10” (Slim) BE Employed Apollo Tyres Chennai Senior Executive Rs.30000/- Pm Seeks Good Looking Employed or not employed girl from a decent family. Contact 044 – 27695795 or 9444626800. Kalai no bar.

Vadakalai sadamarshanam Rohini oct 1979, 5.10”, BE Employed HCL Chennai. Contact e.mail tksrivatsan@gmail.com, ph : 22422847 seeks graduate vadakalai employment or unemployed from a decent family.

Vadakalai sadamarshanam chitra Kanni 34/180 / MCA employed pune 15 Lacs yearly seeks good looking graduate about 30 years preferably unemployed bride contact S.Sundararajan 28/31, Venugopalapuram. Chennai 600 114. ph: 22344808, 9884044808.

Vadakalai Vadhoolam Bharani 29/165, Integrated MS(IIT) MS (USA) presently working India for USA professionally trained violinist and vocalist seeking educated musically inclined bride. Contact : 28175615, 9444506615.

Vadakalai, athreyam, Uthiradam, 4th Padam, Sep 1982, 5.6”, (Graduate) Dip holder (Comp Science) in French working in MNC at Bangalore, well settled fair complexion seeks employed / unemployed from a decent family. Contact : V.Kannan 9730069402

Vadakalai Athreyam Anusham July 1967 BE Employed in a chemical company. Sub Sect no bar seeks suitable alliance graduate preferable. Boy good in character. Contact : 044 – 2616 2832.

Vadakalai, Athreyam, Uthiradam June 1974, BABL well practicing seeks suitable bride. Graduate preferable Kalai no bar. Boy 5.9 tall handsome good habits. Contact : 044 – 26162832.

Vadakalai, Vadhoolam, Sadayam, 5.11”, April 1982 MS Employed in US seeks Graduate / post graduate girl. Contact : 9500041951, email :tsk51@rediffmail.com Girls working studying in USA Excuse.

Vadakalai, Moudgalyam, Pooradam, July 1980, 173Cms, BE(ME) ISRO Trivandrum Rs.45000/- Fair seeks vadakalai (preferred) Graduate employed or unemployed between 25 to

27 girl from a decent family. Contact : 9840364982, 09995085038.

Thenkalai Koundinyam Aswini June 1980 167cms, BPT Physio Therapist Apollo Hospitals Rs.25,000/- per month seeks employed girl from a decent family. Kalai no bar. Contact :V.N.Ramapriyan, 044 – 24511567, 9841896256, 9003170851.

Vadakalai, Bharahwajam, Rohini, 5.1", Sep 1984, Dip in 4 wheeler mech employed in TVS Wheels India Ltd earning Rs.15000/- pm. Seeks girl from decent family employed or unemployed. Contact : 9940336070 or 9940443400.

Vadakalai, Vadhoolam, Purattadhi, 3rd Padam, BE Ms, working in USA Seattle Microsoft 26.06.78 5.7", looking for Bride of good looking. 044 – 2498 7800, 9176614200.

Vadakalai, Vadhoolam, Rohini, M.Sc, PhD, working in PSG College, Cbe, 04- 11 – 1982, 5.11", looking for Bride of good looking 9940228240, 9840528969

Vadakalai shadamarshanam Ayilyam 25.07.1979 170 cms, 9th Standard employed clerk Rs.4500/-pm suitable employed girl. Kalai no bar 9952081448.

Vadakalai, Sadamarshanam, Ayilyam, 20.05.1980, 173 cms, B.sC (MBA) employed MNC. IT Rs.75000/-pm seeks suitable employed girl. Kalai no bar. Ph :08214267795, email: arvind-srinivaas@yahoo.com. Mobile : 8050273972.

Vadakalai, Srivatsam, Pooram I Padam, MA, DECE, 38, 177, Rs.3 Lakhs pa Senior Manager, Marketing private Chennai seeks Brahmin. Contact : M.Srinivasan, 4, Sathyamoorthy Street, Tiruvallur 602 001. 044 – 27665263.

Vadakalai, Koundinyam, Revathy, 27 Yrs, 6 Ft, BE, MBA (US), employed, American/ MNC / RA Chennai seeks employed / unemployed graduate girl. Contact : eachambadysridhar@yahoo.co.in. Cell : 9380641996, 24641996

## சந்தாதாரர்களுக்கு முக்யமான விண்ணப்பம்

1. சந்தா முடிவடையும் முன் புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கப்படாவிடில் சந்தா முடிவடைந்த அடுத்த மாதம் **ஸ்ரீ ரங்கநாத பாதுகா** அனுப்ப இயலாது. மணியாடர் / சென்னையில் மாற்றத்தக்க காசோலை மூலமாக சந்தா புதுப்பித்துக் கொள்ளுங்கள். **தங்களுடைய சந்தா எண், முகவரி, அஞ்சல் குறியீட்டு எண், தொலைபேசி எண்** முதலான விவரங்களை தெரியப்படுத்தவும். இந்த விவரம் இல்லாது அனுப்பபப்படும் சந்தா புதுப்பிக்க இயலாது. e. M.O. .மூலம் சந்தா அனுப்பும் போது மேல் கண்ட விவரம் இல்லையெனில் அனுப்பிய பணம் Suspense account ல் வைக்கப்படும்.
2. ஆயுள் சந்தா ரூ. 200/- அல்லது ரூ. 500/- அனுப்பி இன்றும் புத்தகம் பெறுபவர்கள் தற்போதைய விலையை, செலவுகளை நினைவில் கொண்டு தற்போதய சந்தாவான ரூ. 3000/-த்தின் மீதி தொகையை அவர்களாகவே அனுப்பி வைத்ததால் போற்றத்தக்கதாக இருக்கும்.
3. ப்ரதி மாதம் 12 அல்லது 13 தேதிகளில் **ஸ்ரீ பாதுகா** புத்தகம் சென்னையிலிருந்து தபால் மூலம் அனுப்பபடுகிறது. 23 தேதிக்குள் தங்களுக்கு வந்து சேரவில்லையெனில் உங்கள் லோக்கல் Postmasterக்கு புகார் கொடுக்கவும். புகார் நகலை எங்களுக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
4. விலாச மாற்றம் தெரிவிக்க விரும்பும் சந்தாதாரர்கள் 26ம் தேதிக்குள் சென்னை அலுவலகத்திற்கு எழுத்து மூலம் தெரியப்படுத்த வேண்டும். தாமதமாக வரும் 'விலாச மாற்றம்' அடுத்த மாதம் முதல் அமல்படுத்தப்படும். தொலைபேசியில் விலாச மாற்றம் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**Advertisemens** கொடுக்க விருப்பமுள்ளவர்கள் கவனத்திற்கு

**Commercial or Matrimonial advertisement** சென்னை அலுவலகத்திற்கு 26 தேதிக்கு முன் வந்து சேரும்படி கொடுக்கவும்.

|| श्रीः ||

# மார்கழிமாத ஶுக்ல ஏகாதஶி

*(ஶ்ரீ வீராபுரம் ஸம்பத் தீக்ஷிதர்)*

*ஆதாரம் : விஷ்ணுஸ்ம்ருதி*

*அறிமுகவுரை :- ஏகாதஶி வ்ரதம்பற்றி ஏற்கனவே பல மஹான்கள் பல வ்யாஸங்கள் எழுதியுள்ளனர். வ்ரதம் என்ற வடமொழிச் சொல் அனுஷ்டித்தல், மேற்கொள்ளுதல் என்ற பொருள் உடையது. ஒன்றை நாமாகவே ஏற்று நடைமுறையில் வைத்துக் கொண்டு வருகிறோம். ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு பக்ஷத்திலேயும் வரும் ஏகாதஶி அன்று முழுவதும் உபவாஸம் இருப்பது என்ற நடைமுறை பெரும்பாலான வைணவர்களிடம் உண்டு. இதை மிகக் கடுமையாக நடைமுறைப்படுத்துபவர்களும் உண்டு. இது முதலில் உபவாஸம் அதாவது (எம்பெருமான் அருகிலேயே இருத்தல்) என்ற நிலையில் மாதத்தில் இரண்டு நாட்கள் அவன் நாமத்தைப் பாடிக் கொண்டு, அவன் நாமத்தை ஜபித்துக் கொண்டு இருத்தல் என்ற நிலையில் தான் வந்திருக்க வேண்டும். அவன் நினைவாக இருக்கும் ஒரு உண்மையான வைணவனுக்கு, உண்ணும் சோறு பருகும் தீர்த்தம் தின்னும் வெற்றிலை எல்லாமே கண்ணனெம்பெருமான் என்று இருக்கும். ஒரு வைணவனுக்குப் பசிஏது! தூக்கம்தான் ஏது ! இந்த நிலையில் உணவிற்கு முக்யத்வம் கொடுக்காமல், உள்ளுணர்வாம் பக்திக்கு முக்யத்வம் கொடுத்த நாள் இந்த ஏகாதஶி. ஏகாதஶி வ்ரதம் அதிலும் குறிப்பாக மார்கழி மாத சுக்ல பக்ஷ ஏகாதஶி வ்ரதம் பற்றி ''விஷ்ணு ஸ்ம்ருதி''யில் சில ஶ்லோகங்களைக் காணும் பேறு பெற்ற நான் யான் பெறும் இன்பம் இவ்வையகம் பெறுக என்று நல்லெண்ணத்தில் இக்கட்டுரையை ஸமர்ப்பிக்கிறேன்.*

मार्ग शीर्ष शुक्लैकादश्या मुपोषितो द्वादश्यां भगवन्तं श्रीवासुदेव मर्चयेत् ।

**மார்க ஶீர்ஷ ஶுக்லைகாதஶ்யா முபோஷிதோ த்வாதஶ்யாம் பகவந்தம் ஸ்ரீவாஸுதேவ மர்சயேத் ।**

*மார்கழி மாதம் (ம்ருக ஶீர்ஷம் நக்ஷத்ரமும் பௌர்ணமியும் ஒருசேர வரும் மாதம்) வளர்பிறை ஏகாதஶியன்று உபவாஸம் இருந்து த்வாதஶியன்று பகவானை ஸ்ரீ வாஸுதேவனை ஆராதனம் செய்ய வேண்டும்.*

पुष्पधूपानुलेपन दीप नैवेद्यैः वह्निब्राह्मण तर्पणैश्च ।

**புஷ்பதூபாநுலேபந தீப நைவேத்யை: வஹ்நிப்ராஹ்மண தர்பணைஶ்ச ।**

*புஷ்பம் (மலர்) தூபம், சந்தனம், தீபம் நைவேத்யம் இவைகளினால் பகவான் அக்னி, ப்ராஹ்மணன் இவர்களை த்ருப்தியடையச் செய்தல் வேண்டும்.*

व्रतमेतत् संवत्सरं कृत्वा पापेभ्यः पूतो भवति ॥ २ ॥

**வ்ரதமேதத் ஸம்வத்ஸரம் க்ருத்வா பாபேப்ய: பூதோ பவதி ।**

*இந்த வ்ரதம் மார்கழி ஶுக்ல ஏகாதஶி தொடங்கி ஒவ்வொரு மாதம் ஒழுங்காக ஒரு வருடம் நடைமுறையில் வைத்துக் கொண்டிருக்கும் ஒருவன் எல்லா பாபங்களினின்றும் நீங்கியவனாய்த் தூய்மையாகிறான்.*

यावज्जीवं कृत्वा श्वेतद्वीप माप्नोति ॥

**யாவஜ்ஜீவம் க்ருத்வா ஶ்வேதத்வீப மாப்நோதி ।**

*தான் ஜீவதசையோடு உள்ள காலமெல்லாம் இந்த வ்ரதம் அனுஷ்டிக்கும் ஒருவன் ஶ்வேத த்வீபம் அடைகிறான்.*

उभयपक्ष द्वादशीष्वेवं संवत्सरेण स्वर्गलोकमाप्नोति ॥ ३ ॥

**உபயபக்ஷ த்வாதஶீஷ்வேவம் ஸம்வத்ஸரேண ஸ்வர்கலோகமாப்நோதி**

*இரண்டு பக்ஷங்களிலும் (வளர்பிறை; தேய்பிறை) வரும் ஏகாதஶிகளில் உபவாஸம் இருந்து த்வாதஶியில் ஆராதனம் செய்து, ஒரு வருஷ காலம் இவ்வ்ரதம் அனுஷ்டித்தால் ஸ்வர்கலோகம் அடையலாம்.*

यावज्जीवं कृत्वा विष्णुलोकम्

**யாவஜ்ஜீவம் க்ருத்வா விஷ்ணுலோகம்**

*தான் ஜீவித்திருக்கும் நாளெல்லாம் இம்மாதிரி ஏகாதஶி வ்ரதம் இருந்தால் ஒருவன் விஷ்ணு லோகம் அடைகிறான். ஏனெனில் அவன் பாதகங்களினின்றும் (பாபங்கள்) விடுபட்டவனாகிறான்.*

पापं च विविधं प्रोक्तं पातकं चाऽतिपातकम् ।
उपपातक संज्ञं च महापातकमेव च ॥ ४ ॥

**பாபம் ச விவிதம் ப்ரோக்தம் பாதகம் சாऽதிபாதகம் ।**
**உபபாதக ஸம்ஜ்ஞம் ச மஹாபாதகமேவ ச ॥**

*பாபங்கள் பலவிதமாகச் சொல்லப்பட்டுள்ளன.*

प्रकीर्णकं चाऽन्यदपि नराणामिह जायते ।
अभोज्य भोजनाज्जातं अगम्यागमनाच्च यत् ॥ ५ ॥

**ப்ரகீர்ணகம் சாந்யதபி நராணாமிஹ ஜாயதே ।**
**அபோஜ்ய போஜநாஜ்ஜாதம் அகம்யாகமநாச்ச யத் ॥**

*சேர்க்கை தோஷத்தால் மனிதர்களுக்குச் சாப்பிடக் கூடாததைச் சாப்பிடுதல் கூடாத உறவுகள் (தகாத உறவுகள்) இவைகள் உண்டாகின்றன. (இதை ஒட்டித் தான் நல்லோர் இணக்கம் : ஸாதுஸங்கமம் இவைகளை வலியுறுத்தும் 'சேரிடம் அறிந்து சேர்' என்ற ஔவையின் மொழியும் வந்தது).*

अयाज्य याजनाद्यच्च अभक्ष्याणां च भक्षणात् ।

अस्पृश्य स्पर्शनाच्चैव परेषां निन्दनाच्च यत् ॥ ६ ॥

**அயாஜ்ய யாஜநாத்யச்ச அபக்ஷ்யாணாம் ச பக்ஷணாத் ।**
**அஸ்ப்ருஶ்ய ஸ்பர்ஶநாச்சைவ பரேஷாம் நிந்தநாச்ச யத் ॥**

*செய்யக் கூடாதவைகளைச் செய்தல், சாப்பிடக் கூடாதவைகளைச் சாப்பிடுதல், தொடக் கூடாதவைகளைத் தொடுதல், பிறரது நிந்தனைகள் (தேவையில்லாமல் பிறரை தூஷிப்பது ஆகியவை பாபங்கள்).*

आत्मसंस्तवनाद्यच्च पारदार्यं कृतं च यत् ।

विहिताकरणाद्यच्च परवित्तापहारतः ॥ ७ ॥

**ஆத்மஸம்ஸ்தவநாத்யச்ச பாரதார்ய க்ருதம் ச யத் ।**
**விஹிதாகரணாத்யச்ச பரவித்தாபஹாரத: ॥**

*சுய ஸ்தோத்ரம், மாற்றான் மனைவியை விரும்புதல் (புணர்தல்) விலக்கப்பட்ட தகாத செயல்களைச் செய்தல், பிறர் பொருளை அபஹரித்தல் இவைகளும் பாபங்கள் (இவை தெரிந்தே செய்யும் பாபங்கள்). இப்படிப்பட்ட பாபங்களை நம்மில் பலர் நம்மையும் அறியாமல் செய்கிறோம்.*

ज्ञानाज्ञानकृतं यच्च स्वयमन्येन कारितम् ।

तत् सर्वं विलयं यान्ति एकादश्यामुपोषणात् ॥ ८ ॥

***ஜ்ஞாநாஜ்ஞாநக்ருதம் யச்ச ஸ்வயமந்யேந காரிதம் ।***
***தத் ஸர்வம் விலயம் யாந்தி ஏகாதஶ்யாமுபோஷணாத் ॥***

*அறிந்தோ அறியாமலோ, நாமாகவோ பிறர் தூண்டுதலாலோ செய்கின்ற எல்லா பாபங்களும் ஏகாதஶி வ்ரதம் இருப்பதால் அழிந்து விடுகின்றன.*

एकादशी महापुण्या मार्गशीर्षस्य शुक्लगा ।

तस्यामुपोषितो यस्तु द्वादश्यां पूजयेत् हरिम् ॥

**ஏகாதஶீ மஹாபுண்யா மார்கஶீர்ஷஸ்ய சுக்லகா ।
தஸ்யாமுபோஷிதோ யஸ்து த்வாதஶ்யாம் பூஜயேத் ஹரிம் ॥**

*ஏகாதஶி வ்ரதம் மிகவும் புண்யமானது. (ஏனெனில் அன்று முழுவதும் பகவன் நாமாவையே சொல்லிக் கொண்டிருப்பதால்) அதிலும் மார்கழி சுக்ல பக்ஷ ஏகாதஶி உபவாஸம் இருந்து மறுநாள் த்வாதஶியன்று பகவதாராதனம் பண்ணுவது மிகவும் புண்யமானது.*

तस्य पापानि नश्यन्ति विष्णौ भक्तिश्च जायते ।
ज्ञानं च शाश्वतं येन संसारान्मुच्यते नरः ॥

**தஸ்ய பாபாநி நஶ்யந்தி விஷ்ணௌ பக்திஶ்ச ஜாயதே ।
ஜ்ஞாநம் ச ஶாஶ்வதம் யேந ஸம்ஸாராந்முச்யதே நர: ॥**

*அப்படி ஏகாதஶி வ்ரதம் இருப்பவனின் எல்லாப் பாபங்களும் அற்றுப் போய் விடுகின்றன. அவனுக்கு விஷ்ணுவிடம் பக்தியும் உண்டாகிறது. அதனால் நிலையான தெள்ளறிவும் உண்டாகிறது. அதனால் அவன் ஸம்ஸாரத் தளையினின்றும் விடுபட்டவனாகிறான்.*

*ஆசிரியர் குறிப்பு :- 1. மார்கழிமாத சுக்லபக்ஷ ஏகாதஶிதான் வைகுண்ட ஏகாதஶி.*

*2. ஏகாதஶியின் பெருமையை உலகிற்கு உணர்த்தியவன் ருக்மாங்கதன்.*

*3. அம்பரீஷன் செய்த த்வாதஶி பூஜை மார்கழிமாத சுக்லபக்ஷ த்வாதஶியே.*

*4. ஏகாதஶியை விஷ்ணுதினம் என்று குறிக்கவே ஹரிவாஸரம் என்றார்கள்.*

*5. இவைகளைச் சிந்தையில் கொள்வோம்- ஏகாதஶி வ்ரதம் இருப்போம்.*

*6. பகவானிடம் உண்மையான பக்தி கொண்டு வாழ முயல்வோம்.*

*பக்தியின் ஒன்பது வகை வெளிப்பாடுகள் அடுத்த கட்டுரையில்.*

|| ஸ்ரீ: ||

ஸ்ரீமதே ரங்கராமாநுஜ மஹாதேஸிகாய நம:

# கோவையில் ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரம நிர்மாணத் திருப்பணி

## ஓர் வேண்டுகோள்

*ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீரங்கராமாநுஜ மஹாதேஸிகன் (ஸ்ரீமுஷ்ணம்) ஸ்வாமிகளின் திவ்யானுக்ரஹத்துடனும் திவ்ய நியமனத்துடனும் கோயம்புத்தூர் மேட்டுப் பாளையம் சாலையில் ஆச்ரமம் கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. சுமார் 2,500 சதுர அடி கொண்ட கட்டிடம் கட்ட திட்டமிடப் பட்டுள்ளது.*

*மேற்படி திருப்பணியை 2009ம் ஆண்டு முடிவுக்குள் பூர்த்தி செய்ய வேண்டும் என்பது ஸ்ரீமதாண்டவன் திருவுள்ளம். ஆதலால் ஆச்ரம சிஷ்யர்களும் மற்றும் அபிமானிகளும் இதில் பங்குகொண்டு பொருள் உதவி செய்யும்படி ப்ரார்த்திக்கப்படுகிறார்கள்.*

*இந்தத் திருப்பணிக்கு சுமார் ரூபாய் 30 லக்ஷம் ஆகும் என உத்தேசமாக கணக்கிடப்பட்டுள்ளது. தங்களது நன்கொடைக்கான செக்/டிராப்ட்டை ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமம் என்ற பெயரில் எடுத்து கீழ்க்கண்ட விலாசத்துக்கு அனுப்பும்படி ப்ரார்த்திக்கிறேன்.*

**ஸ்ரீ V. ராமரத்னம்**, *109, பக்ஷிராஜா அபார்ட்மென்ட்ஸ், புலியகுளம் ரோடு, கோயம்புத்தூர் - 641 045,* செல் : 9443161458

*ஸ்ரீமதாண்டவன் நியமனப்படி*

*தாஸன்*

*வடுவூர் வீரவல்லி கனபாடி ஸ்ரீநிவாஸ தேசிகாசார்யர்*

|| ஸ்ரீ: ||

# அவதூதரின் உபாக்யானம்

(ஸ்ரீமான் பா. வெங்கடாசாரி)

**4. ஜலம் (நீர்)** *(முன் இதழ் தொடர்ச்சி)*

*ஜலம் (நீர்) தனது இயற்கையான இயல்பின் ப்ரகாரம் பரிஶுத்தமானதாகவும், இனிப்பானதும் மேலும் பவித்ரமானதாகவும் சொல்லப்படுகிறது. கங்கை, காவேரி, முதலிய தீர்த்தங்களில் ஸ்நானம் - தர்ஶனம், ஸ்பர்ஶம் மேலும் அந்த நதிகளின் பவித்ர நாமாக்களைச் சொல்லுவதால் மக்கள் பவித்ரமடைகிறார்கள். இதேபோல் சாதுக்களும் ஸ்வபாவத்தினாலேயே / இயற்கையாகவே பவித்ரமானவர்களாயும், பரிஶுத்தமானவர்களாகவும் எப்பொழுதும் அன்புடன் மக்களைக் காப்பாற்றுபவர்களாகவும் இருக்க வேண்டும். சாதுக்களை தர்ஶனம் செய்து நமஸ்காரம் செய்து, (அவர்களிடம் உபதேஶம் பெற்ற) நாம ஜபத்தால் மக்கள் பவித்ரமடைகிறார்கள். இதை ஜலத்தினடமிருந்து கற்றுக் கொண்டேன்.*

**5. அக்னி (நெருப்பு)**

*அக்னி மிகுந்த தேஜஸ்வியாகவும், ஜ்யோதிஸ்ரூபமாகவும் / ப்ரகாசமுடையாகவும் உள்ளது. வேறு யாறும் தனது தேஜஸால் அதை முறியடிக்க முடியாது. அக்னியிடம் சேர்த்துவைத்துக் கொள்ள, வேறு பாத்திரங்களோ அல்லது ஸாதனங்களோ கிடையாது. அனைத்தையும் தனது வயிற்றில் வைத்துக் கொள்கிறது. அதற்கு அளிக்கும் பலவிதமான உபபதார்த்தங்களை, உண்ட போதிலும் ஸம்பந்தப்பட்ட பதார்த்தங்களின் தோஷத்தால் அது மாசு அடைவதில்லை.*

*இதேபோல் சாதுக்களும் ப்ரஹ்ம தேஜஸ்விகளாகவும், தபசில் ஈடுபாடு உள்ளவர்களாகவும்,*

இந்த்ரியங்களை - இயக்க மட்டும் ஆதாரமான போஜனத்தை மாத்திரம் சேகரித்து உண்கிறார்கள்.

யதா யோக்யமான அவச்யமான உரிய வஸ்துக்களை உபயோகித்தும் கூட, இந்த்ரியங்களை தனது வசத்தில் - கட்டுப்பாட்டில் வைத்து இருக்கிறார்கள். தான் உபயோகிக்கும் வஸ்துக்களின் எவ்வித தோஷமும் தன் மேல் படாமல் காப்பாற்றிக் கொள்கிறார்கள். விரகு, கட்டை, மரம் ஆகியவைகளில் அக்னி கண்ணுக்குப் புலப்படாமல் இருக்கிறது. சில இடங்களில் (எரியும் சமயம்) புலப்படுகிறது.

ஸாதகன் அக்னியைப் போல் சில ஸமயம், சில இடங்களில் மறைவாகவும், சில ஸமயங்களில் நேரிலும் காணப்படுகிறான். பக்தர்கள் அவரை உபாஸனை செய்ய வாய்ப்பு அளிக்கும் பொருட்டு ஸாது மஹாத்மாக்களும் அக்னியைப் போல் இருக்க வேண்டும்.

அக்னியில் ஹோமம் செய்யும், வேள்வி புரியும், ஸாதகனின் ஸகல பழைய, மேலும் புதிய பாபங்களையும், அஶுபங்களையும் அக்னி எரித்து விடுகிறது. மேலும் எங்கும் எல்லா ஹவிஸ்களையும் ஏற்றுக் கொள்கிறது.

6. சந்த்ரன் (சந்திரமா)

சந்த்ரனின் கதியைப் பூர்ணமாக அறிய முடியாமல் உள்ளது. காலத்தின் ப்ரபாவத்தால் குறைந்தும், வளர்ந்தும் காணப்படுகிறது. ஆனால் சந்த்ரன் சந்த்ரன்தான். அது குறைவதுமில்லை. வளர்வதும் இல்லை.

இதேபோல் பிறப்பு முதல் இறப்புவரை உள்ள எல்லா நிலைகளும் ஶரீர ஸம்பந்தமானவைதான். இதற்கு ஆத்மாவோடு ஸம்பந்தமில்லை.

நெருப்பின் ஜ்வாலை அல்லது விளக்கின் சுடர் நொடிக்கு நொடி உண்டாகிறது. எரிய ஆரம்பிக்கிறது. அணைந்தும் போகிறது. இது நிரந்தரமாக நடைபெறுகிறது. (ஆனால் காணப்படுவதில்லை).

ஜல ப்ரவாகம் போல, காலத்தின் போக்கில் ஒவ்வொரு நிமிடமும் ஶரீரம் உண்டாகிக் கொண்டும், அழிந்து கொண்டும் இருக்கிறது. நமது அறிவின்மையால் (அஜ்ஞானம்) காணமுடிவதில்லை. கண்களுக்குப் புலப்படுவதில்லை.

7. ஸூர்யன்

ஸூர்யன் பூமியிலிருந்து ஜலத்தை க்ரஹித்துக் கொண்டு - அதன் (மழை காலம்) காலத்தில் மழை பெய்விக்கிறான்.

இதேபோல் யோகிகள் தனது ஜ்ஞானம், மேலும் ஜ்ஞானேந்த்ரயத்தின் மூலம் - பலவித ஜ்ஞானத்தைப் பெருகிறார்கள். அதை தேவைக்கேற்ப மக்களுக்கு அளிக்கிறார்கள். இந்த்ரிய ஸம்பந்தமான எந்த வஸ்துவிலும் அவர்களுக்கு ஆஸக்தி - பற்றுதல் இருப்பதில்லை. மனிதனின் ஸ்தூல புத்தியில் பூமியில் பல பாத்திரங்களில் வைக்கப்பட்டுள்ள ஜலத்தில் சூரியன் பலதாகத் தோன்றுகிறது. ஆனால் சூரியன் ஒன்றுதான் பல இல்லை. இதேபோல் ஸ்தூல புத்தியுள்ளவன் ஸ்தூல - ஸூக்ஷ்ம பொருள்களிலும் (அசையும் பொருள் அசையாப் பொருள்) ஆத்மாவை தனித் தனியாகக் காண்கிறான். ஆனால் ஸூரியனைப்போல் ஆத்மா ஒன்றுதான். ஸ்வரூபத்தில் எந்த வித்தியாசமும் இல்லை.

8. புறா :- யாரிடமும் அளவுக்குமீறி மிக அதிகமான அன்பும், ஆஸக்தியும் வளர்த்துக் கொள்பவன், காலப் போக்கில் அவனுடைய அறிவையும், சுதந்த்ரத்தையும் இழந்து அவன் மிகவும் தீன தஶையை அடைவான். மிகுந்த வருத்தமடைய வேண்டிவரும்.

ஒரு காட்டில் ஒரு புறா வசித்து வந்தது. அது ஒரு மரத்தில் கூடு கட்டிற்று. தனது ஆண் புறாவோடு - இரண்டும் (ஆண்புறா, பெண் புறா) பல ஆண்டுகள் அதில் மிக ஆனந்தமாக வசித்துவந்தன. இரண்டுக்கும் குடும்ப வாழ்க்கையின் மிகுந்த பற்றுதல் ஏற்பட்டு விட்டது. அங்கு

மரங்களுக்கு மத்தியில் இரண்டும் ஒன்றாக மிக மகிழ்ச்சியுடன் வசித்து வந்தன. ஒன்றாகச் சாப்பிட்டு, விளையாடி, தூங்கிவந்தன. காலாந்தரத்தில் பெண் புறா கர்பமடைந்தது. தனது கணவனின் அருகில் அந்தக் கூட்டில் முட்டை இட்டது. காலாந்தரத்தில் முட்டைகள் உடைந்து, அதிலிருந்து அழகான குஞ்சுகள் வெளிவந்தன. ஆண் புறா பெண் புறா இரண்டும் தன் குஞ்சுகளை, மிகுந்த பாசத்துடனும், மகிழ்ச்சியுடனும், பாலூட்டி, தாலாட்டி வளர்த்து வந்தன. அவைகளின் ஹ்ருதயம் குஞ்சுகளின் அன்பில் கட்டுப்பட்டு இருந்தது.

குஞ்சுகள் பெரிதானதும், ஒருநாள் இரண்டு புறாக்களும் இரை தேடிக் கொண்டுவரக் காட்டை அடைந்தன. இரை தேடுவதில் வெகு நேரம் காட்டில் சுற்றி வந்தன.

இரண்டு புறாக்களும் இல்லாத இந்த ஸமயத்தில், ஒருவேடன் சுற்றி அலைந்து, அந்தக் காட்டின் பக்கம் வந்தான். கூட்டில் புறாக்குஞ்சுகள் விளையாடிக் கொண்டிருந்தன. கூட்டின் ஸமீபம் வேடன் தனது வலையை விரித்து அந்தக் குஞ்சுகளைப் பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டான். சீக்ரமே புறாக் குஞ்சுகள் வலையில் வந்து சிக்கிக் கொண்டன.

ஆண் புறா, பெண் புறா இரண்டும், இறை தேடி, சேகரித்துக் கொண்டு கூட்டிற்கு அருகில் வந்த பொழுது அவைகளின் இதயத்தின் அம்சமான, சின்னஞ்சிறு குஞ்சுகள் வலையில் சிக்கிக் கொண்டு இருப்பதைக் கண்டன. மிகவும் வருத்தத்துடன் ''கூம் கூம்'' என்று மிகவும் தீனமான குரலை எழுப்பிக் கொண்டு இருந்தன. பெண் புறாவுக்கு அளவுக்கு மீறி தாங்கமுடியாது வருத்தம் ஏற்பட்டது. தனது குஞ்சுகள் வேடனின் வலையில் சிக்குண்டதைக் கண்டு தன் நிலையை இழந்தது. அன்பின் மிகுதியால் தானும் குஞ்சுகளின் ஸமீபம் சென்று வலையில் சிக்கிக் கொண்டது.

எனது அன்பிற்கு அன்பான பெண் புறு என்னைத் தனியாக விட்டு விட்டு தனது குஞ்சுகளுடன் ஸ்வர்கம் அடைந்துவிட்டது என்று நினைத்து அது மிகவும் வருத்த முற்று அலர ஆரம்பித்தது. எனது குஞ்சுகளும், மனைவியும் இறந்துவிட்ட பிறகு இந்த உலகத்தில் வாழ நான் விரும்பவில்லை. யாருக்காக வாழ வேண்டும்?

பெண் புறு மேலும் குஞ்சுகள், வேடனின் வலையில் சிக்குண்டு துடித்துக் கொண்டு இருந்தன. அந்த முட்டாளான ஆண்புறு இவைகளைக் கண்டு மிகவும் வேதனைப்பட்டது. ஆனாலும் தானும் அந்த வலையில் குதித்து அதில் சிக்கிக் கொண்டது.

ஆண் புறு, பெண் புறு, குஞ்சுகள் அனைத்தும் வலையில் சிக்கிக் கொண்டதால் வேடன் மிகக் களிப்படைந்தான். அவைகளை எடுத்துக் கொண்டு மிகவும் ஆனந்ததுடன் தனது வீட்டிற்கு புறப்பட்டுக் சென்றான்.

குடும்பஸ்தன் தனது குடும்பத்தால், மிகுந்த மகிழ்ச்சி பெறும் நோக்கத்துடன் தனது குடும்பத்தைக் காப்பாற்றுவதில் தனது சுயநிலையை இழந்து விடுகிறான். அவனுக்கு அமைதி கிடைப்பதில்லை. அமைதியே வாழ்க்கையின் லக்ஷியம்.

ஷெ புறுக்களைப் போலத் தனது குடும்பத்துடன் பாசத்தால் மிகவும் கஷ்டப்பட்டு கடைசியில் மரணமடையும் நிலையும் வந்துவிடுகிறது. மனிதனின் ஶரீரம் முக்தி மார்க்கத்தின் வாயில். மனிதனாகப் பிறந்து, இந்தப் புறுக்களைப் போல் குடும்ப பாசத்தில் சிக்கிக் கொண்டு மிகவும் உயர்ந்த மனிதப் பிறவியை எடுத்து, கீழே வீழ்ந்து விடுகிறான். ஶாஸ்த்ரம் இதை ஆரூடச்ச்யுத என்று சொல்லுகிறது.

9. மலைப் பாம்பு :- மனிதன் உட்பட எல்லா ஜீவன்களும் தனது விருப்பம் இல்லாமலேயே கழிந்த ஜன்மத்தின் கர்ம வினைப் பலனாய் இந்த உலகத்தில்

ஸுக-துக்கங்களை அனுபவிக்கிறார்கள். இதைப் புரிந்து கொண்டு புத்திமான் புருஷர்கள் இதற்காக விசேஷ ப்ரயத்தினம் செய்யத் தேவையில்லை.

ஆசைப்படாமலேயே, பிறரைக் கேட்டு வாங்காமலேயே கிடைக்கும் ஆகாரப் பொருட்கள் - ஸாதாரண வஸ்துக்கள் கூட மிகவும் ருசியாக உள்ளன. அதிகம் கிடைத்தாலும் குறைவாகக் கிடைத்தாலும் மலைப் பாம்புபோல அதை விரும்பி சாப்பிட்டு ஆனந்தமாக வாழ் நாட்களைக் கழிக்கிறார்கள். இதில் வருத்தப்படுவதில்லை. கிடைக்கும் போஜனத்தை சாப்பாட்டை சாப்பிட்டு அமைதியாக வாழ் நாட்களை கழிக்கிறார்கள். ஏதாவது ஒரு தினம் சாப்பாடு கிடைக்காவிட்டாலும் அல்லது குறைவாகச் கிடைத்தாலும் வருத்தப்படுவதில்லை. கிடைத்ததைக் கொண்டு த்ருப்தியுடன் வாழ்கிறார்கள். கிடைக்காவிட்டாலும் இதுதான் ப்ராப்தம் (தலைவிதி) என்ற எண்ணத்துடன் தனது அமைதியை இழப்பதில்லை. இதன் ப்ரகாரம் பழகிக் கொள்ள வேண்டும். அவனுக்கு மனோபலம், சரீர பலம், இந்த்ரிய பலம் ஆகியவை இருந்தபோதிலும் வாழ்க்கை நிலையில் அமைதியாக, படபடப்பில்லாமல் இருக்க வேண்டும். தூக்கம் வராவிட்டாலும், தூங்குபவன் போல் அமைதியாக இருக்க வேண்டும். கர்மேந்திரியங்கள் மூலம் விசேஷ முயற்சிகள் செய்வதில்லை.

(இது மிக உயர்ந்தது. ஆதர்சம். தற்கால கலியுகத்தில் இதை கடைபிடிக்க முடியுமா?)

10. ஸமுத்திரம் :- ஸமுத்திரத்தினிடமிருந்து நான் கற்றுக் கொண்டவை.

சாது புருஷர்கள் எப்பொழும் ஸந்தோஷமாகவும் கம்பீரமாகவும் இருக்க வேண்டும். மேலும் அவர்களின் எண்ணங்கள் (பாவனை) ஆழ்ந்ததாகவும், அபரிமிதமாகவும், எல்லையற்றதாகவும் இருக்க வேண்டும். ஸாது புருஷன் (மஹாத்மா) கடல் போல் இருக்கிறான்.

மழை காலத்தில் நதியின் ஜலம் (வெள்ளம்) ஸமுத்ரத்தில் வந்து சேருகிறது. நதிகளின் வெள்ளத்தால், நதியின் நீர் ஸமுத்திரத்தில் வந்து சேருவதால் கடலில் வெள்ளம் வந்து கரையைக் கடப்பதில்லே. கோடை காலத்தில் நதிகளின் ஜலம் வராத சமயம் குறைவதுமில்லே.

இதைப் போலவே பாகவத புருஷர்களும் ஸாது மஹாத்மாக்களும் உலகாயத வஸ்துக்கள் கிடைக்காததால் வருத்தமடையக் கூடாது. கிடைப்பதால் ஸந்தோஷப்படவும் கூடாது. ஸம நிலேயில் இருக்க வேண்டும்.

11. விட்டில் பூச்சி :- (பதங்கா)

நான் ஸாதாரணமாகக் காணப்படும் விட்டில் பூச்சியிடமிருந்து கீழ்கண்டவற்றை கற்றுக்கொண்டேன். விட்டில் பூச்சி, அழகான ஜ்வாலே உருவத்தைக் கண்டு, மோஹித்து, ஆகர்ஷிக்கப்பட்டு விளக்கு ஜ்வாலேயில் (நெருப்பு)தானே விழுகிறது. மேலும் எரிந்து இறந்து போகிறது.

இதைப் போல் தனது இந்த்ரியங்களேத் தன் வசத்தில் கட்டுப்படுத்தி வைத்துக்கொள்ளாதவனும், அழகான பெண்களே கண்டக்கால், அந்த அழகிலும், அங்க சேஷ்டைகளிலும் மிகுந்த மகிழ்சியடைந்து மயங்கி விடுகிருன். இதனுல் அந்தகாரமயமான நரகத்தில் விழுந்து தன்னேத் தானே நாசமாக்கிக் கொள்கிருன். மரண மடைகிருன்.

அவனுக்கு மோக்ஷம் கிடைப்பதில்லே. இது பகவானது மாயை தவிர வேறு எதுவாக இருக்க முடியும்? பொன், பெண் அங்கங்களின் வெளியழகு ஆகியவைகளில் மயங்கி அதில் சிக்கிக் கொள்வதால் கடவுளின் அருளேப் பெறமுடியாமலும், மோக்ஷம் அடைய முடியாமலும் போய்விடுகிறது.

உலக மாயையிலும், நம்மை வசீகரிக்கும் வஸ்துக்களிடமும் அகப்பட்டுக் கொண்டு, தனது விவேகத்தை சுயபுத்தியை இழந்து, விட்டில் பூச்சி மாதிரி அதில் விழ்ந்து - ஈடுபட்டு இறந்து போகிறுன்.

12. தேனீ :- பிறருக்கு எவ்வித கஷ்டமும் கொடுக்காமல், தேனீயைப் போல, ஸன்யாசி தனது வாழ்க்கையை நடத்த வேண்டும். குடும்பத்தில் உள்ளவர்களுக்கும் எவ்விதக் கஷ்டமும் கொடுக்காமல் இருக்க வேண்டும். ஸன்யாஸி தனது வயிற்றுப் பசியைத் தணிக்க, தனது தேவைக் கேற்ப, பல வீடுகளிலிருந்து போஜனம் பெற வேண்டும். தேனீ அனேக பெரிய, சிறிய, பூக்களிலிருந்து தேன் எடுத்து சேகரிக்கிறது. அதேபோல் ஸன்யாஸி, சிறிய, பெரிய எல்லா தர்ம க்ரந்தங்களேயம், அத்யயனம் செய்து, அதன் ஸாரத்தை, ஞானத்தை க்ரஹித்துக்கொள்ள வேண்டும்.

ஸன்யாஸி, தான் பிற வீடுகளிலிருந்து பெற்றதை (பிக்ஷை), சாயந்திரத்திற்கோ, அல்லது மறு தினத்திற்கோ வைத்துக் கொள்ளக் கூடாது. அவருக்கு எந்தப் பாத்திரமும் தேவைப்படுவதில்லே. தனது கையில் வாங்கி வயிற்றில் (பாத்திரம்) வைத்துக் கொள்கிறுர். சேர்த்துவைக்க கூடாது. இல்லாவிடில் தேனீ போல் அவரின் வாழ்க்கை கஷ்டமயமாகிவிடும். சேர்த்துவைத்தபொருளோடு தனது வயிரையும் இழக்க வேண்டிவரும். இதை நான் தேனீக்களின் வாழ்க்கையிலிருந்து கற்றுக் கொண்டேன் என்று அவதூதர் கூறினுர்.

(தொடரும்)

|| ஸ்ரீ: ||

# துர்வாஸருக்கு ஔர்வ மஹர்ஷியின் சாபம்

வடுவூர் வீரவல்லி கனபாடி
ஸ்ரீ.உ.வே. N. சடகோபாசார்யர்,
மேற்குமாம்பலம், சென்னை-33

*நாராயண முனிவர் என்பவர் நாரதரிடம் கூறுகிறார்- ஹே முநே ! நீங்கள் துர்வாஸருடைய ரஹஸ்யமான சரித்ரத்தைக் கேளுங்கள். மிகவும் ஆச்சர்யமான சரித்ரம். ஊர்த்வ ரேதஸ். அதாவது, நைஷ்டிக ப்ரஹ்மசாரியாக இருந்த துர்வாஸ மஹர்ஹஷிக்கும் விவாஹம் நடந்தது. மஹா தைர்யஶாலியான அவர் ஒரு சமயம், திலோத்தமையின் அலங்காரத்தைப் பார்த்தார். ஜிதேந்த்ரியரான அவருடைய மனதிலும் காம வாசனை ஏற்பட்டு விட்டது. இந்த சமயத்தில்தான் ஔர்வ மஹர்ஷி தன் புத்ரியுடன் அங்கு வந்து சேர்ந்தார். அவருடைய கன்னிகைக்கு அவர் வரன் தேடிக் கொண்டிருந்தார். அவள், துர்வாஸரைப் பார்த்ததும் அவரையே பர்த்தாவாக அடைய வேண்டுமென்று விரும்பினாள். அவளது மனம், வேறு எந்த ஆணையும் விரும்பவில்லை. ஔர்வமுனிவர், ப்ரஹ்மாவின் தொடையிலிருந்து உண்டானவர். அதனால்தான் அவருக்கு ஔர்வர் எனப் பெயர் வந்தது. அவருடைய முழங்காலிலிருந்து ஒரு பெண் உண்டாளாள். அவளுடைய பெயர் कदली (கதலீ) என்பதாகும். அவள் துர்வாஸரைத் தனது கணவனாக அமைத்துக்கொள்ள விரும்பினாள். இதை ஔர்வர் அறிந்து கொண்டார். தன் பெண்ணுடன், துர்வாஸரின் எதிரில் வந்தார். எதிரில் ஔர்வரைப் பார்த்ததும் வெகு வேகமாக எழுந்தார். அவரை நமஸ்காரம் செய்தார். ஔர்வ முநிவரும் அவரைத் தழுவிக் கொண்டார். அவரிடம் தன் பெண்ணின் அபிப்ராயத்தை வெளியிட்டார். ஔர்வர் கூறினார். ஹே முநே ! அவள் என்னுடைய அழகான பெண். இவளுக்கு ''கதலீ'' என்று பெயர். இவள் விவாஹத்துக்குத்*

தகுதியாகிவிட்டாள். செய்தியாளர்களின் வாயால் தங்களுடைய புகழைக் கேட்டு தங்களையே தன்னுடைய பதியாக நினைத்து வருகிறாள். அந்தப் பெண் அயோநிஜா. தன் ஒப்பற்ற அழகால் மூன்று லோகத்தையும் கவர்ந்து வருகிறாள். அவளிடம் எல்லா நற்குணங்களும் உள்ளன. ஆனால் ஒரே ஒரு தோஷம் மட்டும் உள்ளது. அவள் மிகவும் கலகம் செய்பவள். கோபம் வந்தால் கண்டபடி பேசி விடுவாள். ஆகையால் எல்லா நற்குணங்களுக்கிடையே ஒரே ஒரு தோஷம் இருப்பதால் இவளை த்யாகம் செய்யக் கூடாது. ஔர்வரின் வார்த்தையைக் கேட்டு, துர்வாசருக்கு வருத்தமும் சந்தோஷமும் ஏற்பட்டது. அவர், குணங்களாலும், அழகாலும் நிறைந்த பெண்ணை எதிரில் பார்த்தார். அழகான பெண் கிடைக்கப் போகிறாள் என்பதால் சந்தோஷம். அழகான பெண் மோக்ஷ மார்க்கத்திற்கும், தபஸ்ஸிற்கும் பாதகம் என்பதால் வருத்தம். ஞானிகளான பெரியோர்கள் ஞானம் என்கிற கத்தியினாலும் விலங்கை உடைத்து எறிய முடியாது. அழகு தபஸ்ஸிற்கு விரோதமானது. ஆனால் அழகான பெண், மனிதனை ஸம்ஸார ஸாகரத்தில் ஆழ்த்தி விடுவாள். ஆயினும் அழகான பெண் எப்பொழுதம் ஸுகம் கொடுப்பவள்.

இவ்வாறு பலவாறாக யோசித்து துர்வாஸர் ஔர்வரிடம் கூறினார். ஹே மஹர்ஷே ! எல்லாவற்றையும் விட அதிக ஸுகம் கொடுக்கக் கூடியது பகவான் க்ருஷ்ணனின் சரணகமல ஸேவை. இங்கு இப்பொழுது நான் பகவான் க்ருஷ்ணனின் திருவடிகளைத் த்யானம் செய்து கொண்டிருந்தேன். ஆனால் இந்த சுபமான வேளையில் அதற்கு பாதகம் ஏற்பட்டுவிட்டது. பூர்வ ஜன்மாவில் செய்த எந்த கர்ம தோஷத்தினால் இந்தத் தடங்கல் வந்தது என்று தெரியவில்லை. ஹே முநே ! நான் உங்கள் பெண்ணின் நூறு கடுமையான வார்த்தைகளைப் பொறுத்துக் கொள்வேன். அதற்கு மேல் போனால், அதன் விளைவுகளை அவளுக்குக் கொடுப்பேன். இப்பொழுது நான்

உங்கள் உத்தரவைத் தலைமேல் ஏற்று உங்கள் பெண்ணை விவாஹம் செய்து கொள்வேன். இவ்வாறு சொல்லி துர்வாஸர் மௌனமானார். ஔர்வமுநிவரும் தனது கன்னிகையை வைதிக முறைப்படி துர்வாஸருக்கு விவாஹம் செய்து கொடுத்தார். துர்வாஸரும், மங்களம் என்று கூறி விவாஹம் செய்து கொண்டார். ஔர்வமுநி, அவருக்கு வர தக்ஷிணைக் கொடுத்தார். பிறகு பாசத்தினால் அழ ஆரம்பித்தார். பெண்ணைப் பிரிந்த வருத்தம் முற்றும் துறந்த முனிவரானாலும் விடாது. அப்பொழுது ஔர்வர் பெண்ணிடம் கூறினார். நான் உனக்கு நீதி வார்த்தைகளைச் சொல்கிறேன் கேள். ஒரு பெண்ணிற்கு கணவன் இந்த உலகத்திலும் பரலோகத்திலும் நன்மை செய்யக் கூடியவன். அவன்தான் சிறந்த பந்து. எல்லா பெண்ணிற்குமே கணவனைத் தவிர சிறந்த ப்ரியமானவன் கிடையாது. கணவன்தான் ஒரு பெண்ணிற்கு குரு. தெய்வ பூஜை, வ்ரதம், தானம், தபஸ், உபவாஸம், அதிதி ஸேவநம், ஆகியவைகள், பதிஸேவைக்கு ஈடாகாது. பதி வ்ரதைகளுக்கு இவற்றால் எந்த ப்ரயோஜனமும் இல்லை. ஸமஸ்த ஶாஸ்த்ரங்களிலும், பதிஸேவையே உத்தமம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஹே கதலீ ! நீ தினந்தோறும் கணவனுக்குப் பணிவிடை செய்து வா.உன் கணவனைக் குறித்து பரிஹாஸமோ அலக்ஷ்யமோ செய்யக் கூடாது. அவர் இல்லாத நேரத்தில் அவரைக் கண்டபடி ஏசக் கூடாது. இந்தப் பாரத பூமியில் எந்தப் பெண், தன் இஷ்டப்படி கணவனை நிந்திக்கிறாளோ, அவளுக்கு ப்ராயச்சித்தமே சொல்லப்படவில்லை. கணவனை நிந்திப்பவள், என்ன பூஜை செய்தாலும், அவை யாவும் வீண்தான். அவள் நூறு கல்பம் வரை நரகத்தில் உழல்கிறாள். இப்படித் தன் பெண்ணிற்கு உபதேசம் செய்துவிட்டு ஔர்வர் சென்று விட்டார்.

முநிவர் துர்வாஸரும் தன் பத்நியுடன் ஸந்தோஷமாகக் காலத்தைக் கழித்து வந்தார். அவர்களிருவரும் பொருத்தமான தம்பதிகளாக விளங்கினார்கள். துர்வாஸரும், தபஸ் எல்லா வற்றையும்

விட்டுவிட்டு இல்லற தர்மத்தில் ஈடுபட்டார். கதலியும் அவ்வப்பொழுது தன் இயல்புக்கேற்ப அவரிடம் கலகம் செய்து வந்தாள். கடுமையான சொற்களையும் சொல்லி வந்தாள். துர்வாஸர் பலமுறை அவளுக்கு ஆலோசனை சொன்னார். ஆறுதல் படுத்தினார். ஆயினும் தன் பழக்கத்தை அவள் விடவில்லை. கடுமையான சொற்கள், நூறுமுறையைத் தாண்டிவிட்டன. ஒரு சமயம் கடுமையான சொற்களைக் கேட்டு, துர்வாஸருக்குக் கடுமையான கோபம் வந்தது. அதனால், அவளைச் சாம்பலாகப் போ என சபித்து விட்டார். அவள் எறிந்து சாம்பலாகிவிட்டாள். எத்தனையோ முறை பொறுத்துவந்த துர்வாஸ மஹர்ஷிக்குப் பொறுமை போய்விட்டது. அவளுடைய ஶரீரம் சாம்பலாகி விட்டதாலும், அவளுடைய ஜீவன் கூறிற்று. அது ஆகாசத்திலிருந்து கொண்டே கூறியது. ஹே நாத ! ஹே ரிஷே ! நீங்கள் உங்களுடைய ஞான த்ருஷ்டியால் எல்லாவற்றையும் பார்க்கிறீர்கள். நீங்கள் எல்லாம் அறிந்தவர். உயர்ந்த வார்த்தையோ, சுடு சொல்லோ, கோபமோ, வருத்தமோ, பசியோ, தாஹமோ யாவும் இந்த ஶரீரத்தின் தர்மங்களாகும். ஆத்மாவின் தர்மமல்ல. இந்த ஶரீரம், ஸத்வம், ரஜஸ் மற்றும் தமோ குணங்களால் ஆனது. ஸத்வகுணம் அதிகமாகும் பொழுது நல்ல வார்த்தையும், ரஜோகுணம் மிகும் பொழுது நல்லது கெட்டது இரண்டும் கலந்தும் மற்றும் தமோ குணம் அதிக மாகும் பொழுது கெட்ட வார்த்தைகள் மட்டும் வெளிவருகிறது. இது ஶரீரத்தின் தர்மம். தமோ குணத்தால் கோபம் அதிகரிக்கும். அதனால் கெட்ட சொல் சொல்ல நேரிடும். யாவும் குணங்களின் நிமித்தத்தால் ஏற்படுகின்றன. அப்படி இருக்கும் பொழுது இந்த உலகில் யார் யாருக்குப் பகைவன்? அல்லது நண்பன்? எல்லாவற்றிற்கும் இந்த்ரியங்களே விதை போன்றவை. பெண்களுக்குக் கணவன்தான் அதிக ப்ரியமானவன். அதே போல் பெண்ணும் கணவனுக்கு உயிரைவிட மேலானவள்.

(தொடரும்)

|| श्रीः ||

ஶ்ரீமதே ஶ்ரீரங்கராமாநுஜ மஹா தேசிகாய நம:

# "ருக்மிணி சரணாகதி"

*(ஶ்ரீK.பட்டாபிராமன் - க்ரோம்பேட்டை)*
*(ஶ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் உபந்யாஸத்தில் கேட்டவை)*

சுகப்ரம்ம ரிஷி பரீக்ஷித்து மஹாராஜாவுக்கு உபதேசிக்கிறதான பாகவதக் கதையில ருக்மணி கல்யாணம் உபதேசிக்கப் போகிறார். ஆச்சரியமான திவ்ய கதாசரித்திரம். ஆகந்துக தம்பதிகள்னு சிலபேர், நித்ய தம்பதிகள்னு சிலபேர். ஆகந்துக தம்பதிகள் நாமெல்லாம் - இதுக்கு முன்னாடி இந்த ஜீவன் அவருக்கு பார்யையா இருந்திருக்க முடியாது. அந்த ஜீவன் இவருக்கு பர்த்தாவாக இருந்திருக்க முடியாது. கர்மாவினாலே ஏற்படறது. நித்ய தம்பதிகள் யார்னா. சாக்ஷாத் நாராயணனும் லக்ஷ்மியும் தான். ஆனாலும் கூட அவதாரங்கள் செய்து லோக பாவனையிலே விவாஹம் செய்து கொள்கிறாள். அந்த பகவானுடைய விவாஹ கதையை கேட்டால் ஸகல விதமான ஸௌபாக்யங்களும், ஶ்ரேயஸ்களும், ஆயுள் ஆரோக்ய ஶ்ரேயஸ்களும் ஸகலமும் அவாளுக்கு பகவான் அளிக்கிறார் என்பதாக சாஸ்திரார்த்தம். உட்பொருளையும் தெரிஞ்சுக்கணும், இந்த கல்யாண கட்டத்திலே - இதை கடைசியிலே சொல்றேன். கண்ணன் விசித்திரமான லீலைகளைச் செய்து அசுராளுடைய அவதாரமாக இருக்கிற, ராஜாக்களையெல்லாம் நிக்ரஹம் செய்து ஸாது பரிபாலனம் பண்ணி, ஸமுத்திர மத்தியிலே நிர்மாணம் பண்ணதான த்வாரகையிலே ஆஸ்தானம் கண்டருளி வீற்றிருந்தான். அப்போது அவனுக்கு விவாஹ உசிதமானதான வயது பரமாத்வுக்கு வந்தது, அவதார க்ரமத்திலே அப்படி இருக்கும் பொழுது அவனுக்கு விவாஹம் பண்ணிக் கொள்ள வேண்டியதான ப்ராப்தமானதான தேவியானது ஸாக்ஷாத் லக்ஷ்மிதான்.

பகவான் அவதாரம் பண்ணச்சே அவளும் இந்த பூமியில் அவதாரம் பண்ணுவாள். அவர் ராமனா அவதரித்தால் சீதையா வருவாள், கிருஷ்ணனா வந்தால் ருக்மணி, வராஹ அவதாரம் பண்ணால் பூமி தேவியா இருப்பள், வாமனாவதாரம் பண்ணா, திருமார்பிலே இருப்பள், ஆக பர்த்தாவை விடறதில்லை. எந்த அவஸ்தையில் பகவான் இருந்தாலும் பிராட்டி பிரியமாட்டாள். அந்த ரீதியிலே, கிருஷ்ணாவதாரத்திலேயும் அவனை விவாஹம் பண்ணிக்கிறதற்காக விதர்ப தேசத்திலே அவதாரம் பண்ணினாள், ருக்மணி என்கிற திருநாமத்தோடே, பிராட்டி ஸர்வலோகேஸ்வரியானவள்.

பீஷ்மகன்னு பேரு - விதர்பதேசத்துக்கு அதிபதி. அவனுக்கு ஐந்து பிள்ளைகளும், ஒரு பெண்ணும் பிறந்ததாம். அந்த பெண்தான் ருக்மணி என்பதாகப் பெயர். அந்த 5 பிள்ளைகளுக்கும் ருக்மா என்கிற சப்தத்தை வைச்சு பேர் வைச்சிருக்கான். ஜ்யேஷ்டன் ருக்மின்னு பேரு. அடுத்தவன் ருக்மகேசன், ருக்மபாஹு, ருக்மரதன், ருக்மமாலின்னு பேருவைச்சா - எல்லாம் தங்கமா இருக்காம் அவனுக்கு - ஹிரண்ய வர்ணியாக இருக்கிறாள் பிராட்டி. சாக்ஷாத் உசந்ததான தங்க வர்ணம் - ராமாவதாரத்திலே ஒருகுறை உண்டாம் பெருமாளுக்கு - என்ன குறை- மச்சினன் இல்லை என்ற குறை உண்டாம் - இந்த அவதாரத்திலே அந்த குறையில்லையாம் குறை ஒன்றுமில்லாத கோவிந்தா - தர்ம சாஸ்திரங்களிலேயும் சகோதரன் இருக்கிற குழந்தையை கல்யாணம் பண்ணிக் கோங்கோன்னு சொல்றா - ஐந்து பேர் சகோதரன். அவாளுக்கு சகோதரி ருக்மணி- ஸ்வாபதேஶ அர்த்தம் சொல்றத்துக்காக சொல்றா ஏன்னு கேட்டா, இந்த ருக்மணியை பெருமாள் கிட்ட ஸமர்ப்பிகணும்ங்கறதுக்காக, விவாஹம் பண்ணி கொடுக்கறதுக்காக தாயார், தகப்பனார் அபிப்ராயப்படறா. அதே மாதிரி ருக்மணிக்கும் பகவான் கண்ணனை விவாஹம் பண்ணிக்கனும்னு ஆசை. சகோதராளுக்கு இஷ்டமில்லை.

ஜ்யேஷ்டனுக்கு இஷ்டமில்லை, மற்றவாளுக்கும் இஷ்டமில்லை சிசுபாலனுக்கு கொடுக்கணும்னு யத்னம் பண்றா. எதுக்காக ஐந்துபேர் சகோதராள் இருக்கான்னு கேட்டா - ருக்மிணி ஸ்தானத்திலே பரதந்த்ர ஸ்வரூபமான ஜீவாத்மாவையும், இந்த ஜீவாத்மாவை பெருமாளிடத்திலே சேர்க்கணும்னு இருக்கிறதே அதுதான் கல்யாணம் கல்யாணங்கறது - ஆத்ம விவாஹம் சரீரவிவாஹம் இந்த பூமியிலே பண்ணிக்கிறது - ஆத்ம விவாஹம் இந்த ஜீவனுக்கும், பரமாத்மாவுக்கும் உள்ளதான விவாஹம். இந்த ஜீவன்கள் எல்லாம் ஸ்த்ரீ ப்ராயம்னு சாஸ்திரங்களிலே சொல்லியிருக்கிறது. புருஷாளா இருந்தாலும் ஸ்த்ரீகள் தான். ஏன்னா இவாளுக்கு பாரதந்த்ரியம்ன்றது ஸ்வரூபமா இருக்கிறதனாலே, பகவானுக்கு அதீனமா இருக்கிற, ஜீவன் என்று சொன்ன படியாலே, ஸ்த்ரீகளுக்கு ஸ்வாதந்த்ரியம் இல்லைன்னு ப்ராசீன சாஸ்திரத்திலே சொல்லியிருப்பதனாலே, ஆகையினாலே அந்த ஸ்த்ரீகளைப் போலே ஜீவாத்மாக்கள் சொல்லப் பட்டிருப்பதனாலே, இந்த ஜீவனை பகவானுக்கு அர்ப்பணம் பண்ண, பிதா வந்து கன்னிகா தானம் பண்றாப்போல இது. தகப்பனார் வந்து பெண்ணை வந்து மாப்பிள்ளைக்கு வரனுக்கு கன்னிகா தானம் பண்ணுகிறாப் போல ஆசார்யனாகிற பிதா, ஜீவனுகிற பரதந்த்ர சேதனனை பெருமாளுக்கு ஸமர்ப்பணம் பண்றது. அதுதான் ஆத்ம விவாஹம்னு பேரு. அது ஏன் பெருமாள் ஜீவனை ஒப்புக்க மாட்டேங்கறார்னா. அஞ்சு சகோதராள் உதவாதுங்கறா. அதுயார் ஞானேந்த்ரியங்கள் ஐந்து- கண், காது, மூக்கு, நாக்கு, த்வக். ''திருவுக்கும் திருவாகிய செல்வா! தெய்வத்துக்கரசே! செய்யகண்ணா. உருவச்செஞ்சுடராழி வல்லானே! உலகுண்ட ஒருவா! திருமார்பா. ஒருவற்காற்றியுய்யும் வகையன்றால் உடன் நின்று ஐவர் என்னுள் புகுந்து ஒழியாது அருவித்தின்றிட அஞ்சி நின்னடைந்தேன் அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே! - திருமங்கையாழ்வார் - இந்த

*பஞ்சேந்த்ரியங்கள் பகவானிடத்திலே போக வொட்டாம தடுக்கிறதுங்கறதுக்காக பஞ்ச சகோதராள் சொன்னா. ஜீவன் சரீரத்துக்கு வரச்ச இந்த பஞ்சேந்த்ரியங்கள் கூட வந்த சகோதராள். ருக்மணிக்கு விவாஹ காலம் வந்தது - விவாஹம் பண்ணுனும்னு தாயார், தகப்பனார் யோசிச்சுண்டு இருந்தா. இந்த பெண்ணுக்கும் அபிலாஷை இருந்ததாம் - கண்ணனை கல்யாணம் பண்ணிக்கலாம்னு அவளுக்கும் சிந்தனையானது இருந்ததாம் - என்னத்தினாலே - அந்த அரண்மனைக்கு வரவாளெல்லாம் கிருஷ்ணனைப் பற்றியே சொல்லிண்டு இருந்தாளாம். கிருஷ்ணனுடைய லீலைகளையும், குணத்தையும், ரூபத்தையும், ஐஸ்வர்யம் பற்றியும் சொல்லிண்டு இருந்தாளாம் - பிக்ஷைக்கு வரவா கூட கிருஷ்ணாய நம:- ராமாய நம: சொல்றது அபூர்வமா இருக்கு - பதரிகாஸ்ரமம் வரை யாத்ரைக்கு போனேன்- 23 பேரோட ப்ராசீனத்திலே - ராமன் இருக்கிற இடங்களெல்லாம் போகச்ச பட்ணி - 4 மணிக்கு இவ்வளவு சாதம் அகப்படும் - கிருஷ்ணன் இருக்கிற இடமெல்லாம் போகச்ச தயிர்வடை, பாயசத்தோடே. ராமநவமியும் பாருங்கோ, கிருஷ்ண ஜயந்தியையும் பாருங்கோ. அவன் ரூபம், குணம், ஐஸ்வர்யம், அழகு எல்லாத்தையும் கேட்டு ஸ்ரீ கிருஷ்ணனைதான் கல்யாணம் பண்ணிப்பேன்னு அவ அபிப்ராயப்பட்டா. அப்படி இருக்கிற காலத்திலே, துவாரகா நகரத்திலே சிலபேர் சொல்லுவாளாம். ருக்மணி ரொம்ப அழகு அவளை கல்யாணம் பண்ணின்டா தாம்பத்யம் நன்னா இருக்கும்னு அவா அபிப்ராயப்பட்டாளாம். அது கண்ணனுடைய திருச்செவியிலே பட்டு, அதே மாதிரி கிருஷ்ணனும் ருக்மணியே நமக்கு கிடைச்சா தேவலைன்னு நினைச்சுண்டு இருந்தாராம் - ஸ்த்ரீகள் எப்படி அமையனும்னா -புத்தி இருக்கணும், லக்ஷணம் இருக்கணும், ஔதார்யம் இருக்கணும், ரூபம் இருக்கணும், சீலம் இருக்கனும், குணம் இருக்கணும் -*

இவ்வளவும் இருந்தாதான் பத்னிக்கு பெருமை. இவ்வளவும் ருக்மணி கிட்ட பொருந்தியிருக்கிறதுன்னு, அவளேயே கல்யாணம் பண்ணிக்கணும்னு நினைச்சுண்டு இருந்தாராம். பந்துக்கள் எல்லாம் கூட கிருஷ்ணனுக்கு கொடுக்கலாம்னு அபிப்ராயப்பட்டாளாம். ராஜாவினுடைய பந்துக்கள், அவனுடைய பார்யை சேர்ந்த பந்துக்கள் எல்லாம் கிருஷ்ணன் தான் சரியான பர்த்தான்னு அபிப்ராயப்பட்டுக் கூட அந்த ருக்மி அவனுடைய சகோதரர்களுக்கு இஷ்டமில்லையாம். ஏன்னா பட்டாபிஷேகம் இல்லாததான குலத்திலே பிறந்திருக்கிறான்- அது தவிர இடையர்களோடே எல்லாம் ஸஹவாஸம் பண்ணிண்டு இருக்கான். அது தவிர ஜராஸந்தனுக்கு பயந்துண்டு சமுத்திர மத்யத்திலே ஒளிஞ்சுண்டு வீடு கட்டிண்டு இருக்கான். அவனுக்கு பணக்காராளோடே ஸ்நேகம் இல்லை. தாடி ரிஷிகள்தான் ஸ்நேகம் அவனுக்கு. ஆகையினாலே நமக்கு தகுந்தாப் போல ராஜாதிராஜனாக இருக்கிற சிசுபாலனுக்கு கொடுத்தா நன்னா இருக்கும். அதனாலே சிசுபாலனுக்குத்தான் கொடுக்கனும்னு என்னுடைய அபிப்ராயம்னு சகோதரன் சொல்லிட்டா பிராதாக்களும் அங்கீகரிச்சுட்டா, தகப்பனாரும் அது பிரகாரம் நடக்கட்டும்னு பத்திரிகை போட்டும் அப்படி கிருஷ்ணன் வேண்டாம்னுட்டு சிசுபாலனுக்கே தீர்மானம் பண்ணிட்டாளாம். என்ன காரணம் கிருஷ்ணன் கிட்ட தோஷம் சொல்லுன்னா - கிருஷ்ணன் கிட்ட இருக்கற த்வேஷம் தான் காரணம் - வேற ஒண்ணுமில்லை.

நிர்ணயம் பண்ணிட்டா கல்யாணத்துக்கு தேதியும் வைச்சுட்டான்ன உடனே முழிச்சுண்டா ருக்மணி - இந்த ஸர்வேப்ஶ்வரனுக்காகவே இந்த திருமேனியானது வளர்ந்து, அவனுக்கு அர்ப்பணம் பண்றத்துக்கு வளர்ந்த திருமேனியான படியாலே பேசாம இருக்கப்படாது. புருஷார்த்தத்துக்கு நாம் பிரயத்னப்படாம இருக்கிறது சரியில்லை. நாமும் கொஞ்சம் பிரயத்னம் பண்ணி அந்த

பகவானை அடையனும்னு தீர்மானம் பண்ணினாள். மனசு ரொம்ப க்லேசப்பட்டு அந்த கண்ணனுக்கு ஒரு தூதனை அனுப்புகிறாள். ஒரு ப்ராம்மணனை தூதனா அனுப்பிச்சாள்னா. ஒரு ப்ராம்மணனை அனுப்பிச்சார்னு சொன்னா - ஏன்னா பேர் ஊர் அந்த ருக்மிக்கு தெரிஞ்சு நிறுத்திடப்போறாரென்னு பயமாம். ரகசியமா அனுபிச்சாளாம் - வ்யாக்யானங்களிலே பல தினுசா அபிப்ராயப்படறா. அவர்தான் இந்த பிராட்டியையும் பெருமாளையும் சேர்த்து வைக்கணும்ங்கறதான ஆசையிலே சுகப்பிரம்மமே தூது போனார்னு ஒருத்தர் அந்வயிக்கிறார் - இன்னொரு வ்யாக்யானக்காரா என்ன சொல்றாள்னா சாக்ஷாத் ஆஞ்சநேயர் ராமாவதாரத்திலே வந்த திருவடிதான் இங்கே ப்ராம்மண ரூபியா வந்து தூது போனார்ங்கறா எதுக்காகன்னு கேட்டாளாம் - பெருமாள் கிட்டேந்து தூதனா பிராட்டி கிட்டே போனாராம் - பார்யைகிட்டேந்து தூது போகணும்னு ஒரு ஆசையாம் அவருக்கு - சாக்ஷாத் ஆஞ்சநேயரே தூதரா போனார்னு - சிலபேர் அபிப்ராயப்படறா. சிலபேர் என்ன சொல்றான்னா சாக்ஷாத் பெரிய திருவடிங்கற கருடன் தூது போனார்னா - ராமாவதாரத்திலே ராமனுடைய பஹுமானத்தைப் பெற்றார் தூது போய் - ஆஞ்சநேயருடைய கௌரவம் ஏறிப்போச்சு நமக்கானது இல்லையேன்னு இந்த அவதாரத்திலே நாம் போய் பேர் வாங்கணும்ங்கறதுக்காக வைநதேயரே ப்ராம்மண ரூபியா வந்தார்னு அபிப்ராயப்படறா - ஆண்டாள் கல்யாணத்துக்கு கூட வைநதேயன் அழைச்சுண்டு வந்தாராம்-

ஏழு ஶ்லோகம் எழுதினாள் தானே எழுதினாள்னா. கவர்ல வைச்சு ஒட்டி இதை த்வாரகா நாதனான கண்ணனிடத்தில் கொண்டு ஸமர்ப்பிச்சுடுன்னா -

த்வாரகா நகரம் போனார் - வாசல்ல த்வார பாலகா. உள்ள வராத இருக்கிறதுக்காக. இது மாதிரி வந்திருக்கேன் பீஷ்மக ராஜாவின் குமாரி அனுப்பிச்சான்னா. அதை சொன்ன உடனே- சீக்கிரம் அனுப்புன்னா. உள்ளே

போனார் - சபா மண்டபத்திலே போனாராம் அந்த ப்ராம்மணர், இடுப்பிலே தபாலை வைச்சுண்டு. அவரை பார்த்த உடனே தங்க சிம்ஹாஸனத்திலே உட்காந்துண்டு இருக்காராம், அதிலேந்து கீழே இறங்கி வந்தாராம். அர்க்யம், பாத்யம் ஆசமனீயம் எல்லாம் கொடுத்து உபசாரம் பண்ணாராம் கொஞ்சம் ஶ்ரமபரிஹாரம் பண்ணிக்கோம்ன்னார். ஒரு கட்டிலிலே படுக்கவைச்சார். அந்த ப்ராம்மணோத்தமருடைய காலை பிடிக்கிறாராம். ரொம்ப தூரம் நடந்து வந்திருக்கிறீரே ஸ்வாமின்னு பிடிச்சாராம். அவரைப் பார்த்து கேட்கிறார். எல்லாருக்கும் எளியவனாக இருப்பது என்பது பகவானுடைய சுபாவம் - யானையானது எவ்வளவு பெரிய ஜந்துவாக இருந்தும் அதுல ஏறறதுக்கு பாகனுக்கு தானே குனிந்து கொடுத்து, படுத்துண்டு, காலையும் தூக்கி கொடுத்து அதிலே ஏறறதுக்கு வழி கொடுக்கறாப்போல, பரமாத்மா தன்னிடத்திலே வரதுக்கு எளியனாக செய்து கொடுக்கிறான், தன்னை கட்றதுக்கு சங்கலியை யானையே எடுத்து கொடுக்கும் அந்த பாகனுக்கு - அது எவ்வளவு பெரிசு - அது மாதிரி அந்த பரமாத்மா தன்னை கட்டுவதற்கு தானே கயிறு எடுத்துக் கொடுக்கிறான். ''எட்டினோடிரண்டெனும் கயிற்றினால் மனந்தனைக் கட்டி. வீடிலாது வைத்த காதலின்பமாகுமே.''

திருமழிசை ஆழ்வார் அஷ்டாக்ஷரம், த்வயம்ங்கற கயிற்றை அவரே நமக்கு யானை எடுத்துக் கொடுக்கறாப் போல நமக்கு கொடுத்து தன்னை கட்டச் செய்றார். பரம சுலபர் ஆனத்தாலே பரமாத்மா அப்படி காலைப் பிடிச்சுண்டு சொன்னாராம்.

சாப்பிட்ட பிறகு ஶ்ரமபரிஹாரம் பண்ணிவிட்டு கட்டில்ல படுக்கச் சொல்லிட்டு எங்கே வந்தீர் ஸ்வாமீன்னு அவரை கேட்கிறார்.

ப்ராம்மணோத்தமரே எப்படி இருக்கிறீர் சௌக்யமா இருக்கிறீரா - உம்முடைய தர்மானுஷ்டானமெல்லாம்

சரியா நடக்கிறதா- சந்தோஷத்தோட கூட இருக்கிறீரா. க்லேசம் இல்லாம, நிர்வேதபடாம இருக்கிறீரா. அப்படியெல்லாம் கேட்டுட்டு என்ன காரியத்துக்காக வந்தீரோ சொன்னா தேவலை. ரஹஸ்யம் இல்லாததா இருந்தா சொல்லுங்கோ. சொல்லக் கூடியதா இருந்தா சொல்லுங்கோ, இல்லேன்னா வேண்டாம். நான் எதுவானாலும் செய்யறதுக்கு சித்தமா இருக்கேன்.

ஏ! புருஷோத்தமா லக்ஷ்மீ தேவியினுடைய தான தன்னுடைய சமீபத்துக்கு போக நான் ஆசைப்பட்டு இருந்தேன் - அவளுடைய தூது வார்த்தையை கேட்டு மேலே என்ன நியமிக்கறதோ அந்த பிரகாரமானது நான் செய்கிறேன். ருக்மணி கையால எழுதி கொடுத்தாள் ஏழு ஶ்லோகம். இந்த கவர்ல வைச்சிருக்கேன் உம்முடைய திருவடியிலே ஸமர்ப்பிக்கிறேன்- ஸர்வேஶ்ரனுக்கு விண்ணப்பம் ஸமர்ப்பிச்சா எங்கே கொண்டு வைக்கணும்னா திருவடியில் கொண்டு வைக்கணுமாம். திருவடியின் கீழ் ஸமர்ப்பிக்கச் சொல்லி கொடுத்தாள் அப்பா - அப்படியே அந்த பத்திரிகையை எடுத்தாராம் அந்த புன்சிரிப்பும் அந்த கண் அழகும் ஆச்சரியமா இருந்தது.

சிரிப்பு வந்ததாம் அவருக்கு. தேவிகள் அனுப்பிச்சிருக்கான்னு கேட்டா அதனால் சிரிப்பு வரதுன்னாராம். அந்த புன்சிரிப்பாலே அழகான கண்களோட பார்த்தாராம். அவரையே வாசிக்கச் சொன்னாராம். ஆச்சரியமா ஒரு ராகத்திலே இந்த ஶ்லோகம் சொல்லுவா. எனக்கு ராகம் தெரியாது. ஏழு ஶ்லோகமும் ஆச்சரியமான ஸ்லோகங்கள் - பண்டிதாளும், வித்வான்களும், உபன்யாஸகாளும் 5000 வருஷமா அர்த்தம் சொல்றா - இன்னும் முடியலை - த்வாபரயுகத்தின் endல் நடந்தது. **ஶ்ருத்வா குணான் புவன சுந்தர** - என்ன ஆச்சரியமான அர்த்தம் இருக்கு பார்க்கா- பெருமாளை பார்த்து அட்ரஸ் பண்ணியிருக்கா - **கன்யா வரயதே ரூபம்** - கிருஷ்ணா உன்னை ஆசைப்படறேன்னா பர்த்தாவாக - **புவன சுந்தர** - அந்த பதம் ஒண்ணே போதும். அது

தேவிகளினுடைய வாக்காலே வந்த படியினாலே, தேவிமுகத்தாலே ஶ்லோகம் கேட்கறதுக்கும், தமிழ் பாசுரம் கேட்கறதுக்கும் ஆசைப்படற பெருமாள் அவர் - குரங்கை கெஞ்சினார். அப்பா நீ சொல்லுடா நீ சொன்னா தான்டா மூச்சு இருக்கும்னார் - தேவிகள் வார்த்தை அவ்வளவு உசந்ததாச்சு. கருணையாலே நிறைந்த வார்த்தை - அழகான வார்த்தை - புவன சுந்தர - லோகத்துக்கே அழகுன்னாளாம் - 14 லோகத்திலேயும் யார் ரொம்ப அழகுன்னு போட்டி வைச்சாக்க கண்ணனுக்குத் தான் முதல் Price. பாக்கி பேருக்கு வராது - புவன சுந்தர - கிரஹ சுந்தர, கிராம சுந்தர, நகர சுந்தர, தேசசுந்தர, லோகசுந்தர, அகில லோகசுந்தர, புவன சுந்தர - ஆத்துக்குள்ள அழகா இருப்பன் ஒருத்தன், கிராமத்துக்குள்ள ஒருத்தனை தேடி எடுக்கலாம், அது மாதிரி ஒரு தேசம், தமிழ்நாடு, கர்நாடகம்ன்னு ஒருத்தனை அழகு பார்த்து பிரிக்கலாம், இந்தியா, அமெரிக்கா எல்லாம் அழகு போட்டி வைச்சு ஒருத்தனை எடுக்கலாம். 14 லோகத்துக்கும் வைச்சா கண்ணன் ஒருத்தன் தான் அவனுடைய ஸௌந்தர்யத்தையானது எடுத்து பேசறா அந்த அழகை சொல்ல முடியலை. உன்னிடத்திலே என் மனசானது ஆசைப்படறது. என்னுடைய மனசு உன்னிடத்திலே நுழைஞ்சடுத்து. இப்படி வெட்கமில்லாம சொல்லலாமா - வெட்கம்மானம் போகக் கூடிய தான நிலையானது வந்துவிட்டது. ஆகையினாலே வெட்கத்தை விட்டுத்தான் சொல்றேன். ஶ்ருத்வா குணான் அந்த குணங்களை கேட்டேன். அதை கேட்டதனாலே உன் கிட்ட ஆசை வந்தது. எப்படி கேட்டேன். அந்த பகவானுடைய குணங்களை யார், யார் காதாலே கேட்கிறாளோ, அந்த கேட்கிறவாளுடைய காது வழியா உள்ள போய் ஸகல பாபத்தையும் போக்கடிக்கிறதாம் அந்த குணங்கள் தாபத்ரயம் போயிடுமாம் - எந்த வித துக்கம் இருந்தாலும் போயிடுமாம். அப்படிப்பட்டதான குணங்களாம் பகவத் குணங்களை கேட்டா ஆனந்தமா இருக்கு இன்னொருத்தர்

*குணத்தை சொன்னு அசூயை அடிக்கும் - குணங்களை மட்டும் இல்லை - அத்தோடு கூட உனக்கு இருக்கிற அழகும் அவ்வளவு அழகுன்னு கேட்டேன் - அந்த அழகு இருந்து குணமும் இருந்தா எப்படின்னு தங்கத் தாமரை புஷ்பத்துக்கு பரிமளம் வாசனை இருக்காப் போலயாம் - கண் படைத்ததுக்கு பிரயோஜனம் என்னன்னு கேட்டா பகவானுடைய ரூபத்தை பார்க்கிறது தான் பிரயோஜனம் - பஞ்சேந்த்ரியங்களுக்கு என்ன என்ன லாபம் லோகத்திலே உண்டோ, எல்லாம் பெருமானிடத்தில் இருக்கிறதாம் - யார் பார்த்தாலும் சைவாளோ, (அத்வைதிகளோ) விசிஷ்டாத்வைதிகளோ, மாத்வாளோ, ஜைனாளோ, கிருஷ்ணன் ரூபம்னா கொஞ்சம் மயங்கறா ஸ்வாமி - ராமாநுஜர், தேஶிகன் ஆசார்யாள் எல்லாம் கிருஷ்ண ரூபத்திலே ஈடுபடறா - இந்த ஶ்லோகத்தாலே ஸ்த்ரீகளுக்கு* Education *எப்படி இருந்தது அந்த நாள்லேன்னு நாம்ப யூகிக்கலாம் - பகவானுடைய ஸ்வரூபம் ஒசத்தி, ரூபமும் உயர்ந்தது. அதைத்தான் பாஷ்யகாரர் அநுபவிக்கிறார்* गुणनिधि दिव्यरूप! *அதோட வாசனையென்ன வாசனையானதுக்கு குறைச்சல் இல்லை, லாவண்யத்துக்கு குறைச்சல் இல்லை - கழுத்திலே, பால் சாப்பிட்டா பால் போறது தெரியணும், அப்பேர்பட்டதான ஆச்சரியமான ஸௌந்தர்யம் அதையும் கேட்டேன். ஏ! பகவானே உன்னிடத்திலே என்னுடையதான மனசு பிரவேசிச்சு - ஆனா நீ மனசு வைச்சா நான் கல்யாணம் பண்ணின்டாதானே - அச்சுதா -*

*புவநஸுந்தரான்னு முதல்ல அட்ரஸ் பண்ணு அப்புறம் அச்யுதான்னு. உனக்கு அச்சுதான்னு ஒரு பேர் இருக்கேன்னு நினைச்சுண்டு இருந்தேன். தன்னை ஆஸ்ரயித்தவாளை, அண்டியவர்களை விடாதவன்னு பேரு ஆச்சே உனக்கு. அதனாலே உன்கிட்டே வந்தேன். இந்த அச்சுதனுக்காக 100 ஶ்லோகம் பண்ணியிருக்கார் தேஶிகன் அச்சுத சதகம்னு பேரு. கிருஷ்ணன் கேட்டார் நீர் ஶ்லோகம் வாசிச்சேரே. அர்த்தம் கேட்டீரா அவகிட்ட அப்படின்னார். ஏன்னா எல்லோரும் என்னை துஷ்டன்னு*

சொல்றா. குணமில்லைங்கறா - குணம்னு ஶ்லோகம் எழுதியிருக்காளே, தப்பா - Mistake ஆ - ஆழ்வார் கூட சொல்லியிருக்கார் - கடியன், கொடியன் - ரொம்ப கொடூரன், துஷ்டத்தனமுள்ளவன்னு. ஆண்டாள் கூட என்னை சொல்றா. இந்த கிருஷ்ணாவதாரம் உதவாது - வேம்பேயாக வளர்த்தாளே - யசோதை பால் கொடுத்து வேப்பமரத்தை வளர்கிறாப் போல வளர்த்திருக்கான்னா. பெண்ணின் வருத்தமறியாத பெருமான், கண்ணனென்னும் கருந்தெய்வம், மாலாய் பிறந்த நம்பி, மாலே செய்யும் மணாளன் ஏலாப்பொய்களுரைப்பான் - ஆண்டாள் சொல்லச்ச பரம துஷ்டன்னு சொல்றாய்யா. இந்த கோபிகள் எல்லாம் என்னை ஒத்துக்கவே மாட்டேங்கறா. என்ன சொல்றா தெறியுமா ஏ கிருஷ்ணாவதாரப் பெருமானே பொய் தான்டா உடம்பா இருக்குன்னா. உடம்பிலே இருக்கிற நரம்பு, ரத்தம், தோல், கண், காது எல்லாம் பொய்னா. ஒரு நாளாவது நிஜம் சொல்லியிருக்கயா. பிறக்கச் சேந்து உடம்பு வளரறுப்போல பொய்யும் வளர்றதுடா உனக்கு -

ஒரு கோபிகை சொல்றா - ராத்திரி வந்தாராம் கிருஷ்ணன் திவ்யமான சயனம் போட்டா கோபஸ்த்ரீ - அதிலே ஸயனிச்சுண்டார் இவளும் படுத்துண்டா - தூக்கம் வந்துடுத்து - **''வல்வினையேன் துயில் கொண்டவாறே''** குலசேகர ஆழ்வார் பாட்டு- தூங்கிபோயிட்டாளாம் இவதான் தூங்கிட்டாளேன்னு தலைகாணியைக் கொண்டு வைச்சுட்டு காலையிலே பால் சாப்பிடறதுக்கு வந்தாராம் - எங்காத்துக்கு எதுக்காக வரே புறப்பட்டு போன்னாளாம் -

எல்லாரும் துஷ்டன்னு சொல்றா கிருஷ்ணாவதாரம் குணம்னு ஶ்லோகம் எழுதறாளே - என்னங்கணும் ப்ராம்மணரே, சரியா இல்லையே - அப்புறம் என் துஷ்டத்தனத்தை கேட்டு வேணாங்கப் போறா - புதுசா சட்டங்கள் எல்லாம் வந்திருக்கேன்னா-

ருக்மணியை கேட்டேன். கிருஷ்ணனை ஒரு மாதிரியா சொல்றாளேன்னு நான் சரியாத்தான் எழுதியிருக்கேன்னாளாம். அவன் துஷ்டத்தனம் தெரிஞ்சுத்தான் அவன்தான் வேணும்ங்கறேன். அப்படியா சொன்னா? அப்படித்தான் சொன்னா - எப்படி சொன்னா - **ஶ்ருத்வா அகுணான் புவன சுந்தர - ஶ்ருத்வா அகுணான்,** இரண்டாவது தடவை சொல்லி காண்பிச்சா ஸ்வாமி ருக்மணி - அந்த அகுணங்கள் வேறொருத்தர் கிட்டேயும் கிடையாதாம். அவன் கிட்டதான் குணமா இருக்குது - வேற ஒருத்தன் மாடு மேய்ச்சா வெய்யறான்- படிப்பு வரலேன்னா நாலு மாடு வாங்கி தரேன்றா - கிருஷ்ணன் மாடு மேய்ச்சா புராணம் உட்கார்ந்து கேட்கிறான். அவனுடைய ஈஶ்வர லீலைகளை ஆனத்தாலே, அந்த கண்ணனுக்கு உள்ள துஷ்டத் தனத்தை ஆசைப்பட்டுத்தான் அவனை நான் ஆசைப்படறேன். இந்த அழகுள்ளவன் துஷ்டனா இருந்தா பாதகமில்லைன்னா ஏன்னா - எவ்வளவு திருடறான்? கிருஷ்ணன் நவநீதம் திருடறான். எத்தனை வஸ்திரங்களானது திருடறான், யசோதை கிட்ட வந்து எல்லாரும் புகார் பண்றா, யசோதை அடிக்கறா - நாலு நாள் கழிச்சு கோபஸ்த்ரீகள் வரா -

ஏன் வந்தே -

கண்ணன் வரவேயில்லேயே ஏன் வரலைன்னு பார்கணும்னு வந்தோம்.

திருடனே பார்க்கணும்னு ஆசை உள்ளவா யாராவது இந்த லோகத்தில் உண்டா - இந்த சோரனை பார்க்கணும்னு ஆசைப்படறா எல்லாரும் - அப்பேர்பட்ட ரூபமாம் - **ஶ்ருத்வா அகுணான் ரூபம் ச ஶ்ருத்வா** - அந்த பரமாத்மாவினுடைய ரூபத்தை எதிர்க்க பார்த்தா என்ன வரும்னா எத்தனை புருஷார்த்தங்கள் தர்மமோ, அர்த்தமோ, காமமோ, மோக்ஷமோ எல்லாம் அவன் கிட்ட கிடைக்குமாம். அவன் மட்டுமே அகப்பட்டுட்டான்னா ஸகலமும் கிடைக்குமாம். கிடைக்கக் கூடாதது கிடைக்குமாம்.

ஸன்யாஸி வேஷம் போட்டுண்டா கூட பெண் கிடைக்குமாம். அது யாருக்கு கிடைச்சுது. அர்ஜுநனுக்கு கிடைச்சுது. சுபத்ரை. ஸந்யாஸி வேஷத்தோடே கல்யாணம் பண்ணிப்பேன் உன் தங்கையைன்னா- கல்யாணம் பண்ணிக் கொடுத்துட்டார். அவனுக்கு அந்த மஹா விச்வாஸம். கண்ணன் சொன்னா செய்து கொடுப்பார்னு -

நீ ஆஶ்ரிதாளை விடாதவன்னு பேர் வைச்சுண்டு இருக்கறதனாலே உன்னை வந்து ஆஶ்ரயிக்கிறேன் உன்னுடைய அவதார ரஹஸ்யம் தெரிஞ்சு உண்மை தெரிஞ்சவாளா இருந்தா, குணத்தினாலேயும், ரூபத்தினாலேயும், சீலத்தினாலேயும், புத்தியினாலேயும், பலத்தினாலேயும், ஐஸ்வர்யத்தினாலேயும் சிறந்த உன்னை நல்ல குலத்திலே பிறந்த எந்த பெண்தான் உன்னை வரிக்கமாட்டா ஸ்வாமி. பிராட்டியினுடைய குணத்துக்குச் சரியான குணமாம் ரூபம். பெருமாளுக்கு தகுந்ததான அழகான ரூபமாம் பிராட்டியினுடைய ரூபம். புத்தியும் அநுகூலமாயிருக்கணும், சுபாவமும் அநுகூலமா இருக்கணும். எல்லாம் பொருந்தி இருக்குன்னா.

ந்ருஸிம்ஹன் ஆச்சே நீ? உன்னை யார்தான் விரும்பமாட்டா. தாமரைக் கண்ணான்னா. நான் உன்னை பர்த்தாவா வரிச்சுட்டேன்னா. என்னை பார்யையாவைச்சுக்கணும் உனக்கு -

நீ சொன்னதாலே வைச்சுண்டட்டுமான்னாராம்.

உன்னை வைச்சுக்கும் படியா பண்ணிப்புடுவேன்.

ஒரு உபாயம் வைச்சுண்டு இருக்கேன்னா -

என்ன உபாயம்? இந்த ஆத்மாவை அர்ப்பணம் பண்ணிட்டேன்.

சரணாகதி பண்ணிட்டேன் ஸ்வாமி. சரணாகதி பண்ணிட்டா கொடுத்தாகணும் பெருமாள். அது எல்லாத்துக்கும் மேலான சாஸ்திரம், சரணாகதி பண்ணா

இல்லேன்னு சொல்ல முடியாது. இல்லேன்னு சொன்னா அவனுக்கு தோஷம் - நமக்கு ஒண்ணும் கிடையாது. என் ஆத்மாவானது கொடுத்தாயிடுத்து.

அதுக்காக என்னன்னு கேட்டான் -

என்னுடைய உடம்பை வேறு ஒருத்தர் தொடாத தேவரீர் அங்கீகரிக்கணும். சிசுபாலன் முதலானவா என்னை தொடக்கூடாது. ஏன் தொடக் கூடாதுன்னா - ஸிம்ஹத்துக்காக வைச்சிருக்கிற பலியை எங்கேயாவது நரி தீண்டலாமா? சிசுபாலன் என்னை தொடக் கூடாதுன்னா. தேவரீர் அங்கீகரிக்கணும்.

அந்த கிருஷ்ணன் சாதாரணமா கிடைச்சுடும்னு நினைச்சுண்டுவான். இருக்கயான்னா -

நான் அநேக ஜன்மாக்களிலே யாகங்கள் பண்ணி குளம் வெட்டி, அநேக விரதங்கள் இருந்து நியமங்கள் இருந்து, தேவதா பூஜை பண்ணி, ஆசார்யாள் வந்து அநேக ஆராதனம் பண்ணியிருந்தேனேயானால் அந்த கடாக்ஷகனான பெருமாள் வந்து கல்யாணம் பண்ணிக் கொள்ளணும்.

இவ்வளவு பண்ணியிருந்தால் தான் பகவான் அகப்படுவானாம். அதுக்காக சொல்றா, பகவான் நாராயணன் கிடைக்கனும்னா எல்லாருக்கும் கிடைச்சுடுவாரா? எவ்வளவு புண்ணியம் பண்ணியிருக்கணும் தெரியுமா. அநேக புண்யமானது பண்ணி அதனுடைய பலனாக ஸர்வேஶ்வரன் கிடைக்கணும்.

ஆசார்யாள் திருவடிகளே சரணம்.

|| श्रीः ||

# HISTORY REPEATS ITSELF

புராணம் என்பது வேதத்துக்கு பூதக் கண்ணாடி. வேதத்தில் சுருக்கமாகச் சொல்லியிருக்கிற தர்ம விதிகளை கதைகள் மூலம் பெரிசு பண்ணிக்காட்டுவதுதான் புராணம். ஒன்றைச் சுருக்கமாகச் சொன்னால், அது மனதில் ஆழமாகப் பதியாமல் போய்விடலாம். அதையே ஸ்வாரஸ்யமான கதையாகச் சொன்னால் நன்றாக மனதில் பதியும்.

'உண்மையே பேசு' என்று வேதம் சொல்கிறது. அப்படிப் பேசுவதால் எத்தனை பெருமை ஏற்படுகிறது என்பது வேதத்தில் இல்லை. **ஸத்யம் வத** என்பதாக மட்டும் உள்ளது. அப்படிப் பேசினால் எவ்வளவு பெருமை ஏற்படுகிறது என்பதை ஹரிச்சந்திர புராணம் விஸ்தாரமாகச் சொல்கிறது. **அறத்தைப் பின்பற்று** என்று இரு வார்த்தைகளில் மட்டுமே வேதம் சொல்கிறது. **தர்மம் சர** என்று. ஆனால் அதையே மஹாபாரதத்தில் தர்ம புத்திரரின் கதையாகச் சொல்லியிருக்கிறது. 'அம்மாவை தெய்வமாக நினை', 'அப்பாவை தெய்வமாக நினை' (மாத்ரு தேவோ பவ; பித்ரு தேவோ பவ) என்பதாக மட்டும்தான் வேதத்திலுள்ளது. அதற்கான விளக்கம் இல்லை. ஆனால் அந்த வேதவாக்குக்கு ராமாயணத்தில், ராமருடைய வாழ்க்கை முறை பூதக்கண்ணாடியாயிருந்தது. அடக்கம், பொறுமை, தயை, கற்பு முதலான அநேக தர்மங்களை வேதத்தில் சொல்லியிருப்பதை புராண புருஷர்களும், புண்ய ஸ்திரீகளும் தங்களுடைய சரித்திரத்தின் மூலம் நன்றாகப் பிராகாசிக்கும் படிச் செய்திருக்கிறார்கள். அவற்றைப் படிப்பதாலும் கேட்பதாலும் இந்த தர்மங்களில் நமக்கு ஆழ்ந்த ஈடுபாடு உண்டாகிறது.

இவர்கள் எல்லோருக்கும் சோதனைகளும் கஷ்டங்களும் நிறைய வந்திருக்கின்றன. நிறைய தப்பு செய்கிற நம்மை விட இந்த உத்தமமான புராண

பாத்திரங்கள்தான் அதிகம் கஷ்டப்பட்டிருக்கிறார்கள். ஆனாலும் இவர்களுடைய சரித்திரத்தைப் படிக்கும் போது, 'தர்மங்கள் அனுஸரிப்பதனால் தானே கஷ்டம் ஏற்படுகிறது? அதனால் அனுஸரிக்க வேண்டாம்' என்று நமக்குத் தோன்றுவதில்லை. அத்தனை கஷ்டத்திலும், சோதனையிலும் விட்டுக் கொடுக்காமல் அவர்கள் பாறாங்கல் மாதிரி தர்மத்திலேயே நிற்பதால் பெற்றிருந்த மனத்தெளிவுதான் நம் மனதில் பதிகிறது. அதோடு கூட அந்த உத்தமர்கள் பட்டகஷ்டங்களைக் கேட்கும் போது நம் உள்ளம் உருகுவதாலேயே நம்முடைய அழுக்குகளையும் அலம்பி விட்டாற்போல் ஆகிறது. அவர்களுக்கு ஏற்படுகிற பெரிய வெற்றியும், கீர்த்தியும் நமக்கு அந்த தர்மங்களில் கெட்டியான பிடிமானத்தை உண்டாக்கித் தருகின்றன.

நம் தேசத்தில் சரித்திரம் (History) இல்லை என்று ஒரு குறை சொல்லப்படுகிறது. இக்காலப் படிப்பாளிகள் கிறிஸ்துவுக்குப் பிற்பாடு நடந்தது தவிர வேறு எதையும் ஹிஸ்டரியாக மதிப்பதில்லை. புராணங்களில் சொல்லியிருப்பதை History ஆக மதிப்பதில்லை. புராணங்களில் சொல்லியிருப்பதில் தங்களுக்குப் பிடித்த ஆரிய, திராவிட பிரிவினைக் கொள்கை மாதிரியான பொய் விஷயங்களுக்கு மட்டும் புராணங்களில் ஆதாரம் இருப்பதாகக் காட்டிவிட்டு, பாக்கி அதில் வருகிற அற்புதமான விஷயங்கள் (miracles) அதீந்திரியமான விஷயங்கள் (Super natural) எல்லாம் கட்டுக்கதை, புளுகுமூட்டை என்று தள்ளி விடுகிறார்கள். புலன்களுக்கு அகப்படுகிற விஷயங்களுக்கு அப்பாற்பட்டதாக எதுவும் நடந்திருக்க முடியாது என்கிற தீர்மானத்தில் இவர்கள் இருப்பதால், 'மிஸ்டரி' (மர்மமான அதிசயங்கள்) நிறைய வருகிற புராணங்களை ஹிஸ்டரி இல்லை' என்று ஒதுக்கி வருகிறார்கள்.

இப்போது தாங்கள் எழுதி வைத்திருக்கிற சரித்திரத்தை எல்லோரும் படிக்க வேண்டும் என்று ஸ்கூலிலேயே பாடமாக வைத்து விட்டு, புராணத்தை

கழித்துக் கட்டுவது குழந்தைகளுக்கு நல்லது செய்வதாகாது. குழந்தைகளுடைய உள்ளத்தை நல்ல நெறியில் சேர்ப்பதற்கு புராணங்களில் சொல்லியிருப்பதைப் போல, சரித்திரத்தில் எதுவும் இல்லை. புராணங்களும் சரித்திரம் தான். அவற்றையும் படிக்க வேண்டும்.

சரித்திரம் திரும்பத் திரும்ப ஒரே மாதிரி நடக்கிறது என்கிறார்கள். "Hisotry repeats itself" என்பது போல பூர்வத்தில் எப்படி நடந்தது என்று தெரிந்து கொண்டால், அதிலிருந்து இனி எப்படி நடக்கும் என்று தெரிந்து கொள்ளலாம். எதிர்காலத்துக்குப் படிப்பினையைப் பெறலாம். இந்தச் சூழ்நிலை உருவானால் யுத்தம் ஏற்படும்; வாழ்வு கெட்டுப் போகும்; ஒரு பெரிய நாகரிகம் விழுந்து விடும் என்பது சரித்திரத்தைப் பார்க்கும் பொழுது தெரிகிறது. அதனால் உஷாராக இருந்து தடுத்து விட வசதியாக இருக்கும் என்பதால் சரித்திரம் பிரயோஜனம் என்கிறார்கள்.

ஒரே மாதிரியான சம்பவங்கள் ராமாயண காலத்திலும், பாகவத காலத்திலும், தசாவதார காலத்திலும் நடக்கின்றன என்று நம் சாஸ்திரங்களில் சொல்லியிருப்பதைத்தான் History repeats itself என்று கொஞ்சம் மாறுதலான அபிப்ராயத்தோடு சொல்லுகிறார்கள். இருப்பினும் நடைமுறையில் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிற ஹிஸ்டரியைப் பார்த்து யாராவது, எந்தப் படிப்பினையாவது பெறுகிறார்களா என்று பார்த்தால் அதுதான் இல்லை. தைமூர், கஜினி, மாலிக்காஃபூர் போல பலர் அவ்வப்போது தோன்றி தேசங்களைச் சூறையாடச் செய்திருக்கிறார்கள் என்று சரித்திரம் மூலம் தெரிகிறது. தெரிந்து கொண்டால் மட்டும் இப்படிப்பட்ட வெறிப்போக்குகளை நிறுத்த முடிந்திருக்கிறதா என்ன? மறுபடியும் இவர்கள் மாதிரியே ஒரு ஹிட்லரும், முஸோலினியும் வந்து ஹதாஹதம் செய்தார்கள். இன்னும் இன்றும் கண் கூடாகவே

பார்க்கிறோம். ஒரு லஞ்சம், கரப்ஷன் வேண்டியவர்களுக்குச் சலுகை காட்டுவது, வேலை கொடுப்பது என்றெல்லாம் ஒரு அரசாங்கம் பண்ணினால் அதற்கு ஜனங்களின் ஆதரவு போய் விடுகிறது என்று எலெக்ஷனில் தெரிகிறது. அப்புறம் வேறுசிலர் அரசாங்கம் அமைக்கிறார்கள். ஆனால் அதே தோஷங்களை இவர்களும் செய்து, அதே கதி இவர்களுக்கும் உண்டாகிறது. படிப்பினை ஒன்றும் பெற்றதாகத் தெரியக் காணோம். ஆகையால் History repeats itself என்று தெரிந்து கொண்டு விடுவதால் மட்டும் அதிலிருந்து நல்ல பாடம் எதையும் படித்து விட முடியவில்லை என்று தெரிகிறது. Repeat ஆகாமல் History -யை நிறுத்தும் படி செய்வதற்கு அதில் எதுவும் இல்லை. தர்மத்தை நாம் ஏற்கும்படியாகச் சரித்திரத்தோடு குழைத்துக் கொடுத்தால் தான் அது நம்மை நல்வழிப் படுத்த உபயோகமாகும். புராணம் இதைத்தான் செய்கிறது.

சரித்திரத்தில் வெறுமே ராஜாக்களின் வரலாற்றைத் தான் தந்திருக்கிறது. இதிலே கொடுங்கோலர்கள் கெடுதல் அடைந்தார்களா, உத்தமமான ராஜாக்கள் நற்கதி பெற்றார்களா என்பதற்கு ஹிஸ்டரியில் விசாரித்து அறிகிற சக்தி சரித்திரக்காரர்களுக்கு கிடையாது. கர்ம நியதிப்படி பகவான் இவர்களுக்கு பாப புண்ய பலன்களைக் அந்த ஜன்மாவிலோ, அல்லது பின் ஜன்மாக்களிலோ கொடுத்திருப்பான். ஒரு கஜினி, ஹிட்லர் போன்றவர்கள் இந்த பூமியில் வாழ்ந்தவரை கொடிகட்டிப் பறந்தார்கள் என்றாலும் உயிர் போனபின் அவர்களுக்கு கிடைத்தது நீசமான மறு ஜன்மமா என்பதைப் பற்றியும் புராணம் விசாரித்துச் சொல்லும். புராணகர்த்தாக்களுக்கு அந்த சக்தி உண்டு. அதைச் சொல்கிற லட்சியமும் உண்டு. ஹிஸ்டரி நிபுணர்களுக்கு இந்த இரண்டும் இல்லை. அதனால் தான் ஹிஸ்டரியில் பார்க்கிறவர்களின் ஜீவிதத்திலிருந்து பாபபுண்யங்களைப் பற்றி நாம் படிப்பினை பெற முடிவதில்லை.

புராணமும் சரித்திரமே. அது பாப - புண்யங்களில் ஜனங்களுக்குப் பாடம் கற்பித்து அவர்களை தர்மத்தில் செலுத்தும் படியான வரலாறுகளை மட்டும் Select பண்ணிக் கொடுக்கிறது. நல்லது கெட்டதுகளைப் பற்றி நமக்கு ஒரு விதமான பாடமும் கற்பிக்காமல் வெறுமே காலவாரியாகப் பல ராஜாக்கள் ஆண்டதையும், சண்டை போட்டதையும் வளர்த்திச் சொல்ல வேண்டியதில்லை. நம் வாழ்க்கைக்கு எடுத்துக் கொள்ளும் படியான உபதேசம் இல்லாத சரித்திரம் நமக்கு வேண்டாம். ஆத்ம பலமான சரித்திரங்களையே சொல்வோம் என்ற அபிப்ராயத்தோடு நம் புராணங்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

புராணம் பொய்யென்று ஆங்கிலேயர்கள் சொல்லி நம்முடைய ஹிஸ்டரியை எழுதினார்கள். அதிலே தங்களுக்குப் பிடித்த 'பிரித்து ஆளும்' (divide and rule) கொள்கைக்கு சாதகமான race theory முதலான அநேக விஷயங்களை ரொம்பவும் நடுநிலையிருந்து ஆராய்ச்சி பண்ணினது போலவே காட்டிச் சேர்த்து விட்டார்கள். புராணம் பொய்யென்று இவர்கள் சொன்னார்கள் என்றால், இப்போது இவர்கள் எழுதிய சரித்திரத்திலும் பொய் இருக்கிறது என்று சொல்லி, உள்ளது உள்ளபடி இந்திய சரித்திரத்தை எழுதுவதற்கு முயற்சிகள் நடக்கின்றன. இப்படிச் செய்கிறவர்களுக்கும் அநேக கொள்கைகளில் Prejudice இருக்கலாம். எவ்வளவு தூரத்துக்கு முழுவதும் நிஜமான சரித்திரம் உருவாகும் என்று சொல்வதற்கில்லை.

18 புராணங்களை எழுதிய வியாஸர், அநேக ஸ்தல புராணங்கள் எழுதிய பெரியவர்கள், சேக்கிழார், ராமானுஜர் போன்றவர்கள் வாஸ்தவத்தில் விருப்பு, வெறுப்பில்லாமல் எழுதியவர்கள்.

ஸாம்ராஜ்யங்கள், சண்டை, படையெடுப்புகள், ராஜவம்சங்கள் இவைதான் சரித்திரம் என்று நினைப்பது சரியில்லை. எல்லா விஷயங்களுக்கும் சரித்திரம் உண்டு. அரசியல் சரித்திரத்தை மட்டும் ஹிஸ்டரியில் பிரதானமாக

வைத்து விட்டார்கள். ஆனால் புராணங்களிலோ தர்ம விஷயங்களை பிரதானமாக வைத்து அதற்கு ராஜ வம்சத்தை மட்டுமின்றி, மற்ற புண்ய புருஷர்கள், ரிஷிகள், ஸாமாந்ய மக்கள் முதலியோரின் கதைகளையும், மற்ற எல்லா விஷயங்களின் சரித்திரத்தையும் துணையாகச் சேர்த்துத் தரப்பட்டியிருக்கிறது. புராணங்களைப் பார்த்தால் அந்தக்கால அரசியல் மட்டுமின்றி, கலாசார வாழ்வு (Cultural life) அக்கால வித்தைகள், ஸயன்ஸ் எல்லாவற்றையும் பற்றித் தெரிந்து கொள்ள முடிகிறது. அதில் முக்யமாகச் சொல்லப்படுவது தர்மங்களும், ஆத்ம க்ஷேமமுமாகும்.

Miracle வந்தால் history இல்லை என்று ஒதுக்கி விடுகிறார்கள். மதுரையில் பாண்டிய மன்னன் ஒருவனுக்கு நோய் வந்து முதுகு கூன் போட்டது. அவனுக்கு 'கூன் பாண்டியன்' என்று பெயர். திருஞானஸம்பந்தர் பஞ்சாக்ஷரம் பாடி பாண்டியனின் கூனை நீக்கினார். ''நின்ற சீர்நெடுமாறன்'' என்று பெயர் பெற்றான். மஹேந்திர பல்லவன் அப்பர் சுவாமிகளை கல்லிலே கட்டி நதியிலே போட்டான். அது மிதந்ததைப் பார்த்து, ஜைன மதத்தை விட்டு, வைதிகத்துக்கு மாறினான். ராமாநுஜா சாரியார் ஹொய்ஸல தேசத்து ஜைன மன்னன் பிட்டி தேவனுடைய பெண்ணுக்கு பிடித்திருந்த பேயை ஓட்டியதால் அவன் ஜைன மதத்திலிருந்து வைஷ்ணவன் ஆனான். அவனே விஷ்ணுவர்த்தன தேவன் என்று பெயர் பெற்று வைஷ்ணவ வழிபாடு கோயில் முதலியவற்றை ஏற்படுத்தினான். இங்கிலீஷ் படிப்பு படித்து விட்டால் ஸயன்ஸில் நிரூபிக்க முடியாததெல்லாம் புரளியென்று சொல்லி புராணங்களைத் தள்ளுவது சரியான மனப்பான்மையாகாது. இந்த விஷயங்களை இந்த ராஜாக்கள் கல்வெட்டிலோ, செப்பு ஏட்டிலோ எழுதி வைக்கவில்லை என்பதால் இவை நடக்கவில்லை என்று சொல்லிவிடலாமா?

பூகோள, வானியல் வர்ணனைகள், மன்வந்தரம் முதலான காலவர்ணனைகள் எங்கேயாவது தப்பிப் போனால்தான் போகட்டுமே. அதைத் தெரிந்து கொள்ள

geography -ம், astronomy -யும், history -ம் இருக்கிறதே. ஜாக்ரஃபியிலும், ஹிஸ்டரியிலும், அஸ்ட்ரானமியிலும் கொடுக்க முடியாத பரமாத்மதத்துவத்தை, பக்தியை, தர்மத்தை சொல்கிறது புராணம்.

-K.R. ஸம்பத்

கவுண்டம்பாளையம், கோவை.

Ph.2454554



## ஜெயஸ்ரீ யாத்ரா ஸ்பெஷல்

**ஆர்கனைசர்:** M.K.ராகவன் ஐயங்கார்

*(தொலைபேசி:42021109)*

*புதிய எண் 8, பழைய எண் 13, ராஜாம்பாள் தெரு, டாக்டர் சீதாபதி நகர்,*

**வேளச்சேரி, சென்னை - 600042. செல்: 9445356650**

தொடர்புகொள்ளும் நேரம் : காலை 7 முதல் 9 மணிவரை, மாலை 5 to 10

**திருநாங்கூர் திருமஞ்ஜனம் மற்றும் 11 கருடஸேவை ஸேவித்தல்**

**30–1–2010 முதல் 31–1–2010**

2X2 சீட் சூப்பர் டீலக்ஸ் - ஹைடெக் ஏர் பஸ் - புஷ்பேக் சீட் - 35 நபர் இருக்கை கொண்ட பஸ் கட்டணம், இரண்டு வேளை காபி, இரண்டு வேளை ஆகாரம் தங்கும் வசதி உட்பட நபர் ஒன்றுக்கு ரூபாய் 1,575/-

**சென்னை, திருச்சித்ரகூடம் (சிதம்பரம்), திருக்காழிச்சீராம விண்ணகரம், திருவெள்ளக்குளம் (அண்ணன் கோவில்) மற்றும்சில ஸந்நிதிகள் மட்டும் ஸேவித்து சென்னை திரும்புதல் 31.1.2010 அன்று இரவு 11 மணிக்கு 11 கருடஸேவை ஸேவித்து சென்னை திரும்புதல்.**

**30.1.2010 அன்று காலை 6.00 மணிக்கு பஸ் புறப்படும்.**

மேற்படி மூன்று யாத்ரையிலும் கலந்து கொள்ள ஆர்வம் உள்ளவர்கள் முன்பணம் ரூ. 1000/- செலுத்துபவர்களுக்கு மட்டும் பஸ்ஸின் முன்பக்கத்திலிருந்து இருக்கை எண்கள் தரப்படும்.

॥ श्रीः ॥

# மாத ராசிபலன்

சாக்கை வேலாமூர் ஸ்ரீ. S. Seshadri Iyengar,
Plot No.4, Sarasvathy Garden, 3rd Phase, Srirangam-620 006.
Phone :0431–2430740, 94866-25040

**ஸ்ரீ விரோதி வருஷம் தை மாதம்**
**14.1.2010** to ***12.2.2010***

**1. மேஷம் :- அஸ்வினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம் வரை**

பொருளாதார நிலையில் சிறப்பான முன்னேற்றம் காணப்படும். எல்லா செயல்களிலும் வெற்றியும் புகழும் உண்டாகும். செல்வாக்கும், சொல் வாக்கும் மேன்மையாக இருக்கும். வண்டி, வாஹனம், வீடு, நிலம் வாங்கும் யோகம் உண்டாகும். தடைப்பட்டிருந்த பண வரவுகள் வந்து சேரும். பெண்களுக்கு விவாஹ ப்ராப்தி ஏற்படும். புத்ரபாக்யமும் ஏற்படும். உத்யோகம் தொழிலில் முன்னேற்றம் உண்டு. பதவி உயர்வு, விரும்பிய இடமாற்றம், அதிக வருமானம் உண்டு. தாயாருக்கு காயம் அல்லசத சிறு அறுவை சிகிச்சை நேரலாம். ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ ஸ்தோத்ரம் பாராயணமும் ஸ்ரீ கருடன் ஸ்தோத்ரங்களும் பாராயணம் செய்ய நன்மை பெருகும்.

**2. ரிஷபம் (கார்த்திகை 2.3,4, ரோஹிணி, ம்ருக ஶீர்ஷம் 1,2 பாதங்கள்)**

அன்பாக அனைவரிடமும் பழகாவிட்டால் வீண் வம்புகள் வந்து சேரும். எல்லோரிடமும் ஸுமுகமாக நடந்து கொள்ளவும். சுபகார்யங்கள் தாமதமாகும். கடன் வாங்கும் நிலை ஏற்படலாம். குடும்பத்தில் மனஸ்தாபங்களும் தொழிலில் ச்ரமமும் நேரலாம். உத்யோக வாய்ப்புகள் கைநழுவிப் போகும். ப்ரயாணத்தில் கவனம் அவசியம். ஸஹோதரரால் சில ப்ரமங்கள் நேரலாம். ஸ்ரீ மஹாலக்ஷ்மீ ஸ்தோத்ரங்கள் பாராயணம் செய்வது நலம் தரும்.

**3. மிதுனம் :- ம்ருகசீர்ஷம் 3,4 திருவாதிரை, புனர்வஸு 1,2,3)-**

லக்ஷ்மீ கடாக்ஷம் ஏற்படும். தன வரவு அதிகமாகும். விவாஹம் முதலான சுப கார்யங்கள் நடக்கும். புதிய வேலை கிடைக்கும். பதவி உயர்வு கிட்டும். கலைஞர்கள், ஸ்த்ரீகளுக்கும் முன்னேற்றம் ஏற்படும். புதிய தொழில் தொடங்கலாம். வியாபாரம் லாபம் தரும். வழக்குகள் தீரும். பிரிந்தவர்கள் மீண்டும் கூடுவர். ஆசார்ய, தெய்வ அனுக்ரஹம் கிடைக்கும். எதிர்பாராத நல்ல செய்திகள் வரும். ராஹு, செவ்வாய், ஸூர்யன் நிலை சரியில்லாததால் சில ப்ரமங்களும் உணடு. **ஸ்ரீ ஸுதர்ஶன ஸ்தோத்ர** பாராயணம் நன்மை தரும்.

**4. கடகம் :- (புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம்)**

தன வரவும் உண்டு. அதற்கேற்ற செலவும் அதிகம். பித்தம் வாய்வு நோய்கள் ஏற்பட்டு அகலும். தொழில்கள், வ்யாபாரத்தில் படிப்படியாக லாபம் ஏற்படும். பணியாளர் ஒத்துழைப்பு உண்டு. மனைவி/கணவன் - குழந்தை ஆரோக்யக் குறை ஏற்பட்டு சரியாகும். பெண்களுக்கு தாய் வழி சொத்து வரலாம். மாணவர்கள் கல்வியில் ஈடுபாடு தேவை. சிலருக்கு நீரில் கண்டம் ஏற்பட்டு சரியாகும். கவனமுடன் இருந்தால் சேமிப்பு அதிகரிக்கும். **ஸ்ரீமத் பெரியாண்டவன் அஷ்டோத்தர ஶத நாமாவளியை** பாராயணம் செய்யக் குறைகள் அகலும்.

**5. ஸிம்ஹம் :- (மகம், பூரம், உத்திரம் 1)**

உடல் நலம் நன்றாக இருக்கும். வழக்குகள் ஸாதகமாகம். சந்தான பாக்யம் ஏற்படும். குழந்தைகளுக்கு நல்ல வேலை கிடைக்கும். பதவி உயர்வு, சொந்த ஊரை அடைதல், வியாபாரத்தில் லாபம், தொழிலில் அபிவிருத்தி உண்டு. நல்ல செல்வாக்கு ஏற்படும். மாணவர் கல்வி சிறப்பாக இருக்கும். சில ஸமயம் வீண் பழி ஏற்படலாம். ஸூர்யன் மறைந்து ராசிக்கு பாவ கர்த்தரியோகம் நேருவதால் உடல் நிலை குறிப்பாக ரத்த அழுத்தம் பாதிக்க கூடும். உறவினர் ஒருவர் பிரிவும் நேரலாம். **ஸ்ரீ மாங்கல்ய ஸ்தவம்** பாராயணம் நன்மை தரும்.

**6. கன்னி :- உத்திரம் 2,3,4, ஹஸ்தம், சித்திரை 1,2 பாதங்கள்**

*உடல் நலம் சீராக இருக்கும். மருத்துவ செலவு குறையும். புதிய முயற்சிகள் தாமதமாகப் பலன் தரும். தன வரவும் தாமதமாகும். செலவுகள் அவசரமாக வரும். கடன் உண்டு, ஆயினும் தொல்லை இல்லை. தொழில், வ்யாபாரம், விவசாயம் இவற்றில் லாபம் உண்டு. அதிகாரிகளிடம் எதிர்த்துப் பேசாமல் நடந்து கொள்ளவும். எந்த க்ரஹமும் பலமாக இல்லை. எனவே* **ஸ்ரீ தஶாவதார ஸ்தோத்ரம் பாராயணம்** *நன்மைகளை அதிகரிக்கும்.*

**7. துலாம் :- சித்திரை 3,4 ஸ்வாதி, விஶாகம் 1,2,3 பாதங்கள்**

*உடல் நிலை சிறப்பாக இருக்கும். நீண்ட காலமாகத் தொல்லை கொடுத்து வந்த உடற்பிணிகள் நிவர்த்தியாகி அமைதியும், மகிழ்ச்சியுமான மன நிலை தோன்றும். சொந்த ஊருக்கு மாற்றல் கிடைக்கும். பல வகை வருமானம் வரும். சுப கார்யங்கள் நடக்கும். வண்டி, வாஹனம் பூமி சேர்க்கை உண்டாகும். தொழில், வ்யாபாரம் நல்ல லாபம் தரும். புதிய நண்பர்களும், உறவினர் சேர்க்கையும் ஏற்படும். கேது; செவ்வாய், சனியின் நிலை சற்று ப்ரமங்களையும் தாமதத்தையும் கொடுக்கும்.* **ஸ்ரீ கருடன் ஸ்தோத்ரங்கள்** *பாராயணம் நன்மை தரும்.*

**8. வ்ருஶ்சிகம் :-விஶாகம் 4, அநுஷம், கேட்டை**

*எடுத்த கார்யங்கள் தடையின்றி நடக்கும். பண வரவு எதிர் பார்த்தபடி இருக்கும். கடன்கள் அடைபடும். நிம்மதி பிறக்கும். விவாஹம் முதலான சுப கார்யங்கள் நடக்கும். மாணவர்க்கு சிறப்பான காலம். ஒரு துக்கமான செய்தி வரலாம். உடல் நிலை சிறப்பாக இருக்கும். குழந்தைகள் வகையில் சற்று கவனம் தேவை. ஸஹோதரரால் சில செலவுகள் தோன்றும். எதிர் பாராத ஒரு லாபமும் உண்டு. செவ்வாய் நீசமாக இருப்பதால்* **ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ ஸ்தோத்ர்கள்** *பாராயணம் செய்ய நன்மை ஏற்படும்.*

**9. தனுஸ் :- மூலம், பூராடம், உத்திராடம்-1**

*தன நிலை சிறப்பாக இல்லாவிட்டாலும் தேவைகளைப்*

பூர்த்தி செய்யும் அளவுக்கு இருக்கும். கடன் தொல்லே இருக்காது. சிலருக்கு இடமாற்றம் நேரும். எதிலும் அதிக முயற்சி தேவை. ஒருவகை பயம் மனதில் இருக்கும். சுப நிகழ்ச்சிகள் சற்று தாமதமாகும். வயிற்று பகுதியில் சில வ்யாதிகள் வரலாம். ஸ்ரீ தன்வந்தரி ச்லோகங்கள் பாராயணம் செய்யவும்.

**10. மகரம் : உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2**

தன நிலே, லாபம் சிறப்பாக இருக்கும். சேமிப்பு பெருகும். சொத்துச் சேர்க்கை உண்டு. விவாஹம் முதலான சுபங்கள் சிறப்பாக நடக்கும். தொழில், வ்யாபாரத்தில் நல்ல முன்னேற்ற முண்டு. கூட்டுத் தொழிலும் நன்மை தரும். உத்யோகத்தில் உயர்வு, அதிகாரிகள் ஆதரவு உண்டு. ஆடம்பரப் பொருள் சேரும். வெளிநாட்டு ப்ரயாணம் நேரலாம். மனேவி or கணவர் வழியில் எதிர் பாராத லாபம் வரக் கூடும். கால் பகுதியில் தொல்லே ஏற்படலாம். **மாங்கல்ய ஸ்தவம்** பாராயணம் நன்மை தரும்.

**கும்பம் :- அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3வரை**

ஆரோக்யம் படிப்படியாக முன்னேறும். தன வரவு சீராகும். குடும்ப ஒற்றுமை அதிகமாகும். குழந்தைகளுக்கு வேலே கிடைக்கும். தெய்வ வழிபாடு அதிகமாகும். புதிய மந்த்ர உபதேசங்களேப் பெறுவீர்கள். அலேச்சல் அதிகமிருப்பினும் நல்ல பயனும் இருக்கும். அரசாங்க லாபம் உண்டு. சனி மட்டுமே சற்று குறைவான பலன் தரும். **ஸ்ரீ ஸுந்தர காண்ட** பாராயணம் நன்மை தரும்.

**12. மீனம் :- பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி)**

உடல் நலம் கவலே தரும். மருத்துவச் செலவு அதிகம். தன வரவு தாமதமாகும். ஸஹோதர வழியில் ச்ரமங்கள் நேரலாம். குடும்பத்தில் சிறு சச்சரவுகள் ஏற்படலாம். சுப கார்யங்கள் தாமதமாகலாம். ஸூர்யன் 10ல் இருப்பதால் எதையும் சமாளிக்க இயலும். **ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம** பாராயணம் நன்மை தரும்.

SRIRAMAJAYAM ESTD-1982 JAI BADRI VISHAL

# BADRI TOURIST

Estd.1982

Smt. Kalarajan

34.B, Pocket - D, S.F.S Flats,

Mayur Vihar Phase - III, New Delhi-110 096.

Phone; 22628234, 9910272843 Mobile; 98113-87791

EMail:badritourist@hotmail.com

**SALIGRAMAM, MUKTHINATH, DAMODAR KUND, BADRINATH, KEDARNATH**

1. **சாளக்ராமம் - முக்திநாத்** - 16 days (68 **வது தடவை)** **ந்யூடெல்லி - நைமிசாரண்யம் - அயோத்யா - போக்ரா - கண்டகி நதி - முக்திநாத் - காட்மாண்டு - பசுபதிநாத் - காசி - அலஹாபாத்-சித்ரகூட்-ந்யூடெல்லி Starting Date : 11–04–2010, Fare : Rs. 11,000/-**(Helicopter Charges extra)
2. **சாளக்ராமம் - முக்திநாத் - 10 days : கோரக்பூர்,** (Droping) Starting Date : **11–03–2010 Fare Rs. 9,500/-** (Helicopter Charges extra).
3. **பஞ்ச த்வாரகா - 13 days :** Starting Date : **15–02–2010 Fare Rs. 10,500/-**
4. **பத்ரீநாத்** 7 **days - Starting Date : (1) 01.05.2010 (2) 11.05.2010 (3) 21.05.2010 (4) 01.06.2010 (5) 11.06.2010 Fare Rs. 6,000/-.**
5. **பத்ரீநாத் கேதார்நாத் 9 days - Starting Date : (1) 01.05.2010 (2) 11.05.2010 (3) 21.05.2010 (4) 01.06.2010 Fare Rs. 7,500/-**
6. **நவசக்தி பீடம் 9 days - Starting Date : (1) 01.04.2010 Fare Rs. 9,700/-**
7. **கைலாஷ் மானஸரோவர் யாத்திரை July 2010**

மேற்படி யாத்திரைகள் டில்லியிலிருந்து வசதியான பஸ், தென்னிந்திய ப்ராஹ்மணர்களால் தயாரிக்கப்படும் உணவு, தங்கும் வசதி **(Dormitory)** உட்பட, யாத்திரைகள் டெல்லியிலிருந்து கலாராஜன் நடத்துகிருர்கள்.

**யாத்திரை பற்றிக் கீழ்கண்ட முகவரியிலும் தொடர்பு கொள்ளலாம்.**

1. **Sri T.S.Rangamani,** Old No.27 / 7, "Srinidhi Flats' 'Veerasamy Street, West Mambalam, Chennai-33, Phone;**24745797, Cell : 94444-64368.**
2. **Smt. Srinivasan,** 22/3, South Mada St., Triplicane, Chennai-5, **Phone : 94446 39904**
3. **Sri Kannan,** 4016/28, 1st Main Road, B-Block, 2nd Stage, Rajaji Nagar, Bangalore-10, Cell : **98867 40254**

# அதிகரணஸாராவளி:

नोपादानं निमित्तं किमपि तदितरत् कारणं तद्धि विद्मः
यद्वा सिद्धं निमित्तं न भजति तदुपादानतामित्ययुक्तम् ।
इष्टादाकारभेदादुभयघटनतो लोकवेदानुरोधे
सिद्धे स्वच्छन्दलक्ष्मप्रणमनकुसृतिः पाकचिन्ताविपाकः ॥ १४७

**நோபாதாநம் நிமித்தம் கிமபி ததிதரத் காரணம் தத்தி வித்ம:**
**யத்வா ஸித்தம் நிமித்தம் ந பஜதி ததுபாதாநதாமித்யயுக்தம் ।**
**இஷ்டாதாகாரபேதாதுபயகடநதோ லோகவேதாநுரோதே**
**ஸித்தே ஸ்வச்சந்தலக்ஷ்மப்ரணமநகுஸ்ருதி: பாகசிந்தாவிபாக: ॥ 147**

*பதவுரை :-* **உபாதானம்** = *உபாதான காரணமாயிருக்கும்;* **கிமபி** = *ஏதாவது ஒன்று;* **ந நிமித்தம்** = *நிமித்த காரணமாகமாட்டாது;* **ஹி** = *எதனாலென்றால்;* **ததிதரத்** = *உபாதாநகாரத்தைக் காட்டிலும் வேறாக உள்ளதே* **தத்காரணம்** = *நிமித்த காரணம் என்று;* **வித்ம:** = *அறிகிறோம்;* **வா** = *அல்லது;* **யத் நிமித்தம் ஸித்தம்** = *எது நிமித்தம் என்று ஸித்தித்ததோ (நிமித்த காரணமாக ஸ்தாபிதமாயிற்றோ);* **தத்** = *அது;* **உபாதானதாம்** = *உபாதான காரணத்வத்தை;* **ந பஜதி** = *அடையாது;* **இதி** = *என்ற பக்ஷம்;* **அயுக்தம்** = *சரியன்று;* **இஷ்டாத்** = *அந்தந்த ஸந்தர்ப்பத்துக்கேற்ப;* **ஆகாரபேதாத்** = *வடிவங்களுடைய பேதத்தால் (ஆகார பேதத்தால்);* **உபய கடநத:** = *உபாதான நிமித்தமிரண்டும்;* **லோகவேதானுரோதே** = *லோக ந்யாயத்தின்படியும் வேத ந்யாயத்தின்படியும்;* **ஸித்தே** = *ஸித்திக்கும் போது;* **ஸ்வச்சந்த** = *தம் தம் இஷ்டத்திற்கு;* **லக்ஷ்ம** = *லக்ஷணத்தை;* **ப்ரணயன** = *செய்தல் (சொல்லுதல்) என்னும்;* **குஸ்ருதி:** = *குயுக்தியானது;* **பாகசிந்தாவிபாக:** = *குழந்தைத்தனமானதாகும்.*

**விளக்கவுரை** *:-இவ்வதிகரணத்தின் இரண்டாவது ப்லோகத்தில் (ஸ்வஜ்ஞானாத்யம்...) லோகத்தில் ஒரே*

வஸ்துவிற்கு நிமித்தகாரணத்வம் உபாதான காரணத்வம் இரண்டும் வரும் என்பது நிரூபிக்கப்பட்டது. அடுத்ததான மூன்றுவதான (கார்யைக்யே) என்னும் ஶ்லோகத்தில் வேதத்திலும் ஒரே வஸ்துவிற்கு நிமித்த காரணத்வம் உபாதான காரணத்வம் இரண்டும் வரும் என்பது காட்டப்பட்டது. இவ்வாறு லோகவேதானுகுணமாக ஒரே வஸ்து நிமித்தகாரணம், உபாதானகாரணம் என இருவகைக் காரணங்களாக முடியும் என்று நிரூபிக்கப்பட்ட நிலையில் இதற்கு விரோதமாகத் தங்கள் புத்தியைக் கொண்டு தம் இஷ்டப்படி ஒரு லக்ஷணத்தைக் கூறி இதுதான் சரி என்று ஸாதிக்கப் பார்ப்பது சிறு பிள்ளைத்தனமானது என்று இந்த ஶ்லோகத்தில் ஸாதித்தருள்கிறார் ஸ்ரீ ஸ்வாமி தேஶிகன்.

தார்க்கிகர்கள் ஸமவாயிகாரணம், அஸமவாயிகரணம், நிமித்த காரணம் என மூன்று வகைக் காரணங்களை ஒப்புக் கொண்டுள்ளனர் என்பதை இரண்டாவது ஶ்லோகத்திலேயே பார்த்தோம். இங்கு நிமித்தகாரணம் என்பதற்கு அவர்கள் கூறும் லக்ஷணம், ஸமவாயிகாரணத்திற்கும், அஸமவாயிகாரணத்திற்கும் வேறாக உள்ள காரணம் எதுவோ அது நிமித்தகாரணம் என்பதாகும்.

அதாவது வேதாந்தரீத்யா அவர்கள் கூறுவது, எது உபாதான காரணமோ அது நிமித்தமாக முடியாது. உபாதான காரணத்திற்கு பின்னமாக உள்ளது எதுவோ அது நிமித்தகாரணம் என்று தார்க்கிகர்கள் கூறுவர்.

அல்லது எது நிமித்தகாரணம் என்று ஸித்தித்ததோ அது உபாதானகாரணத்வத்தை அடையாது என்றும் கூறலாம்.

1. மண் நிமித்த காரணம் அன்று- உபாதானமாயிருப்பதால்.

2. குயவன் உபாதான காரணம் ஆகமாட்டான், நிமித்த காரணமாயிருப்பதால் என்று இருவகையிலும், ஒரே வஸ்துவில் இருவகைக் காரணங்களைக் கூறமுடியாது என்று தார்க்கிகர்கள் கூறுகின்றனர்.

இன்னும் விளக்கமாகக் கூறுவதென்றால் - உபாதீயதே - 'ஸ்வநிஷ்டதயா ஸ்வீக்ரியதே கார்யம் யேந த்ரவ்யேந தத் உபாதாநம் என்கின்றனர் தார்க்கிகர்கள். அதாவது எந்த த்ரவ்யத்தினால் கார்யமானது தன்னிடத்தில் இருப்பதாக ஸ்வீகரிக்கப்பட்டதோ அது உபாதானம் என்று பொருள், அவயவத்ரவ்யங்களில் அவயவித்ரவ்யம் உண்டாகிறது. த்ரவ்யங்களில் குணம் க்ரியைகள் உண்டாகின்றன. ம்ருத் (மண்) அவயவத்ரவ்யம். இவ்வயவத்ரவ்யத்தில் அவயவியான குடம் உண்டாகின்றது. அந்த கடத்தில் குணம் க்ரியைகள் உண்டாகின்றன. ஆக அத்த்ரவ்யமே தன்னிடத்தில் உண்டாகும் குடம், குணம் க்ரியைகள் முதலியவற்றுக்கு உபாதான காரணமாகின்றன. இதுவே ஸமவாய ஸம்பந்தத்தால் ஸித்திப்பதால் உபாதானம் ஸமவாயிகாரணம் என்று கூறுகின்றனர். மேலும் இரு அவயவங்கள் சேர்ந்தால்தான் அவயவித்ரவ்யம் உண்டாகும். இவ்வாறு இரு அவயவங்களின் சேர்க்கை (ஸம்யோகம்) அஸமவாயிகாரணம் எனப்படுகிறது.

இவை இரண்டுக்கும் பின்னமாக (வேறாக) உள்ளது எதுவோ அது நிமித்தகாரணம் என்று கூறலாம். இவைகள்தான், குடத்திற்கு கொம்பு, சக்கரம், காலம், அத்ருஷ்டம், என்பவை நிமித்த காரணம் என்று கூறப்படுகிறது.

நம் ஸித்தாந்தத்தில் நிமித்த காரணம் என்ற சொல்லால் கர்த்தா கூறப்படுகிறான். மீதியுள்ளவைகள் காலாதிகள் நிமித்த காரணம் அல்ல என்று பொருளல்ல. அவையும் நிமித்தகாரணம்தான்.

இங்குதான் தார்க்கிக பக்ஷத்தின்மேல் ஸ்வாமி கேள்வி எழுப்புகிறார், தார்க்கிகர்கள் கூறியபடி, ஒவ்வொரு த்ரவ்யமும் தன்னிடமுள்ள குணம் க்ரியைகளைக் குறித்து ஸமவாயிகாரணமாயுள்ளது என்று ஸித்திக்கிறபடியால், அவர்கள் கூறும் நிமித்த காரணங்களான தண்ட சக்ராதிகளில் கூட முதலில் ஸமவாயி காரணத்வம் ஸித்திக்கும். அதன் பிறகே நிமித்த காரணத்வமும் ஸித்திக்கும். ஆக தானே தன்னிடமுள்ள குணக்ரியைகளைக் குறித்து ஸமவாயிகாரணமாயிருந்து கொண்டு, நிமித்த காரணமாக மற்றொரு கார்யத்திற்கு ஆகிறபடியால், ஸமவாயி அஸமவாயிகாரணங்களுக்கு பின்னமாயிருப்பது நிமித்தம் என்பது எப்படி ஸித்திக்கும்? என்று பதில் கூற முடியாத ஆக்ஷேபம்.

ஆனால் தார்க்கிகர்கள் இவ்வாறு கேள்வியெழுப்புகின்றனர். எந்த வஸ்துவைக் குறித்து எது ஸமவாயிகாரணமோ, எது அஸமவாயி காரணமோ, அதற்கு பின்னமாயிருப்பதைத்தானே நிமித்தம் என்கிறோம். தண்டசக்ராதிகள் தன்னிடமுள்ள குணக்ரியைகளுக்கே ஸமவாயி காரணம். குடத்திற்கு அல்லவே ! ஆதலால் அது நிமித்தம் என்பதில் என்ன ஸந்தேஹம் இருக்கமுடியும் என்று ஆக்ஷேபிக்கின்றனர்.

இந்தக் கேள்வி கூட அவர்களுக்கு அநிஷ்டத்தையே உண்டாக்கும். அதாவது இவர்களே ஒரு விஷயத்தை ஒப்புக்கொண்டுள்ளனர். துணியைக் குறித்து நூல் காரணம் என்கின்றனர். இது ஸமவாயிகாரணம் என்பர். அதே நூல் தறியுடன் உள்ளபோது துணியைக் குறித்து நிமித்த காரணம் என்கின்றனர். ஆக ஒரே வஸ்துவைக் குறித்து ஒரே வஸ்து ஒரு ஸமயத்தில் உபாதான காரணமாகவும் மற்றொரு ஸமயத்தில் நிமித்த காரணமாக இருப்பதை இவர்களே ஒப்புக் கொண்டுள்ளனர்.

அதனால் ஒரே வஸ்துவில் இருவித காரணங்களும் இருக்கை என்பது லோகத்தில் காண்கின்றோம். அவர்கள் அபிப்ராயப்படியே, வேதத்திலும் இவ்வாறே இருப்பதை முன் ஶ்லோகத்திலும் பல இடங்களிலும் பரக்கப் பேசியருளினார் ஸ்வாமி.

ஆக மொத்தத்தில் கார்யகாரணபாவம் என்பது தம் தம் இஷ்டப்படி லக்ஷணம் கூறி ஸாதிப்பது அன்று. லோகத்தில் காண்கின்றபடியே பலவற்றை ஸஹிப்போம். ஆனால் வேதத்தைக் கொண்டே அறிய வேண்டிய விஷயங்களில் இவ்வநுமானங்கள், தர்க்கங்கள், லக்ஷணங்கள் உதவாது.

வேதத்தில் காணும் விஷயங்களில் இவ்வாறு லக்ஷணம் சொல்லப்புகில் அது திரும்ப நம்மையே தாக்கும். அலௌகிகமான விஷயங்களில் வேதம் என்ன கூறுகின்றதோ அதுவே நமக்கு உபாதேயம். அதைக் காட்டிலும் வேறு ப்ரமாணம் தேவையில்லை. வேதத்தை அனுஸரித்துப் போகும் ப்ரமாணங்களே நமக்கு தேவை. இவ்வாறு ஒப்புக் கொண்டு போனால் அனைத்தும் நமக்கு ஸித்திக்கும்.

வேதத்தை விடுத்து தம் தம் புத்தி போனபடியே விசாரித்துக் கொண்டு போனால் எதுவும் நிற்காது. ஸூத்ரகாரரான பகவான் பாதராயண வ்யாஸரே இரண்டாவது அத்தியாயத்தில் அழகாக ‘तर्काप्रतिष्ठानादपि’ (தர்க்காப்ரதிஷ்டாநாதபி) என்று அருளப் போகிறார். அதை அங்கு பார்க்கலாம்.

ஸ்ரீ ஸ்வாமி தேஶிகனும் ஸாராவளியிலே நான்காவது அத்யாயத்தில் ‘सर्वं स्थाने स्थितं स्यात् प्रमितिपरवतां नेतरेषां तु किञ्चित्’ (ஸர்வம் ஸ்தாநே ஸ்திதம் ஸ்யாத் ப்ரமிதி பரவதாம் நேதரேஷாம் து கிஞ்சித்) என்றருளப் போகிறார்.

அதாவது ப்ரமாண பரவஶராய் போகிறவர்களுக்கு அனைத்தும் ஸித்திக்கும். அதது அததன் ஸ்தானத்திலே இருக்கும். அவ்வாறு இல்லாதவர்களுக்கு எதுவும் ஸித்திக்காது என்று பொருளாகும்.

சிந்தாமணியில் ஸ்ரீ குமாரதேஶிகன் ஒரே வஸ்துவிற்குப் பலவிதமான அவஸ்தைகள் உண்டு. அதாவது ஆகார பேதத்தால் பலவாறு மாறலாம். தானே ப்ரமேயமாயிருக்கும் நிலையிலிருந்து ப்ரமாணமாயிருக்கும் நிலையையும் லோகத்தில் காண்கின்றோம். அதற்கு அழகான உதாஹரணத்தைக் காட்டியருள்கிறார்.

ஒரு தராசு உள்ளது. அதில் இரு பக்கங்களிலும் எடைக் கல்லையும் வஸ்துவையும் வைக்கின்றோம். எடைக் கல்லால் வஸ்துவின் அளவைக் காண்கிறோம். அதன்பிறகு வேறு ஒன்றை அளக்கும்போது எடைக்கல்லிருந்தால் எடைக் கல்லைக் கொண்டே வேறொரு வஸ்துவின் அளவை காண்கிறோம். இல்லையேல் முன்பு அளக்கப்பட்ட வஸ்துவை எடைக்கல்லின் ஸ்தானத்தில் வைத்து இப்போது அளக்கப்பட வேண்டிய வஸ்துவின் அளவைக் கண்டு கொள்கின்றோம்.

இது லோகத்தில் நாம் காணக் கூடியதே. இதனால் முதலில் ப்ரமேயமாக அளவு தெரிய வேண்டிய இடத்தில் இருந்த வஸ்து வேறொரு ஸமயத்தில் அளவு தெரிந்து கொள்வதற்கு ஸாதனமாக, ப்ரமாணமாக, எடைக் கல்லாக மாறுகிறது.

ஆதலால் ப்ரமாணமாயிருப்பதே ப்ரமேயமாய் மாறுகிறது. ப்ரமேயம் ப்ரமாணமாக ஆகிறது. இது அந்தந்த ஸந்தர்ப்பத்திற்கு ஏற்ப, ஆகாரத்திற்கு ஏற்ப கால விஶேஷங்களில் மாறுதலை அடைகிறது. இது லோக ஸித்தம். வேதத்திலும் இவ்வாறே.

ஆதலால் பரமாத்மா தாம் ஸங்கல்பிக்கும் போது

நிமித்த காரணமாகின்றான். ப்ரபஞ்சம் உண்டாகும் போது உபாதான காரணமாகின்றான். இது ஸங்கல்பாஶ்ரயத்வமாகிற தசையிலும் பரிணாமாஶ்ரயத் தசையிலும் வெவ்வேறாக இருப்பதை அறிய வேண்டும்.

ஒரே ஒரு விசேஷம்- பரிணாமாஶ்ரயம் என்பது விசேஷணத்தில் மட்டும். ஸங்கல்பமோ ஸர்வேஶ்வரனுக்கே. விஶிஷ்டமாயிருக்கும் போது விசேஷணத்தில் பரிணாமம். இல்லையேல் பரமாத்மாவுக்கு விகாரங்கள் வந்துவிடும். அதுவும் நாம் கல்பித்தது அல்ல. ஶ்ருதி கூறியபடியே கூறுகின்றோம்.

இவையெல்லாம் முதல் ஶ்லோக வ்யாக்யானத்திலேயே விவரிக்கப்பட்டது. இன்னும் பல இடங்களில் ஆக்ஷேபங்கள் வரும்போதெல்லாம் விவரிக்கப் போகின்றார் ஸ்வாமி ஸ்ரீதேஶிகன்.

லோகத்தில் காணும் மண் குயவன் போன்ற உதாஹரணங்கள் எல்லாம் பரமாத்ம விஷயத்தில் வராது. அதற்கு வேண்டிய காரணங்களையும் ஸூத்ரகாரர் 'परिणामात्' (பரிணாமாத்) என்னும் ஸூத்ரத்தில் கூறப்போகிறார்.

ஆகவே தார்க்கிகர் முதலியவர்கள் கூறும் நிமித்தம் வேறு, உபாதானம் வேறு என்னும் வாதங்கள் சரியானவை அல்ல.

பரமாத்மாவே நிமித்த காரணம், அவனே உபாதான காரணம். இதுவே வேதாந்திகளின் பரம ஸித்தாந்தம். இது மிக அழகாக இந்த ப்ரக்ருத்யதிகரணத்தில் நிலை நாட்டப்பட்டது.

# ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

## இருபத்துமூன்றுவது ஸங்கீர்ண ஸ்தபகம்

*இந்த ஸ்தபகத்தில் முப்பது ச்லோகங்களில் பல்வேறு வகைகளில் (ஒரே தலைப்புக்குள் அடங்காதபடி) தாயாரைத் துதிக்கிறார்.*

**1. அனைத்துக் குணங்களும் அமையப் பெற்றவள்.**

समस्तगुणविस्तार समावेशनिवेशनम् ।
वन्देऽरविन्दनिलयं वरदं परदैवतम् ॥

**ஸமஸ்தகுணவிஸ்தார ஸமாவேஶநிவேஶநம் ।**
**வந்தே<sup></sup>ரவிந்தநிலயம் வரதம் பரதைவதம் ॥**

समस्त-गुण-विस्तार-समावेश-निवेशनं = எல்லா நற்பண்புகளுக்கும் பரந்ததும் சேர்ந்து தங்கக் கூடியதுமான இருப்பிடமானதும்

अरविन्द निलयं = தாமரையை இருப்பிடமாகக் கொண்டதும்

वरदं = வரம் அளிப்பதுமான

पर दैवतं = பரதேவதையை

वन्दे = வணங்குகிறேன்.

தாயாரிடம் எல்லாக் குணங்களும் நிறைய சேர்ந்திருக்கின்றன. தாமரையில் வசிக்கின்ற அவள் நமக்கு வரம் அளிக்கும் பரதேவதை ஆவாள். அவளை நான் வணங்குகிறேன்.

*ஸமஸ்தகுண என்றதன் கருத்து வருமாறு; இது காறும்* லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தில் *காருண்யம் என்ற குணத்துக்காக ஒரு ஸ்தபகமும், ஸௌந்தர்யம் என்ற குணத்துக்காக ஒரு ஸ்தபகமும், பொறுமை என்கிற குணத்துக்காக ஒரு ஸ்தபகமும், ஔதார்யம் (வண்மை) என்கிற குணத்துக்காக ஒரு ஸ்தபகமும், என்றிப்படியெல்லாம் பிரித்துக் கவி பாடி, கிட்டத்தட்ட ஆயிரம் ஶ்லோகங்களை நெருங்கும்போது, இன்னும் ஏராளமான குணங்கள் பாக்கியிருப்பதால், ஒரே ஒரு ஆயிரம் ஶ்லோகங்களுக்குள் அவற்றை லேசாகவேனும் வர்ணிப்பது அசாத்யமாகையால்,*

*எல்லாவற்றையும் சேர்த்து ஒரே ச்லோகத்தில் சொல்வது தவிர வேறு வழி இல்லாததால், எல்லாக் குணங்களையும் ஒருசேர இங்கு கூறுவதற்காகவாம். தவிரவும், அழகு, காந்தி, மென்மை, முதலிய வடிவத்துக் குணங்களும், வாத்ஸல்யம் என்கிற தாயன்பு, ஸௌலப்யம் என்கிற எளிமை, ஸௌசீல்யம் என்கிற நீர்மை, முதலிய ஆத்ம குணங்களும், என்றிவ்வாறாகப் பல வகைகளில் மண்டிக்கிடப்பதைக் கூறுவதற்காகவுமாம்.*

**விஸ்தார** *என்றதன் கருத்து, ஒவ்வொரு நற்பண்பும் கொஞ்ச நஞ்சமாக இல்லாமல், நிறைய அதிகமாக இருக்கின்றன என்பதாம்.*

**ஸமாவேஶ** *என்றதன் கருத்து வருமாறு : உலகில் இந்த நற்பண்புகளைத் தனித் தனியே பலரிடம் காண்கிறோம். ஆனால் இவ்வெல்லா நற்பண்புகளும் ஒரு வ்யக்திக்கே சேர்ந்து வாய்ப்பதில்லை; பிராட்டிக்கோ இவையெல்லாம் ஒன்றுகூடி ஒரே இடத்தில் இருக்கின்றன என்பதாம்.*

**நிவேஶநம்** *என்றதன் கருத்து வருமாறு : மற்றவர்களுக்குச் சில நற்குணங்கள் வந்தேறியதாவோ தாற்காலிகமாகவோ இருக்கலாம்; ஆனால் இந்தப் பரதேவதைக்கு அவ்வாறன்று; அக்குணங்களின் உறைவிடமே இவள் தான்; இங்கிருந்துதான்; இவள் போட்ட பிச்சையால்தான், மற்ற சிலருக்கும் நல்ல குணங்கள் அமைகின்றன என்பதாம்.*

*அரவிந்த நிலயம் என்றதன் கருத்து, எல்லா குணங்களுக்கும் நிலயமான இவளுக்கு அரவிந்தம் நிலயம் ஆகின்றது; ஒன்று ஸமவாயஸம்பந்தத்தால்; இன்னொன்று ஸம்யோக ஸம்பந்தத்தால்; என்ற வேற்றுமையை ரஸிப்பதற்காகவாம்.*

**பரந்த பல பண்புகளின் பதமாவாள் பலன் தருவாள்.**
**பதுமம் வாழ் பரதெய்வம். பணிகின்றேன் அவளை நான்.**

## 2. வைதர்ப்பம் போல் வைகும் மங்கை

औदार्यशेवधिः अनिन्दितकान्तिसिन्धुः
ओजःप्रसादनिधिः उज्ज्वलसौकुमार्या ।
वैदर्भरीतिरिव वारिधिराजकन्ये!
श्लाघापदं भवसि सारविदां कवीनाम् ॥ २

**ஔதார்யஶேவதி: அநிந்திதகாந்திஸிந்து:**
**ஓஜ:ப்ரஸாதநிதி: உஜ்ஜ்வலஸௌகுமார்யா ।**
**வைதர்பரீதிரிவ வாரிதிராஜகந்யே !**
**ஶ்லாகாபதம் பவஸி ஸாரவிதாம் கவீநாம் ॥ 2**

**वारिधिराजकन्ये** = கடலரசனின் கன்னிகையே !

**औदार्यशेवधिः** = ஔதார்யம் என்கிற குணத்தின் பொக்கிஷமானவள்.

**अनिन्दित कान्ति सिन्धुः** = பழிப்பற்ற காந்தி என்னும் குணத்தின் கடலானவள்.

**ओजःप्रसादनिधिः** = அறிவுக்கும் உள்ளவுகப்புக்கும் நிதியானவள்.

**उज्ज्वल सौकुमार्या** = ஒளிரும் மென்மை கொண்டவள்.

**वैदर्भरीतिः इव** = வைதர்ப்பம் என்னும் காவியநடை போல

**सारविदां** = ஸாரத்தை அறிந்த

**कवीनां** = கவிஞர்களுடைய

**श्लाघापदं**= பாராட்டுக்கு இடமாக

**भवसि** = ஆகிருய்.

*ஸமுத்ரராஜனின் மகளே ! ஆலங்காரிகர்கள் காவ்ய ஶைலிகளை வகைப்படுத்தும்போது, வைதர்ப்பீ என்ருெரு நடைக்குப் பெயரிட்டிருக்கிருர்கள். அந்த நடையில் ஔதார்யம், காந்தி, ஓஜஸ், ப்ரஸாதம், ஸௌகுமாரதா, என்ற கலைச் சொற்களை விளக்கி, அவை மலிந்த சைலியை வைதர்ப்பஶைலி என்கிருர்கள். இந்தக் கலைச் சொற்களின் வேருெரு அர்த்தப்படி பார்த்தால் நீ அவற்றைக் கொண்டிருக்கிருய். வள்ளல் தன்மை, வடிவத் தொளி, அறிவளிக்க அருளுதல், மென்மை, இவை*

யாவும்உன்னிடம் உள்ளன. அதனால், ஸாரத்தை அறிந்த கவிஞர்கள் வைதர்ப்பரீதியை ஆதரிப்பது போலவே உன்னையும் ச்லாகிக்கிறார்கள்.

**ஔதார்யம்** என்பது என்ன? எழுத்துக்கோவை விகடமாக அமைந்து, சொல்லமைப்பிலேயே ஆடல் நடைபெறுவது போல அமைந்தால், அந்தச் செய்யுளில் ஔதார்யம் இருப்பதாகச் சொல்வார்கள். கேட்டவர்களுக்கெல்லாம் வாரி வழங்கும் கொடைப்பண்புக்கும் ஔதார்யம் என்று பெயர். முதலாவது அர்த்தத்தில் வைதர்ப்பீரீதியிலும், இரண்டாவது அர்த்தத்தில் மஹாலக்ஷ்மியிடமும் இந்த ஔதார்யம் நிறையக் காணப்படுகிறது.

**காந்தி** என்றால் பளிச்சிடுதல். சொற்கட்டு பளிச் சென்றிருப்பது செய்யுள் நடையில்; வடிவம் பளிச்சென மின்னுவது லக்ஷ்மியிடம்.

**ஓஜஸ்** என்றால் என்ன? கூட்டுச் சொற்கள் நிறையவாகித் தடபுடலாக இருப்பது காவ்யத்தில் ஓஜஸ். உற்பத்தித் திறன் என்பதும் ஜ்ஞானம் என்பதும் லக்ஷ்மியிடம் ஓஜஸ்.

**ப்ரஸாதம்** என்றால் என்ன? எளிதில் அர்த்தம் புரியும்படி சிக்கலில்லாமல் இருப்பது காவியத்தில் ப்ரஸாதம்; அன்பும் மனமலர்ச்சியும் கொண்டு; நன்மைகள் புரியத் தயாராக இருப்பது தாயாரிடம் ப்ரஸாதம்.

**ஸௌகுமார்யம்** என்பது என்ன? உரப்பெழுத்துகளைக் குறைத்து, மிருதுவான அக்ஷரங்களைப் பெரும்பாலும் கையாள்வது காவ்யத்தில் ஸௌகுமார்யம். மென்மை என்பது தாயாரிடம் ஸௌகுமார்யம்.

**ச்லாகாபதம்** என்பதன் கருத்து வருமாறு: நல்ல கவிகள் வைதர்ப்ப ரீதியை ஆதரிப்பது வழக்கம். இதற்கு மாறான கௌடரீதியை ஆதரிப்பதில்லை. இவ்வகையிலும்

வைதர்ப்பரீதிக்கும் லக்ஷ்மீக்கும் இன்னொரு ஒப்புமை கிடைத்துவிட்டது. நல்ல கவிஞர்கள் லக்ஷ்மியைத் துதிக்கிறார்கள் என்பதால், யார் இந்தக் கவிகள் என்றால், லக்ஷ்மீ ஸஹஸ்ரநாமம் அருளிய ஸநத்குமாரர், இந்த்ர க்ருத லக்ஷ்மிஸ்தோத்ரம் எழுதிய பராசரர், கநகதாரா ஸ்தோத்ரம் இயற்றிய ஆதிசங்கரர், சதுஃப்லோகீ இயற்றிய ஆளவந்தார், கத்ய சூர்ணிகை இயற்றிய ராமானுஜர், ஸ்ரீஸ்தவம் இயற்றிய கூரத்தாழ்வான், ஸ்ரீ ஸ்துதி இயற்றிய வேதாந்த தேசிகர், ஸ்ரீ குணரத்ந கோசம் இயற்றிய பராசரபட்டர், இப்போது லக்ஷ்மீ ஸஹஸ்ரம் இயற்றிக் கொண்டிருக்கும் வேங்கடாத்வரி, எல்லாருமே திருமகளைக் கொண்டாடும் கவிகளாம். இந்தக் கவிகளை ஸாரவித் என்றதன் கருத்து என்னவென்றால், உலகில் எத்தனையோ கவிகள், மலையையும் மரத்தையும் மலரையும் மடுவையும் மட்டும் வர்ணித்து நிறுத்திவிடுகிறார்களே, அவர்கள் ஸாரமறியாதவர்கள்; மாறாக மலரவளைப்போற்றும் துதிப்பாடல்களை இயற்றிய கவிகள் ஸாரமறிந்தவர்கள்; ஸம்ஸாரம் அஸாரம் என்றும் வைகுந்தமே ஸாரம் என்றும் அறிந்தவர்கள் என்பதாம்.

**கடலரசன் கன்னிகையாள் காந்தியுடைக் கடலாவாள்.**
**காவியத்து நடைபோல்வாள். கவிஞர் துதிக் கிடமாவாள்.**
**வைப்பாவாள் வண்மைக்கு வையலிலா ஒளியுடையாள்**
**வையத்துக் கவி போற்றும் வைதர்ப்பநடை போல்வாள்.**

---

**3. நாடகக் கலை போல் நாதனோடிருப்பவள்.**

आरम्भमेत्य महनीयममोघयत्ना
प्राप्त्याशया श्रितपदा परमेप्सितस्य ।
नित्यं फलं कलयसे नियताप्तिभाजा
नाथेन नाटककलापरिपाटिकेव ॥ ३

**ஆரம்பமேத்ய மஹநீயமமோகயத்நா**
**ப்ராப்த்யாஶயா ஶ்ரிதபதா பரமேப்ஸிதஸ்ய ।**
**நித்யம் பலம் கலயஸே நியதாப்திபாஜா**
**நாதேந நாடககலாபரிபாடிகேவ ॥ 3**

**परम-ईप्सितस्य** = முக்யக் குறிக்கோளான பரமபதத்தை

**प्राप्ति-आशया** = அடையும் விருப்பத்தால்

**श्रित-पदा** = அடையப்பட்ட திருவடிகளை உடையவள்.

**महनीय** = கொண்டாடத்தக்க

**आरम्भं** = தொடக்கத்தை

**एत्य** = அடைந்து

**अमोघ-यत्ना** = வீணாகாத முயற்சி கொண்டவள்.

**नियत-आप्ति-भाजा** = என்றுமே ஆப்தனான

**नाथेन** = நாதனான பகவானாலே

**नित्यं** = எப்போதுமே

**फलं** = பலனை

**कलयसे** = ஏற்படுத்துகிறாய்

**नाटक=कला=परिपाटिका इव** = நாடகக் கலையின் முறை போல.

*நாட்ய ஶாஸ்த்ரத்தில் ஆரம்பம், யத்நம், பதம், பரமேப்ஸிதம், நியதாப்தி, நாதன், என்பவை கலைச் சொற்கள். இதே பதங்களுக்கு உலகரீதியான அர்த்தங்களும் உண்டு. இதன்படி பார்த்தால் நீ நாடகக் கலையின் ப்ரகாரத்தை ஒத்திருக்கிறாய். தங்கள் உயர்ந்த குறிக்கோள் நிறைவேறுவதற்காக, அல்லது தீவ்ரமனோரதம் கைகூடும் என்கிற நம்பிக்கையோடு, பக்தர்கள் உன் திருவடியை ஆச்ரயிக்கிறார்கள். அவர்களுக்காக நீயும் சிறந்ததொரு தொடக்கத்தைப் பண்ணுகிறாய். உன் முயற்சி என்றுமே வீணாவதில்லை. உன் நாதன் உனக்கு என்றுமே ஆப்தனாக இருப்பதால். நீ என்றுமே பலனைத் தருகிறாய்.*

*ஆரம்பம் என்றால் என்ன? கதாநாயகன் கதாநாயகியிடம் கொள்ளும் காதலின் முதற்படியான ஆவலுக்கு. விளம்பத்தை ஸஹிக்காத தீவ்ர வேட்கைக்கு, ஆரம்பம் என்று பெயராம். இது நாட்ய ஶாஸ்த்ரத்தில் அர்த்தம். உலகியலில் தொடக்கம் என்று அர்த்தம்.*

யத்நம் என்றால் என்ன? நினைத்ததை ஸாதிப்பதற்காக வேகத்துடன் செயல்படுவதற்கு நாட்ய ஶாஸ்த்ரத்தில் ப்ரயத்நம் என்று பெயராம். உலகியலில் முயற்சி என்று அர்த்தம்.

ப்ராப்த்யாஶா என்றால் என்ன? இதுவும் ஒரு கலைச் சொல். இதற்கும் இலக்கணம் கூறும் ஶ்லோகம் ஒன்றுண்டு. அதன்படி தன் காரியம் கைகூடுவதற்கான உபாயங்களையும் அபாயங்களையும் எண்ணி, ஈடேறுவதில் ஸந்தேஹத்துடன் நம்பிக்கை வைப்பதற்கு ப்ராப்த்யாஶா என்று பெயர்.

நியதாப்தி என்பதும் ஒரு பரிபாஷைச் சொல். அபாயம் இனியில்லை; கார்யம் கைகூடும் என்று நிச்சயிப்பதற்கு நியதாப்தி என்று பெயராம்.

நாதன்,பதம், இவை கூடக் கலைச் சொற்களே. நாதன் என்பது நாடகத்தின் கதாநாயகனைக் குறிப்பது. பதம் என்பது அந்தந்த மனோபாவங்களுக்கேற்றபடி, அரங்கத்தில் காலடி வைப்புகளைக் கூறும்.

நாடகபரிபாடியிலும் ஆரம்பம் மஹநீயமாயிருக்கும்; லக்ஷ்மியிடமும் அப்படியே.

நாடகபரிபாடியிலும் யத்நம் அமோகமாயிருக்கும்; லக்ஷ்மியிடமும் அப்படியே.

நாடகபரிபாடியிலும் ப்ராப்த்யாஶையோடு பதந்யாஸம் சேரும்; லக்ஷ்மியிடம் அப்படியே.

நாடகபரிபாடியிலும் நியதாப்தி கொண்ட நாதன் இருப்பான்; லக்ஷ்மியிடம் அப்படியே.

நாடகபரிபாடியிலும் நித்யம் பலன் கிடைக்கும்; லக்ஷ்மியிடம் அப்படியே.

பதங்களின் அர்த்தங்கள் மட்டுமே வேறு. இவ்வாருக, நாடகக் கலை முறையை ஒத்திருக்கிருள் திருமகள்.

**தோன்றுமவா நிறைவேறத் தொண்டர் தொழும் திருவடியாள்.**
**தொடக்கத்தே சிறப்புடையாள். தோலாத முயற்சியினாள்.**
**நாடியதை நிறைவேற்ற நாடிவரும் அடியுடையாள்.**
**நாதன் துணை நிதமுடையாள் நாடகம் போல் முறையுடையாள்.**

—★—


# Beyond Boundaries

TOUR OPERATORS & HOLIDAY MAKERS

Visit **"MUKTINATH",** Nepel under utmost care, Travel arrangements made from Chennai back to Chennai. No night travel in bus and no carrying your luggage. Stay in comfort, travel unhurriedly and visit places with knowledeable escort.
**GROUP DEPARTURE ON MAY 07, 2010.**

**ALL FLIGHTS TOUR** to Mukthinath also arranged - Total **06 days.**

Booking done on **First come first served basis.**

Contact : **V.R. SUDARSAN / SUJATHA SUDARSAN.**

Phone : **65292877,** Telefax :**24529620** Cell : **94440 29644 / 94447 20212**

e:mail:beyondboundaries1@gmail.com *or*
beyondboundaries1@rediffmail.com

Srimathe Ranga Ramanuja Mahadesikaya Namaha:

## WHY THIRUKUDANTHAI IS KNOWN AS "BHASKARA KSHETRAM"

### PART-II-A

*(contd. from oct 09 issue)*

14) On the day of Akshaya Trithiya, Thirukudanthai witnesses 12 Garuda Sevas of Sri Sarangapani and Sri Chakrapani along with the idols of Emperuman from other Koils nearby. Aakshya Trithi falls on 3rd day. Sun and Moon will be in their exalted (ucchem) Rasis namely Mesham and Rishabam respectively. This day is important because in Mahabharatha, it is said that Suriyan Blessed Draupathi with Akshaya Patra to ensure abundance of food during Pandavas exile in forest. Also it is believed that Sri Krishna blessed his friend Sri Kuchela with Prosperity on this Day.

15) Chitrai Ther (chariot) festival is Celebrated during the month of Chitrai when Sun is in its exalted Mesha Rasi with Moon transiting in the Star of Chitrai, the Avatara Star of Chakrathazhwar. On this day Sri Sarangapani with his consorts are Seated in Chitrai Ther as processionsl deities and the chariot is taken out on the main streets. This is very important festival as Ther is the Vahana of Suriyan.

16) On Adi 18th (Pathinettam Peruku) Sri Sarangapani or his Paduka is taken out on Procession to Kaveri River for a ritual connected to this water festival. This is to Show Lords gesture to the Sacred river ''Kaveri' the Outpour of Water from Kamandalam of Sage Agastya who gave us Tamizh Pazhai (Language) a top Status by reason of its Origination from this great Sage. Agastya helped Suriyan Transverse through Vindhya Mountain by Stopping its growth in height by Pressing his Toe. Besides this, Ramayana mentions that Sage Agastya initiated Lord Rama in to the prayer of Suriyan by reciting ""Aditya Hridaya Mantra' before his fight with Ravana. Sage Agastya was blessed by Suriyan with Sandals (Padukas) and Umberlla. Hence this Water festival is important to this

Emperuman who brought back the disappeared'' Tamizh Vedam ""through Sri Natha Muni and hence his gesture to the river Kaveri and Agastya who gave us the Tamil Language.

17) This is the Avatara Sthalam of Sri Lakshmi as "Sri Komalavalli'. Her Sannidhi is facing eastern Direction towards the Sunrise as Thayar is in the Pedestal of Lotus flower which opens its petals upon the Sight of Suriyan who is also said to be holding Lotus in both hands. Thayar here took Penance at potramarai Kulam and made Emperuman come over here to marry her. The Flower of Suriyan is Lotus which is the seat of Thayar here.

18) Suriyan denotes Civilisation, Culture, heritage and ethnical fabric of Society spread all over the World. Hence its temples, its ruins, and monuments dedicated to Sun God function as Cultural Ambassador blended with the annual festivals of dances reflecting their Culture to give an attraction as tourist places. Konarak Sun Temple in Orissa is famous for its Yearly Dance Festivals. Modhera Sun Temle in Gujarat is known for its famous Dance Festivals, besides in Gaya which witness Yearly dance festivals are dedicated to Suriyan. The Same Spirit of dances and festivals according to their respective Culture and Customs are Celebrated in Sun Temples all over the World. Sir Sarangapani temple is closely linked with Cultural part of Suriyan Karakathvam. This Temples first tier of Gopuram has Sculptures depicting the Bharatra Natiya Karanas of al 108 nos Carved with names of respective Karnam inscribed in Tamil Grantha Script under each figure. This reminds us here of Sri Nathamuni who set the Raga, Bhava, Taalam and Abhinayam in dance form for divine Thirivaimozhi owe his credit to the above Sculptures of Karnams Carved in this Temple. Thirumangaiazhwar mentioned affectionately in his Periyathirumozhi Pasurams this lord as ***'குடந்தை தலைக் கோவினைக் குடமாடிய கூத்தனை'*** and as ***'குயிலாலும் வளர்பொழில் சூழ் தண்குடந்தைக் குடமாடி'*** besides Sri Andal also rendered Pasuram in her Nachiyaar Thirumozhi to call this Emperuman as ***'குடந்தைக் கிடந்த குடமாடி.'*** This shows the Significance

of Sculptures of above Karanas carved in the first tier of Gopuram.

19) Maha Kumba Melas are celebrated in Sacred towns along side the holy rivers in north for every 12 years whenver Sun Transit tio Kumbha Raasi in line with Jupiter transited to Simha Raasi on mutual aspects normally occurs once in every 12 years. Similarly Maha Magam, the only Kumba Mela of South India is Celebrated every 12 years at Kumbakonam, the Sacred town when Sun transit to Kumbha Raaasi with Jupiter and Moon are together in Simha Raasi at Maham Star with Mutual aspects. This is very important festival when large people would take bath on holy tanks of Maha Magam Kulam and Pootramarai Kulam Where all the Seven holy rivers are Converged together to have Divine Darshan of Lord Aravamudhan and Komalavalli Thayar. This shows the Suriyan connection to Kumba Mela here known as Maha Makam particularly on this Kshetram.

20) RaIN - BOW: Rain is Caused by the clouds formed out of evaporation of Water by Sun Light from River, Tank, Lake etc. During the rainy days all rain drops Refract and Reflect Sun Light at low altitude angle (Konam) in the same way to fan out in to its Spectral Seven Colors like a Bow (Vil) called "RAINBOW' Periazhwar in his Pasuram of Thitupallandu Mentioned as ***'சார்ங்கமென்னும் வில்லாண்டான்'*** Signifying this Emperuman as Rainbow Sir Andal in her 4th Pasuram of Thiripaavai Connected both Sir Chakrapani and Sir Sarangapani Perumal together being the root Causer of rain by Depicting ***'ஆழிபோல்மின்னி'*** the dazzling discus (Chakram) for the lightning that accompany the abundance of rain without Cessation like Showers of arrows coming forth in Succession from bow like ***'சார்ங்கமுதைத்த சரமழை போல'*** Namazhwar rendered in the Thiruvaimozhi 5th Pasuram as ***'செழுநீர்த் திருக்குடந்தை'*** mentioning this Kshetram is the one gifted with copious water always. Among

the birds connected to Sun (Eagle and Peacock) Peacock is fond of displaying its feathers like a ring and dance upon at the Sight of Rainbow in sky and at the fall of raindrops. Peacock feathers are actually brown. When the Sun light hits the feather in all directions, brilliant 7 colors shimmer and glow in its plumage due to the optical interference phenomenon found in the barbules of the feathers of peacock, thanks to the light from Sun. A Peacock sanctuary is located much closer to Thirukudanthai (at swamimalai). Poolambudankudi and Nachiyarkoil are in this area signigying the importance of Eagle birds.

SIGNIFICANCE OF SURIYAN IN THIRUKUDANTHAI. COPPER is the Metal of Suriyan. Significally to this, Copper and Brass Metal Industries are Concentrated in and around Kumbakonam to manufacture Pure Copper and brass (Copper is 70% Alloyed) wares of exquisite designed Oil lamp, Intricately Carved Panchaloghas idols in large Scale. Kumbakonam is the Main Supplier of Kumbams and temple Statues made out of Pure Copper and Brass besides being famous for its "Kuthuvillaku' exported to many places. Similarly Weaving of Silk Sarees with Zair works designed in the Pattern of "Kuthuvillaku' and "Akalvillaku' are famous Kumbakonam. Being the Kshetram of Suriyan, Kumbakonam is the centre to produce produts which are Symbolically identified with the Source of Light.

BETAL LEAVES - Devaloga Taambulam - "Vetrilai' Which Namazhwar rendered in his Thiruvaimozhi Pasurm as "Unnum Soorum, Parukum Neer, Thinnum Vetrilai Ellam Kannne' is Known Popularly as "Kumbakonam Vetrilai' for its typical Characteristic compared to Other Varieties of "Vetrilai' grown else where. Here it is Unasually Small Shaped Size like Heart, Spicy hot taste, pungent Smell. This typical taste/odour is denoted by Suriyan Karagam. Its dark green Color is attributed to the High Absorption of Sun Light by dense Chloroplasts in the leaves for the Process of Photosynthesis, which requires

more sun light and water, as naturally intensity of Sun light is more at this Bhaskarakshtrem. Betal Leaves of this town are taken to cure diseases arised out of Suriyans Karagathvam like Headache, Constipation and Indigestion etc. and also this acts as a good Stimulant, anti flatulent, Astringent, as a Blood Purifier, and as anti inflammatory agent ect.

*(TO BE CONCLUDED IN NEXT ISSSUE)*

***॥ ஸ்ரீ: ॥***

***ஸ்ரீபத்மாசனி சமேத ஸ்ரீ ஆதிஜெகந்நாத பரப்ரும்மணே நம:***

***ஸகல தோஷ நிவர்த்தியாக நமது பூர்வாசார்யர்கள் காட்டியது ஸ்ரீஆதி ஸேது ஸ்நானம். சேது ஸ்நானத்துக்கு திருப்புல்லாணி வருவோருக்கு ஸேது ஸங்கல்பம், தில ஹோமம், ஸர்ப்ப சாந்தி, சந்தான கோபால ஹோமம் போன்ற அனைத்து தோஷ பரிஹாரங்களும் முன்னோர்கள் கடைப்பிடித்து வந்த மரபுப்படி ஸேதுக்கரையிலேயே சிறந்த முறையில் செய்து தர தொடர்பு கொள்ளவும்.***

***தாஸன்***

**1/14 Southcar St. S.Sridharachar**

**Thirupullani Cell: 9786301599**

**S.N.Narayanan Cell: 9843763313**

॥ ஸ்ரீ: ॥

## ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமம்

**ப்ராத்த கார்யங்கள் செய்ய தொடர்புகொள்ள வேண்டிய முகவரி**

*1.* மும்பை, டோம்பிவில்லி : ஸ்ரீ **N.N. சாரி,**
Sri Balaji Mandir, Srirangam Srimath Andavan Ashramam,
Dombivilli (East), Ph: 0251–2800505, Cell:98920-26329.

*2.* **ஹைதராபாத் ஆச்ரமம் : Manager : 040-32555631,**

*3.* **காஞ்சீபுரம் ப்ராரர்த்தம் –அபரம் :**
**ஸ்ரீ ரங்கராஜ வீதி, சின்ன காஞ்சீபுரம், Manager : 27269347**

***4. திருவஹீந்த்ரபுரம் ஸ்ரீமுஷ்ணம் R. கண்ணன் (எ) சம்பத்***
***1/44, ஆற்றங்கரை வீதி,***
**Phone : 04142–288299, 94865 81536, 97862 53228.**

॥ श्री: ॥

## ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமம் திருப்புல்லாணி.

ஸ்ரீமத் ஆண்டவன் அநுக்ரஹத்தால் **திருப்புல்லாணி**யில் கட்டப்பட்டுள்ள நமது ஆச்ரமம் ஸேது யாத்ரையாக வரும் ஸேவார்த்திகளின் ஸௌகர்யத்தையே ப்ரதானமாகக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. சுப முஹூர்த்தங்கள் செய்யுமளவுக்கு விசாலமான **ஹால்**கள், பெரிய அறைகள், பெரிய திருமடைப்பள்ளி, எல்லா உபயோகங்களுக்கும் சுவையான தீர்த்தம் எனப் பல வஸதிகளுடன் உள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

***ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமம்,***
***1/138-140, தெற்கு ரத வீதி, திருப்புல்லாணி - 623 532.***
**Ph : 04567 - 254247.** ***மானேஜர் ஸ்ரீதர் : 99437 84885.***

# வருந்துகிறோம்

நம் சென்னை ஆச்ரமத்தில் அலுவலகத்தில், நம் *''ஸ்ரீரங்கநாத பாதுகா''* பத்ரிகையில் அலுவலக மேலாளராக இருந்த ஸ்ரீமான் தில்லையம்பூர் நரஸிம்ஹன் 24.12.2009 அன்று ஆசார்யன் திருவடிகளை அடைந்தார். எதிர்பாராதவிதமாக இரண்டுநாள் ஜ்வரத்துடன் இருந்தவர். ஐம்பத்தி ஆறும் வயதிலேயே இப்படி திடீரென மறைந்துவிட்டது ஆச்ரமத்தில் அனைவர்க்கும் பெரும் துயரத்தைத் தந்தது. ஆச்ரமத்தின் பெருமாள் மர்யாதையைச் சாற்றி இந்த ஸ்வாமிக்கு சரம கைங்கர்யம் நடந்தது. ஸ்ரீமத் ஆண்டவன் நியமிக்கும் எந்த கைங்கர்யத்தையும் பய பக்தியுடன் சிரமேற்கொண்டு செய்வார். இவர் வைகுண்டவாஸி குங்குமம் வரதாசார்யரின் ஜாமாதா. குங்குமம் வரதாசார்யரின் வம்சாவளியினர் அனைவரும் ஆச்ரமத்தில் அத்யந்த அந்தரங்கப் பணி செய்து வருபவர்கள் என்பது யாவரும் அறிந்ததே. அவ்வனைவர்க்கும் நம் பாதுகை பத்ரிகையின் சார்பில் இந்த ஸ்வாமியின் மறைவிற்கு நம் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

—*ஸம்பாதகர்*

---

दृष्टं किमपि लोकेऽस्मिन् न निर्दोषं न निर्गुणम्।

*குற்றமற்றதும், குணமற்றதும் இவ்வுலகில் காண்பதற்கரியது.*